www.tamilarangam.net

# கல்லறைப் பூக்கள்

(சிறுகதைத் தொகுப்பு)



வ. சிவராசா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லறைப் பூக்கள்

(சிறுகதைத் தொகுதி)

வ.சிவராசா

குமரன் பப்ளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வடபழநி, சென்னை–600 026.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு : 2001
விலை ரூ : 40:00
©


| | | |
|---|---|---|
| ☞ | Title | : KALLARAIP POOKKAL |
| ☞ | Subject | : A Collection of Short Stories |
| ☞ | Author | : V.Sivarasa<br>Angertaler Str 98,<br>47249, Duis Burg<br>Germany.<br>Tel: 0203 - 706480 |
| ☞ | No. of Pages | : II + 138 |
| ☞ | Type | : 10.5 pt |
| ☞ | Size | : 12.5 × 18 cm |
| ☞ | Paper | : 11.6 kg Cream Wove |
| ☞ | Binding | : Art Board |
| ☞ | Price | : Rs. **40.00** |
| ☞ | Publishers | : Kumaran Publishers,<br>3, Meigai Vinayagar Street,<br>Vadapalani, Chennai-600 026. |
| ☞ | Typeset | : Siva Graphics, Chennai-24. Ph: 4730810 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரையாக சில குறிப்புகள்

நூலாசரியர் திரு.சிவராசா 17 ஆண்டுகளாக ஜெர்மனியில் வாழ்ந்து வருபவர். ஆயினும் பிறந்த 'மண்'ணை அவர் மறக்கவில்லை. அதை நினைவூட்டப் போலும் 'மண்' எனற சஞ்சிகையை நீண்ட காலமாக ஜெர்மனியிலிருந்தே நடத்தி வருகிறார். அந்த மண் வேறு எந்த நாட்டு மண்ணுமல்ல. தமிழ் மண். யாழ்ப்பாணத்து மண். தமிழீழத்து மண். அந்த மண் வளத்தைப் பிரதிபலிப்பதாகவே இந்நூலிலுள்ள கதைகள் அமைந்துள்ளதைக் காணலாம். மண்வளம் என்னும் போது அங்கு வாழ்ந்த மக்கள், இன்றும் வாழ்பவர். புலம் பெயர்ந்து வாழ்பவர் எல்லோரையும் கதைகளிற் கற்கலாம்.

ஆசிரியரே 'என்னுரை'யில் தன் கதைகளில் கூறியவை, சொல்ல விரும்பியவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுவார்:

"இச்சிறுகதைகளில் புலம் பெயர்ந்த மக்களின், ஈழத்தில் வசிக்கும் மக்களின் பல சமூகப் பிரச்சினைகளையும்... சாதி, மதம், மொழி, பெண் அடிமை, ஆணாதிக்கம், பொதுவுடமை, அடிமைத்தனம், இன முரண்பாடு, சமூகக் கொடுமைகள், அரசியல் வேறுபாடுகள் போன்ற பல விடயங்களை... எழுதியுள்ளேன்."

இந்நூலிலுள்ள 50 கதைகள் சிறுகதை இலக்கியத்திற்குரிய இலக்கணங்களைக் கொண்டுள்ளனவா என்ற வினாவை திரு.குணசீலன் தன் வாழ்த்துரையில் எழுப்பியுள்ளார். அப்போது இவற்றைச் சின்னச் சின்னக் கதைகள் குட்டிக் கதைகள், நீதிக் கதைகள் என்று அழைப்பதா என்ற கேள்வியும் எழுகிறது. சிறுகதை என்பதற்கு தக்க இலக்கணம் வகுக்காத போதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலும் 'சிறுகதைகள்' என்ற பெயருடன் புதுமைப்பித்தன், குபரா, அழகிரிசாமி, கல்கி போன்ற எழுத்தாளர், பிற சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைகளில் இன்று வெளிவருபவற்றிற்கும் இக்கதைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன என்பதை எளிதில் காணலாம்.

இக்கதைகள் யாவும் சராசரியாக இரண்டு பக்கத்திலேயே அடங்குகின்றன; 200-300 வார்த்தைகளையும் கொண்டுள்ளன. கதை மாந்தரின் முரண்பட்ட உரையாடல், அவர்கள் மூலம் வர்ணனை, விரிவுரை, கதைக்கூற்று இல்லாது ஆசிரியரே கதைகளைக் கூறிவிடுகிறார். குட்டிக் கதைகளில் ஆசிரியரே பல கதை மாந்தரைக் கொணர்ந்து அவர்களின் குணாம்சங்களைக் கூறிவிடுகிறார். இப்படியாக மரபுச் சிறுகதையாகியுள்ளவற்றிற்கும் இக்கதைகளுக்குமுள்ள வேறுபாடுகளைக் காணலாம். இவை உருவம் பற்றிய வேறுபாடுகளே. உள்ளடக்கத்தில் கதைகள் வேகமாக ஓடுகின்றன. ஆசிரியர் கூற விரும்பிய கருத்துகளை விரைவில் அழுத்தமாகக் கூறிவிடுகிறார். மேலே ஆரம்பத்தில் கூறியவற்றையே நினைவூட்டுகிறேன்.

முதலாளித்துவம் சிருட்டித்த வேகத்திற்கே சிறுகதைகள் தோன்றியது என்பர். அதன் அவசர வேகத்தையும் கதைகளில் காணலாம்.

ஆசிரியரின் சமுதாய உணர்வு, வேகமான மாற்றங்களை விரும்பும் எண்ணங்களையும் அவரது அரசியல், பொருளாதார, பண்பாடு பற்றிய நோக்கங்களையும் இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்ட கதைகளில் காணலாம். கதைகளை வேகமாகப் படிக்கலாம். இவை நூலாக வெளிவரும் போதே எளிதாக மதிப்பிட முடிகிறது. அவசர உலகின் கதைகள். ஆசிரியரின் முயற்சிக்குப் பாராட்டுக்கள்.

சென்னை
14.04.2001

**செ.கணேசலிங்கன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமர்ப்பணம்!....

என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய
பெற்றோருக்கும், எனக்குக் கல்விச் செல்வம்
தந்த ஆசிரியர் பெருந்தகைகளுக்கும்
என் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த
தாய், தந்தை, சகோதர சகோதரிகளுக்கும் மண்ணின்
விடுதலைக்காக மடிந்த விடுதலைப் போராளிகளுக்கும்
விடுதலைப் போராட்டத்தில் மடிந்த
நேசத்திற்குரிய மக்களுக்காகவும்

இந்த இதழைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2001ஆம் ஆண்டு நான் பத்திரிகைத் துறையில் 25ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளேன். இந்த 25 ஆண்டுகளில் எம் இனத்திற்குப் பெரிய அளவில் சேவை செய்யாவிடினும் என்னால் ஆன சில சேவைகளை எழுத்துமூலமும், சமூகப்பணி மூலமும் செய்துள்ளேன் என்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். இச் சிறுகதைத் தொகுப்பில் எனது 25 வருட பத்திரிகை வாழ்வை முன்னிட்டு 50 சிறு கதைகளை எழுதியுள்ளேன். இது இங்கு வெளியீடாக வெளிவந்துள்ளன. நீங்கள் இதைப் படித்து விட்டு விமர்சனங்களை எழுதுங்கள். உங்கள் விமர்சனங்களே, என் போன்ற எழுத்தாளர்களை மேலும் பலவிடயங்களை எழுதத் தூண்டும்.

அடுத்து இந்த வெளியீட்டின் மூலம் கிடைக்கும் பணத்தில் ஒருபகுதி ஈழத்தில் அவதியுறும் அநாதை, அங்கவீனர், அகதி, நிலையங்களுக்கு நேரடியாக அனுப்பும் நோக்கத்தைக் கொண்டுள்ளேன். எனவே கலை இலக்கிய நண்பர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் யாவரும் ஒத்துழைப்பு வழங்குவீர்களென நம்புகிறேன். அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு என்னோடு வாழும் மனைவி, பிள்ளைகளுக்கும் இனிய வந்தனங்கள்!

**வாழ்க தமிழினம்! வளர்க தமிழ் மொழி!**

1-4-2001
ஜெர்மனி

என்றும் அன்புடன்
**வ.சிவராசா**
நூல் ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அணிந்துரை

தாங்கள் எழுதிய ஐம்பது சிறுகதைகளை ஒரு சிறுகதைத் தொகுதியாக நூல் உருவில் அச்சிட்டு வெளியிடுவதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றேன். தமிழ் ஈழத்தாயக மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் தஞ்சம் அடைந்து, அங்கிருந்து கொண்டு தன் தொழிலையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ளும் அதே வேளையில் தமிழ், வாழ, தமிழ் வளர, தமிழை மறவாதிருக்க, நம் தாய் மொழி மறையாதிருக்க நெஞ்சத்தில் நினைத்திருக்க நீங்கள் செய்து வருகின்ற இலக்கியப்பணி போற்றுவதற்கும், மெச்சுவதற்கும் உரியதாகும்.

தங்களின் இச்சிறுகதை வெளியீட்டுக்கு எனது அணிந்துரையை வழங்குவதில் சந்தோசப்படுகின்றேன். என்னைப் பெருமைப் படுத்தினீர்கள். சிறப்பித்தீர்கள். இதற்காக எனது நன்றியறிதலையும் தெரிவிக்கின்றேன்.

தங்களின் தமிழ் வளர்ச்சிப்பணி, தமிழ் இலக்கியப்பணி, சமூகப்பணி, ஆகியவற்றை உலகத்தமிழர்கள் நன்கறிவர், விடாமுயற்சி, சகிப்புத்தன்மை, கூட்டுறவு, நல்ல நண்பர்களின் இணக்கம், சாதுர்யமான செயற்திறன் ஆகியன உங்கள் வெற்றிக்கும் கீர்த்திக்கும் உடனிருந்து உதவுகின்றன என்றால் அது மிகையாகாது.

தங்களுடைய தமிழ் இலக்கிய முயற்சிகள், தமிழ் அன்னைக்குச் செய்யும் அர்ச்சனையாகும், இச்சிறுகதை வெளியீடானது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தாங்கள் ஆற்றும் பங்களிப்பாகும்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

"எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்."

ஆகிய குறள்கள் தங்களுக்குப் பொருந்துகின்றன. தாங்கள் நீடூழிவாழ்ந்து மேலும் மேலும் பலப்பல இலக்கியப்பணிகளைச் செய்து, அநேக சாதனைகளைப் படைத்து, சித்திகள் பெற்று, கீர்த்தியுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இலங்கை
1-4-2001

அன்புடன்.
**சீ.த. மார்க்கண்டு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்த்துரை

தங்களைத் தாயகத்தில் ஆதரவு தேடும் குழந்தைகளுக்கு உதவும் தமிழீழ உடன் பிறப்பாக—தமிழை தமிழ்க் கலாச்சாரத்தை மறவாது ஜேர்மனி மண்ணிலே பத்தாண்டுகளுக்கு மேலாக "மண்" என்னும் கலை இலக்கிய சமுக இருமாத இதழினை நடாத்தி வரும் இதழாசிரியனாக—இனங்கண்டு தங்களின் தாயகப்பணியும் தமிழ்ப் பணியும் சிறக்க பல்லாண்டுகளை நிறைக்க இறைவனடி வேண்டி நிற்கின்றேன்.

உங்களின் முதற்பணிக்கும் உங்களின் இரண்டாவது பணிக்கும் இடை நெருங்கிய தொடர்பு உண்டு. முதற்பணியில் தர்மம் என்னும் உன்னதமான விழுமியம் உங்களின் உணர்வாகி உங்களை இயக்குகின்றது. அந்த தர்மம் என்னும் உன்னதம் எழுத்தில் வெளிப்படும் பொழுது உள்ளதை உள்ளபடி எழுதுதல் என்னும் சத்திய தரிசனமாக மாறும். இந்த இரண்டு இலட்சியங்கள் தொடர்பாகவும் உங்களது கருத்துக்களை உங்களின் உறவுகளைச் சுமக்கும் ஊடகமாகத் தமிழ் மாறும் பொழுது நீங்கள் படைப்பாளியாகின்றீர்கள். உங்கள் பணி உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டும் என்னும் யதார்த்தத் தன்மையுள்ள மண் என்னும் சஞ்சிகையாக மாதமிருமுறை மலர்கின்றது.

இந்நேரத்தில் தர்மம் என்றால் என்ன? சத்திய தரிசனம் என்றால் என்ன? என்று எடுத்து நோக்குவது உங்களின் படைப்பாக்கப் பணிகளை புரிந்து கொள்ள உதவும்.

முதலில் தர்மத்தை எடுப்போம். எந்தத் தெய்வசக்தியானது அல்லது கொள்கையானது மக்களை இகத்திலும் பரத்திலும் அழிவுறாமல் தாங்குகின்றதோ—காத்து உதவுகின்றதோ அது தர்மம் என்று மகாபாரதம் கூறுகின்றது. அவ்வகையில் மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துன்பங்களைத் துடைத்திட உழைத்திடும் தர்மத்தைச் செய்வதை உங்களின் இலட்சியமாகக் கொண்டு செயல்படுகின்றீர்கள்.

அடுத்தது சத்தியம் என்றால் என்னவென்று பார்ப்போம். என்றும் உள்ளது சத்தியம், எதனை மறைக்க முடியாதோ அது சத்தியம். உள்ளதை உள்ளபடி கூறும்பொழுது எழுதும் பொழுது அது சத்தியம். அந்த சத்தியாவேசத்துத்துடன் ஒன்றைப் பார்க்கும் பொழுது அது சத்தியதரிசனம். அதனைச் செய்யும் ஆற்றல் உள்ளவன் ஆற்றலுள்ள படைப்பாளி. இந்த வகையில் தான் உங்களின் எழுத்துக்களால் உங்களை என்னால் இனங்காண முடிக்கின்றது.

நீங்கள் ஒரு துணிச்சல் உள்ள எழுத்தாளர். எதற்காக இப்படி நான் கூறுகின்றேன் என்றால் முன்னுக்குப் பின்னுக்கு தெரியாத என்னை எனது எழுத்தால் நீங்கள் இனங்கண்டு என்னிடம் உங்கள் சிறுகதைத் தொகுதியின் கையெழுத்துப் பிரதியையும் மண் சஞ்சிகையையும் அனுப்பி மதிப்புரை தருக என்று கேட்கும் துணிவு உங்களிடம் இருப்பது உங்கள் எழுத்துக்களின் மேல் உங்களுக்கு உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. இந்தத் துணிவுள்ள படைப்பாளி நிச்சயமாகச் சத்திய எழுத்துக்களை வடிக்கும் வல்லமையையும் இயல்பாக வெளிப்படுத்துவார். என்ற நம்பிக்கை என்னுள் எழுந்தது. இந்த உண்மையை உங்களின் 10 சிறுகதைகளையும் படித்தபொழுது என்னால் உணரவும் முடிந்தது.

முதலாவது சிறுகதை கல்லறைப் பூக்கள் சிவா, புஸ்பா என்னும் இரு இள உள்ளங்களில் உருவாகிய காதல் தேசவிடுதலைக்கு எருவாகிய சம்பவம் ஒன்றினை எடுத்து விளக்குகின்றது.

இரண்டாவது சிறுகதை தியாகதீபம் பலகாலம் கஷ்டப்பட்டுப் படித்துப் பதவிபெற்று ஒரு பெண்ணை திருமணம் செய்து ஒரு குழந்தைக்கும் தந்தையாகிய நிலையில் வரதனுக்குச் சிறுநீரகங்கள் செயலிழந்து போகும் தன்மை மருத்துவர்களால் கண்டறியப் படுகின்றது. இந்நேரத்தில் அவனின் மனைவி அற்புதராணி தன் சிறுநீரகத்தை அவனுக்குச் சத்திரசிகிச்சை மூலம் பொருந்தச் செய்து வாழ்வளிக்கின்றாள். இதன் மூலம் கணவன் மனைவிக்கு

www.tamilarangam.net



இடையே உள்ள அந்நியோன்னிய உறவின் ஆழம் அன்பின் வெளிப்பாடு பதிவாக்கப்படுகின்றது.

மூன்றாவது சிறுகதை கோவில் சைவ பாரம்பரியத்தில் தன்னை நிலைப்படுத்தி மற்றவர்களைப் பலப்படுத்தி வாழ்ந்து வந்த மீரா வெளிநாடு வந்ததும் கோவில் இல்லா நிலையில் கிறிஸ்துவக் கோவிலுக்குச் சென்று கிறிஸ்துவ மதத்திற்கு மாறி அதனால் குடும்பத்தில் சிக்கல் உருவாகுவதை விவரிக்கிறது. இந்தப் புலம்பெயர் நாட்டுத் தமிழர்களின் சமகாலப்பிரச்சனை ஒன்றைச் சித்தரிக்கும் இந்தச் சிறுகதை சைவத்தில் சித்தாந்த நிலையில் ஆழமானவர்களாக அல்லாது வழிபாட்டு நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பழக்கப்பட்ட தமிழ் மக்களின் தளம்பல் நிலைத்தன்மை வெளிப்படுத்தி இனியாவது சைவத்தை சைவமாக இளையவர்களுக்கு எடுத்தியம்பவேண்டிய தேவையை எடுத்து விளக்குகின்றது.

பாதிவழி சிறுகதை பாரிய இடப்பெயர்வின் பொழுது பயணப் பட்ட மக்களின் துன்ப துயரங்களின் தன்மைகளையும் அதற்குச் சிகரம் வைத்தாற்போல் பத்து வருடம் தவமிருந்து பெற்ற தம் குழந்தையைக் காய்ச்சலுக்குப் பறிகொடுத்துத் தவிக்கும் சதீஸ்வரன் சரஸ்வதி தம்பதிகளின் பரிதாபத்தையும் கதை படம்பிடித்துக் காட்டுகின்றது.

நன்றிக்கடன் என்னும் சிறுகதை கந்தசாமி தான் பாடுபட்டு உழைத்துத் தன்தம்பியின் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு வர உதவியதையும் அவர்கள் தங்களை வெளிநாட்டில் நிலைப் படுத்தியதும் சித்தப்பாவை மறந்து உறவு கூட இன்றி வாழ்வதையும் சித்தரிக்கின்றது. உண்மையில் இந்தக் கதை மூலம் ஆசிரியர் புலம்பெயர் தமிழர்கள் இடையே உள்ள மற்றொரு சமகால மனோவேதனை ஒன்றை வெளிப்படுத்துகின்றார். இது குறித்த விரிவான பார்வைகள் தேவை என்பதை கதை வலியுறுத்துகின்றது.

மரியாதைக்குரியவன் என்னும் அடுத்த சிறுகதை தாயகத்தில் பொதுநல உணர்வுடன் செயற்பட்ட குமரன் வெளிநாட்டில் பாடசாலை நிறுவி பணியாற்ற முயல்வதையும் அதனை வெளிநாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரை தொடரும் சாதி சமய பிரதேச உணர்வுகளின் எச்ச சொச்சங்கள் தடுப்பதினால் அவன் அடையும் துன்பங்களையும் எடுத்து விளக்குகின்றது. இது ஒரு வகையில் தமிழர்களின் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் கதையாக உள்ளது.

பரதம் சிறுகதை பரதநாட்டியம் பழக்க அரங்கேற்ற என புலம்பெயர் நாடுகளில் செய்யப்படும் வீணான செலவுகளையும் அதன் சம்பந்தமான சமூகப்பிரச்சனைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

பாடசாலை ஒன்றில் பாரிய இடப்பெயர்வின் பின்னர் கல்வியினை வழங்கவும் பெறவும் துடித்த மாணவர்களும் ஆசிரியரும் சிறீலங்கா இராணுவவெறித்தனத்திற்குப் பலியான வரலாற்றை வரைகின்றது. இதுவும் ஒரு தாயக நிகழ்வின் பதிவு என்றே கூறலாம்.

அப்பா வேலைக்கு போகின்றார் என்னும் கதை புலம்பெயர் வாழ்விலும் தமிழீழப் பெண்கள் மேல் ஆணாதிக்கம் அரசு ஓச்சுவதையும் அதனைத் தனது பொறுமையின் மூலம் தங்கம் என்னும் குடும்பத்தலைவி வெல்லுவதையும் எடுத்துக் காட்டுகின்றது.

எலும்புக்கூடு சிறுகதை பாரிய இடப்பெயர்வின் மூலம் பிரிய முடியாது பிரிந்த தன் வயோதிகத் தந்தை உணவின்றி நீரின்றி படுத்த கட்டிலில் பிணமாகத் திரும்பி வந்த மகள் ஒருத்தி கண்டு துடிக்கும் துயரத்தைக் கதையாக்குகின்றது.

இவ்வாறாக ஒவ்வொரு சிறுகதையும் சமகால சம்பவங்களின் இலக்கியப்பதிவுகளாகவும் ஆசிரியரின் சமூக உணர்வின் எழுத்து வடிவங்களாகவும் திகழ்ந்து தமிழ் மக்களின் சிந்தனைக்கு வழி கோலி அவர்கள் நிந்தனைகள் போக்க வழிகாட்டுகின்றது. ஆசிரியரின் தர்ம சிந்தையும் சத்திய வேட்கையும் பணிகளாகவும் படைப்புகளாகவும் சிறக்க வாழ்த்தி இறைவனை வணங்கி விடைபெறுகின்றேன்.

**அன்பின்**

**நீற்றா பற்றிமாகரன் 1.4.2001**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்த்துரை

ஈழத்தமிழ்ச்சமூகத்தில் பொதுவாகவும், யாழ்ப்பாணத் தமிழ்ச்சமூகத்தில் சிறப்பாகவும் புரையோடிப்போயிருக்கின்ற சமூக அழுக்குகளை இத்தொகுதியில் உ ள்ள சின்னச் சின்னச் சிறு கதைகளின் மூலம் கதாசிரியர் வ. சிவராசா எமக்குச் சொல்லி இருக்கின்றார். இந்தச் சிறுகதைத் தொகுதியில் கதாசிரியர் கையாண்டுள்ள கருக்கள் எமது தமிழ்ச் சமூகத்தின், சம வாழ்வியல் யதார்த்தங்களைக் கொண்டவையாக உள்ளன. தாயகம், புகலிடம், தாயகமும் புகலிடமும் என்ற களங்களை அடிப்படையாகக் கொண்டு இச் சிறுகதைகள் படைக்கப் பட்டுள்ளன.

வாழ்வில் இணையமுடியாவிட்டாலும் மரணத்தில் சங்க மித்த இரு இளம் போராளிகளின் வீர மரணத்தைச் சொல்லும் கதையாக 'கல்லறைப் பூக்கள்' உள்ளது. பெண்களின் வாழ்க்கை என்பது தியாகங்கள் நிறைந்தது. அந்த வகையில் ஒரு பெண் தனது சிறுநீரகத்தினைக் கணவனுக்கு வழங்கி அவனுக்கு வாழ்வளிக்கும் தியாகத்தினைத் 'தியாக தீபம்' கூறுகின்றது. 'ஜோதி'யைப் படிக்கும்போது படையினரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட கிரிசாந்திதான் எமக்குமுன் தோன்றுகிறாள். போர்ச்சூழல் ஒன்றில் ஒரு பெண் எதிர்நோக்குகின்ற அதி உச்ச வன்முறையை 'ஜோதி'யின் மூலம் ஆசிரியர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

'நாட்டின் இத்தனை அவலங்கள், துன்பங்களுக்கு மத்தியிலும், சமூகத்தின் மனம் மாறவில்லை. அனேகரின் மனங்கள் ஊனமாகத்தான் உள்ளன. என்ற கதாசிரியரின் வார்த்தைகள் சமூகம் குறித்து அவர் கொண்டுள்ள பார்வையை எமக்குச் சொல்லுவதுடன் சமூக அக்கறை என்பதையும் காட்டுகின்றது. 'அப்பா வேலைக்குப் போகின்றார்.' அப்பாதான் வேலைக்குப் போகின்றார் என்ற சிறுகதை ஒரு குடும்ப பெண்ணின் அன்றாட வாழ்க்கைச் சுமையைச் சொல்கின்றது. அப்பாதான் வேலைக்குப் போகிறார். அம்மா வீட்டில் சும்மா இருக்கின்றார் என எல்லா அப்பாக்களும் சொல்லும் படலத்தை இனிமேல் சொல்லாதுங்கோ' என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'தங்கம்' சொல்வது. தமிழ்க் குடும்பச் சூழலில் நிலவும் ஒரு உண்மையாக உள்ளது. இக் கதையின் தலைப்பு ஆண் சார்ந்ததாக இருக்கின்ற போதும் கதையின் கரு பெண் சார்ந்ததாக இருப்பது ஆசிரியர் இக் கதையைச் சொல்லக் கையாண்டுள்ள ஒரு புதிய யுக்தியாகும்.

வாழ்க்கை என்கின்ற நாடகத்தில் ஒரு பெண் வாழ்நாளில் பல பாத்திரங்களை வகிக்கின்றாள். ஒரு பெண் சம காலத்தில் தாயாகவும், மாமியாராகவும் பாத்திரமேற்க வேண்டி உள்ளது. இந்த இரு பாத்திரங்களும் எந்தளவிற்கு வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் கொண்டுள்ளன என்பதைத் 'தெளிவு' என்ற சிறுகதையின் மூலம் படைப்பாளி தெளிவு படுத்தி யுள்ளார். அதேவேளை இக் கதையின் முடிவானது தாய்மீது எமது சமூகம் கொண்டுள்ள உன்னதமான அன்பையும், உயர்ந்த நம்பிக்கையையும் காட்டுவதாக உள்ளது.

சமூகப் போராளியான 'குமரன்' என்ற பாத்திரத்தின் மூலம் புலம் பெயர்ந்த எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக அநீதிகளைக் கதாசிரியர் வ. சிவராசா கச்சிதமாகச் சொல்லிச் செல்கின்றார். '.........காலம் ஓடியது. நம்மவர்களிடம் பணம் கூடியது. போக்குகள் மாறியது. ஒற்றுமை குறைந்தது குலம். கோத்திரம், பிரதேச வேறுபாடு. அரசியல் வேறுபாடு. இயக்க வேறுபாடு என வளர்ந்தது. கட்டி வளர்த்த ஒன்றியமும் உடைந்து சிதறியது பாடசாலைகளும் மூடப்பட்டன. சில பாடசாலைகளை இயக்கம் எடுத்துக் கொண்டது. மக்களும் காற்றடிக்கும் பக்கத்திற்குச் சாய்ந்தனர். நண்பர்களாகவும், உறவினர்களாகவும் வாழ்ந்த குடும்பங்கள் எதிரிகளாகவும், துரோகிகளாகவும் மாறின. மாறச் சிலர் தூண்டினர்...இங்கு புகலிடத் தமிழர்கள் மத்தியில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலையை மிகவும் சிறப்பாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் இளம் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை 'வாலிபம்' கூறுகின்றது. தத்தெடுக்கப்பட்ட சிறார்கள் மீண்டும் தாயக யுத்தபூமிக்குப் போன கதையையும், ஒரு சந்ததி இடைவெளியையும் 'ஸ்ரெவ்வானி' குறிப்பிடு கின்றது.

www.tamilarangam.net



தமிழ்ச்சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமான உரிமைகள், சமூக அந்தஸ்து போன்றவை சமமாக இல்லை என்பதை 'மறுமணம்' என்ற கதையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். போராட்டத்தில் மரணித்த கரன். மரணித்தும் மாவீரனாகப் போற்றப்படுகின்றான். ஆனால் கரனை இழந்து ஒரு குழந்தைக்குத் தாயாக நிற்கும் வதனா, சமூகத்தினால் ஒதுக்கப் படுகின்றாள். மரணித்த ஒரு ஆணுக்குக் கொடுக்கின்ற மரியாதையை, வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு பெண்ணுக்குக் கொடுக்க சமூகம் தயாராக இல்லை. மறுபக்கத்தில் விடுதலைக்காகப் போராடும் தாயக சமூகம், மறுமணத்தை ஏற்கத் தயாராக இல்லை. ஆனால் புகலிடத்தில் வாழ்கின்ற ஒரு இளைஞன் வதனாவை மறுமணம் செய்ய முன் வருகின்றான். இது புகலிடச்சமூகத்தில் எமது வரட்டு மரபுகள் சிதைவதைக் காட்டுவதாக உள்ளது.

இச் சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கதைகள், சிறுகதை இலக்கியம் ஒன்றிற்கு உரிய இலட்சணங்களைக் கொண்டுள்ளனவா? என்ற கேள்வி எழுவது நியாயமானதுதான். அத்தோடு சில இடங்களில் பெண்ணியம் தொடர்பான ஆசிரியரின் கருத்துக்களும் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகவே உள்ளன. எனினும் சிறுகதை மரபுகள், வரைவிலக்கணங்கள் என்பனவற்றிற்கு அப்பால், தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற சமூக அநீதிகள், சமூக விரோதங்கள் என்பனவற்றை ஏதோ ஒரு வடிவில் ஆசிரியர் வெளிக்கொணர்ந்து இருப்பது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். இந்த வகையில் மண் சஞ்சிகையின் ஆசிரியர் வ.சிவராசாவின் இந்த முயற்சி புலம்பெயர் சூழலில் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்று அல்ல.

ஜயந்திமாலா குணசீலன்,
சுவிற்சர்லாந்து.
T.B.C. ஐரோப்பிய வானொலிச்
செய்தியாளர்.
01.04.2001

www.tamilarangam.net



# வாழ்த்துச் செய்தி

வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் "மண்" ஆசிரியர்-தமிழ் இனத்தின் மீது அளவற்ற பற்றும் மனிதநேயமும் கொண்ட ஆசிரியர்-கல்லறைப் பூக்கள் என்னும் நூல் வெளியிடு வதையிட்டு மிகவும் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு குடும்பக்கதையை பிரதிபலிப்பது போல் இருக்கின்றது. உண்மையை என்றும் மறைக்க முடியாது. அதுபோல நமது மண் திருந்தி வாழ இக்கதைகள், இந்நூல் மக்களுக்கு நல்ல பயன் உள்ள கருத்துக்களை கூறுகின்றது.

ஈழத்திலும், வெளிநாடுகளிலும் எம்மக்கள் மனித நேயத்தோடு நடந்துகொள்வதில்லை. இருக்கும் போது உதவி செய்ய மாட்டார், இறந்த பின்பு போட்டோவுக்கு மாலை மரியாதை செய்கிறார்கள். இந்த நடைமுறையைத் தவிர்த்து உயிருடன் இருக்கும் பொழுதே உறவினர்களுக்கு கொடுத்து உதவிபுரிந்து வருங்கால சந்ததிக்கும் நல்ல பண்புகளைப் புகட்ட வேண்டும். ஆகவே நாளைய சமுதாயம் கற்க வேண்டிய பாடம் இந்த நூலை எழுதிய ஆசிரியர் தான் கொண்ட முயற்சியில் வெற்றிபெற்றார் என்றே கூறவேண்டும்.

அனைத்துக் கதைகளைச் சீர்தூக்கி பார்த்தால் ஒவ்வொரு கதையும் தமிழ்ச்சமுதாயத்துக்கு ஏதோ ஒரு நல்ல செய்தியை சொல்லி நல்வழிகாட்டுகின்றன. காதல்கதை ஒரு ஆணையும் பெண்ணையும் இலகுவாகக் கதை புனைந்துவிடலாம். ஆனால் தமிழ்ச்சமுதாயம் முன்னேற வேண்டும் என்றும் நல்வழியில் நடக்க வேண்டும் என்றும் சிந்திப்பவர் சிலரே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தச் சிலரில் இந்த இதழ் ஆசிரியர் போற்றப்பட வேண்டியவர்.

வ. சிவராசா தனது எழுத்துலக வாழ்க்கையில் 25 ஆண்டுகள் நிறைவுபெறும் இக்கால கட்டத்தில் கல்லறைப் பூக்கள் ஒரு நூலுருவில் வருவது சாலச்சிறந்தது. இலங்கையில் அநாதைகள், அகதிகள், அங்கவீனர்களுக்கு உதவிபுரிந்து வருவது அவரின் மனிதநேயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. என்ன கல்லறைப்பூக்கள் பற்றி கதைகளைக் கூறவில்லை என்று கேட்கலாம். கல்லறைப் பூக்கள் கதைகள் அனைத்தும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட வேண்டியவை என்பது எனது கருத்து.

ஆகவே அனைத்துக் கதைகளும் நீங்கள் உங்கள் சிந்தனைகளில் ஏற்று தமிழ்ச்சமுதாயத்தை மனிதநேயத்துடன் நேசித்தால் தமிழர்கள் துன்பம் இல்லாமல் வாழ்வார்கள். வாழ்க சிவராசா அவர்களின் எழுத்துப்பணி.

என்றும் தமிழன்புடன்
**தமிழ்மணி**
**சின்னத்துரை இராஜகருணா**
(ஈழமுருகதாசன்)
பிரதம ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்த்துரை

சிறுகதைத் தொகுப்பு வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. பாலர்களுக்கு உயரிய கருத்துக்களைச் சிறுகதை மூலம் தெரிவிப்பது போற்றத்தக்கது. ஔவையார் இன்று உலகிடை . பெரிய இடத்தைப் பிடித்துவிட்டார். மிகவும் தேவையான விடயங்களை ஆத்தி சூடியில் தெரியப்படுத்தி விட்டார். திருவள்ளுவர், இவரது சகோதரி இதையே பின்பற்றிக் குறளைத் தந்துள்ளார். விஞ்ஞான வளர்ச்சி பெற்றுள்ள இக்காலகட்டத்தில் இச்சிறுகதைத் தொகுப்பு வரவேற்கத் தக்கது.

எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.
இறைபணியில்
சுவாமி
Sri Ramakrishna Sarada Sevashrama

Point Pedro
4.12.2000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நன்றி

என்னைப் பெற்று வளர்த்துவிட்டு, தெய்வமாகிய என் பெற்றோருக்கும், என்னை நல்வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், என் உடன் பிறப்புகளுக்கும், என்னுடன் என்றும் துணையாக இருக்கும் என் மனைவி பிள்ளைகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

என் குறுகிய காலத் தமிழ் ஆக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இந்நூலை வெளியிடவேண்டுமென ஊக்கப்படுத்திய ஜேர்மனி ஈழம் பத்திரிகை ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு சி. இராஜகருணா (ஈழம்முருகதாசன்) அவர்களுக்கு எனது நன்றிகள். அத்துடன் "மண்" சஞ்சிகையின் உதவி ஆசிரியர் திரு. ப. சௌந்தர ராசா, மற்றும் எனது நண்பர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், உறவினர்கள் யாவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**தமிழன்புடன்**
**வயிரமுத்து சிவராசா**
**இந்நூலாசிரியரும்.**
"மண்" கலை இலக்கியப் பிரதம
ஆசிரியரும்.

1-4-2001
ANGERTALER STR 98
47249, DUISBURG
GERMANY
TEL-0203-706480

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காணிக்கை

கோடானு கோடி ஏழை எளிய மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பவள். கோடான கோடி அபலைகள், அநாதைகள், அங்கவீனர்களின் ஒளிவிளக்கானவள் உலகத்தின் முதன்மையானவள். உலகத்தின் சிறந்த தாயாக, தந்தையாக, பெண்ணாக, வைத்தியராக, சேவகராகத் திகழ்ந்தவள். கோடானு கோடி நெஞ்சங்களை உருக வைத்தவள். மனித தேவதையாகப் பவனி வந்தவள். இத்தேவதை. இந்தப் பூமிப்பந்து உள்ளவரை அவள் புகழ் நிலைத்து உயர்ந்து நிற்கும். அன்னைக்கு அன்னையாம் அகிலத்தில் வாழ்ந்த அன்னை திரேசாவிற்கு இந்த மலரைக் காணிக்கை ஆக்குகிறோம்.

-இதழாசிரியர்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தியாக தீபம் | 23 |
| 2. | எலும்புக் கூடு | 25 |
| 3. | வாழ வைத்த தெய்வம் | 28 |
| 4. | வாழ்வு | 32 |
| 5. | பாடசாலை | 36 |
| 6. | மாப்பிள்ளை சார் | 38 |
| 7. | தலைவிதி | 42 |
| 8. | இருள் | 44 |
| 9. | அகதி | 46 |
| 10. | கல்லறைப் பூக்கள் | 48 |
| 11. | விடுதலை | 50 |
| 12. | குடும்பம் | 52 |
| 13. | மலடி | 54 |
| 14. | சமரசம் | 56 |
| 15. | சந்தேகம் | 58 |
| 16. | உயிர்ப்பு | 60 |
| 17. | பொது உடைமை | 62 |
| 18. | தாய்மொழி | 64 |
| 19. | ஆச்சி | 66 |
| 20. | உயர்வு | 68 |
| 21. | சீதனம் | 70 |
| 22. | ஆசை | 72 |
| 23. | உழைப்பு | 74 |
| 24. | மாலை மரியாதை | 76 |

www.tamilarangam.net



25. பூமிக்குச் சொந்தம் 78
26. ஊர்ப்பிள்ளை 80
27. விவாகரத்து 82
28. நட்பு 84
29. பாசம் 87
30. போராளிகள் 89
31. சகோதரர்கள் 91
32. சந்ததி 93
33. விதவை 95
34. மாறாத மணம் 97
35. அப்பா வேலைக்குப் போகிறார் 100
36. கோவில் 103
37. பரதம் 105
38. மரியாதைக்குரியவர் 108
39. நன்றிக்கடன் 110
40. பாதிவழி 112
41. மறுமணம் 114
42. காணி நிலம் 117
43. வாலிபம் 119
44. ஜோதி 122
45. மது போதை 124
46. தெளிவு 126
47. ஸ்ரெவ்வானி 129
48. ஊனம் 132
49. தீபாவளி 134
50. சுமங்கலி 136

www.tamilarangam.net

# 1. தியாக தீபம்

வரதன் படிப்பில் கெட்டிக்காரன்தான். வீட்டில் தந்தை வேலுப்பிள்ளையோ வறுமையில் திண்டாடினார். ஆறு பிள்ளைகளுக்கும் படிப்புச்செலவு, உடுப்புச் செலவு, உணவுச் செலவு எனத் திண்டாட்டம்தான். புகையிலை வியாபாரம் செய்து வரும் வேலுப்பிள்ளையின் துணைவியின் சிக்கன வாழ்வால் அந்தக்குடும்பம் மற்றவர்களிடம் கையேந்தாமல் பிழைத்து வந்தது.

பிள்ளைகள் வளர வளர தலையிடியும் கூடியது. குடும்ப பாரம் கூடியபடியால் மூத்தவன் ரவீந்திரனைப் பாடசாலைப் படிப்பை நிறுத்தி தனது தொழிலுக்கு உதவ சேர்த்துக் கொண்டார், வேலுப்பிள்ளை. வளர்ந்த பெண் பிள்ளை களுக்குத் திருமணமும் செய்ய வேண்டும் என்னும் ஆதங்கம் மேலோங்கியது. அத்துடன் வரதனின் உயர் படிப்புக்கும் பணம் தேவை. பலகாலம் கஷ்டப்பட்டு உழைத்து வரதனை பல்கலைக்கழகம் சென்று படிக்க வசதி செய்ததோடு மூத்த இரு பெண்களுக்கும் திருமணம் முடித்துவைத்தார் வேலுப் பிள்ளை.

வரதன் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றுக் கொழும்பில் நல்ல உயர்பதவியும் கிட்டி பணம் சம்பாதித்து உழைக்கவே அவனுக்குத் திருமணத்தையும் பெற்றோர் செய்து வைத்தனர். திருமணவாழ்வு, கண்டி எனச்சுற்றுலா செய்து இல்லறவாழ்வு இனிதே ஓடிக்கொண்டது. காலம் சிறிது ஓடியது. வரதன் கைப்பிடித்த அற்புதராணிக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு குழந்தையும் கிடைத்து விட்டது. நல்ல மனைவி, கல்வி, செல்வம் எல்லாம் நிறையவே வரதனுக்கு நோயும் வந்து சேர்ந்தது.

அற்புதராணி திடுக்கிட்டாள். பயப்பட்டாள் டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். டாக்டர் பல நாட்களாகப் பரிசோதனை செய்ததன் பின்பு வரதனின் சிறுநீரகம் இரண்டும் பழுதடைந்து விட்டது. வரதன் இன்னும்சிறிது காலம் வரைதான் உயிர்வாழ முடியும் என்று குண்டைத்தூக்கித் தலையில் போட்டார். அற்புதராணி, அழுதாள்; புலம்பினாள். இந்தச் சொற்ப கால இல்லற வாழ்வோடு கணவனை இழப்பதா என ஆண்டவனை வேண்டினாள். டாக்டரிடம் சென்று அழுது மன்றாடினாள். தானும் மழலைச்செல்வமும் எப்படி வாழ்வது என ஏங்கினாள். இதற்கிடையில் ஊரெல்லாம் கதை பரவி வரதன் இறந்து விடுவான் எனவே அவனுக்கு ஆறுதல் தானே எல்லோரும் கூறினார்கள்.

அற்புதராணி மீண்டும் டாக்டரிடம் வரதனை அழைத்துச் சென்றாள். "டாக்டர் என்னுடைய சிறுநீரகம் ஒன்றை எடுத்து என் கணவருக்குப் பொருத்தலாமா?" என்று கேட்டபோது டாக்டரே கண்கலங்கி விட்டார். ஆமாம் என்று அவளின் கண்ணீரைத்துடைத்து ஆறுதல் கூறி, "நீ ஒரு மனித தெய்வம். உன்னைப்போல் யாருக்கும் மனம் வராது. நீ ஒரு தியாகி" என டாக்டர் கூறிவிட்டார்.

அடுத்தநாள் அவளின் சிறுநீரகம் ஒன்றை எடுத்து வரதனின் உடலில் பொருத்தப்பட்டது. இப்போது இருவரும் ஒவ்வொரு சிறுநீரகத்துடன் உயிர் வாழ்கிறார்கள். அவள் அவன்மீது வைத்த காதல், அன்பு, தியாகம், மனிதநேயம் இன்றும் அவர்கள் புதுமணத் தம்பதிகள் போல் அன்பாக வாழ்கிறார்கள். அற்புதராணி உண்மையிலே தியாகத்தின் தீபம் தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2. எலும்புக் கூடு

திடீரெனக் குண்டுச்சத்தங்களும், விமான இரைச்சல்களும், ஆங்காங்கே கேட்ட வண்ணம் இருந்தன. அந்தக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் வீதியில் பேரிசைச்சலுடன் இராணுவ வண்டிகள் செல்லும் இரைச்சலும் அந்த ஊர் மக்களைக் கிலி கொள்ளச் செய்தது. நவம், சிவம், குலம் எனும் மூன்று வாலிபர்களும் அந்த ஊரெல்லாம் ஓடி, ஓடிச் சொல்கிறார்கள். இன்று ஆ(ர்)மி எங்கட ஊருக்கு வரப்போகிறாங்கள். எல்லாரும் வெளிக்கிடுங்கோ. ஊரே அல்லோல கல்லோலப் பட்டது. இயக்கமும் அறிவித்து விட்டது. எனி ஒன்றும் செய்ய முடியாது. காலாதிகாலம் வாழ்ந்த மண்ணை, நிலபுலம்கள், ஆடுமாடுகள், கோழி, பூனைகளை விட்டுவிட்டுப் பிரிய முடியாத லட்சுமிக்கு தலை வெடித்துத் சிதறியது போல் இருந்தது.

வயதான தந்தை, செல்லத்துரையை என்ன செய்வது என்று அழுதாள். இருந்த சாமான்கள் நகை, உடைகளை கையி லெடுத்த அவளின் கணவர் சின்னராசா, எடி வெளிக்கிடடி, பிள்ளைகள் இரண்டுபேரும் சைக்கிளில் சாமான்களை ஏத்துகிறான்கள்.எல்லாச் சனமும் போறதுகள். என்று கத்தினார். அப்போது வயதான செல்லத்துரை கூறினார். லட்சுமி என்னைப் பார்க்காதையம்மா..நான் வயதானவன்தானே. நீங்கள் ஓடித் தப்புங்கோ என்றதும். அவரைவிட்டுப் பிரியமுடியாத மகள். அழுதுவிட்டு மெல்ல மெல்ல நடந்து சென்றாள். அப்பா நான் இயக்கப் பெடியனிட்டம் சொல்லிப்போட்டுப் போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றாள்.

www.tamilarangam.net



அகதியாகச் சென்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாமல் வயதான செல்லத்துரையர் ஏங்கினார். ஆமியும் கிராமத்தில் புகுந்தது. வீடுகளை உடைத்துக் கொள்ளை அடித்தார். ஆடு, மாடு, கோழிகளைப் பிடித்துக் கொன்று தின்று விட்டனர். அந்த ஊரே மயான பூமியாக மாறிவிட்டது. சனநடமாட்டம் இல்லை. செல்லத்துரையரைப்போல் ஆடு, மாடு, பூனை, நாய் யாவும் பசியால் வாடிவதங்கின. ஆமிக்காரர் கொடுத்துவிட்டுச் சென்ற பாணையும் செல்லுத்துரையர் நான்கு நாள் சமாளித்தார். தண்ணீரை மட்டும் குடிப்பார். படுத்துவிடுவார்.

அகதி முகாம்களுக்குச் சென்ற லட்சுமி குடும்பம். தமது வயதான தந்தையை இட்டுக் கவலைப்பட்டது. தொண்டர் நிறுவனங்களுக்குச் சொல்லியும் பலன் கிட்டவில்லை. அகதி முகாம்களிலும் நல்ல சாப்பாடு இல்லை. குளிப்பு முழுக்கு இல்லை. உடுதுணி இல்லை. படுக்கை இல்லை, சுகாதாரச் சீர்கேடு நோய்நொடி... இத்தனைக்கும் மத்தியில் சாதிப்பாகு பாடு குறையவே இல்லை. நாட்கள் நகர விடுதலைப்புலிகளின் உக்கிரத்தாக்குதல் தொடரவே மக்கள் சந்தோஷப்பட்டனர். எனி நாங்கள் ஊருக்குத் திரும்பிவிடுவோம். ஊர் சென்றால் எல்லாம் சரியாகி விடும் எனச் சமாதானப்பட்டனர்.

போர் மூண்டது. இராணுவச் சிப்பாய்கள் சிதறி ஓடினர். இராணுவ வாகனங்கள் தவிடுபொடியாயின. அந்தக்கிராமத் தில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்தனர். கிராமமே வெறிச்சோடியது. அந்த ஊர்மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பலாம் என அறிவித்தல் வரவே, எல்லோரும் தமது கிராமத்துக்கு விரைந்தனர். ஊர் களை கட்டியது. எல்லோரும் தமது வீடுகளைப் பார்த்துக் கண்ணீர் விட்டனர். பொருள் பண்டங்களைத் தேடினர். மணலில் தாட்டுவைத்தை பவுன் நகைகளைக் கிண்டி எடுத்தனர் பலர். தங்கம் தனது வீட்டுக்குள் ஓடினாள். தந்தை செல்லத்துரையரைத் தேடினாள். திடுக்கிட்டாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் படுத்திருந்த கட்டிலில் அவரின் எலும்புக்கூட்டையே கண்டாள். ஊர் கூடிவிட்டது. எல்லோரும் கதறி அழுது பரிதாபம் தெரிவித்தனர். எமக்கு இதுதான் தலைவிதியா. எனப் பலர் நொந்து கொண்டனர். தங்கம் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். செல்லத்துரையரின் எலும்புக்கூட்டை அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்க செல்லத்துரையரின் இளைய மகன் வெளிநாட்டிலிருந்து அனுப்பின பணத்தின் காசோலையைத் தபால்காரன் கொண்டு வந்து நீட்டினான்.

www.tamilarangam.net

# 3. வாழ வைத்த தெய்வம்

சன சஞ்சாரம் மிகுந்த அந்த நகரத்தின் பிரதான வீதியின் 20ஆம் இலக்க வீடு ஆனந்தனுடையது. பேருந்துகளின் இரைச்சல் அவனது வீட்டில் பாடும் வானொலியின் சத்தத்தையும் மீறி ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது. அகதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வீடென்றபடியால் மனைவி இரண்டு பிள்ளைகளுக்குமான ஓரளவு வசதியான வீடுதான். மனைவி கண்மணி வீட்டை அலங்கரித்து நல்ல வடிவாக வைத்திருந்தாள்.

என்றுமில்லாதவாறு இன்று ஆனந்தன் வீட்டில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. இடக்கஷ்டமென்றபடியால் மக்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். சிறுவர்கள் தொலைக் காட்சிக்கு முன் இருந்து குழந்தைகள் நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்தனர். சில பெண்கள் ஆண்களுக்கு உணவு பரிமாறியதுடன் தாங்களும் உணவருந்தினர். சாப்பாடு முடிந்து வெற்றிலை உண்பவர் ஒரு புறமும் சிகரட் புகைப்பவர் ஒரு புறமுமாகக் கதைத்துக்கொண்டிருந்தனர்.

ஆனந்தனின் தந்தையார் இறந்து 31ஆம் நாள். அதற்குத்தான் இந்த மக்கள் கூட்டம். ஆனந்தனுக்கு இரண்டு தம்பிமாரும் ஒரு தங்கையுமாக எல்லோரும் வெளிநாட்டில். தந்தை இறந்த போது இறுதிக் கிரியைக்கு ஒரு பிள்ளை கூட அங்கு இல்லை. இறந்த செய்தியைப் பத்திரிகையிலும் வானொலியிலும் சிறப்பாக விளம்பரப்படுத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்மணியின் சகோதரன் சதீசன், மிக அண்மையில்தான் இலங்கையிலிருந்து இங்கு வந்திருந்தான். இங்கு ஒருவரும் பழக்கமில்லாத காரணத்தால் வீட்டின் பால்கனியில் ஒரு மூலையில் கதிரையில் அமர்ந்தவாறு யோசித்துக் கொண்டிருந்தான். நாட்டு விஷயங்களில் கூடிய அக்கறை கொண்ட ஆனந்தனின் நண்பன் கந்தசாமி அவனிடம் நாட்டு நிலைமைகளை அறிவதற்காக அங்கு வந்து அவனருகே உட்கார்ந்து "நாட்டு நிலைமை எப்படித் தம்பி? அமைதி கிட்டுமோ? எப்ப திரும்பிப்போய் எங்கடை சனத்தைக் காண்பது. எங்கட ஊர்க்குளத்திலை குளித்தாலும், எங்கட ஊர் பனங்கள்ளைக் குடித்தாலும் எவ்வளவு சந்தோஷம் தம்பி! எப்படியென்றாலும் எங்கடை நாடு, நாடுதான். இங்க எங்கட சனம் இமிக்கிறசன் என்று ஓடித்திரியுதுகள். அதோடு பவுணையும் பணத்தையும் அளவுக்கு மிஞ்சிச் சேர்த்து என்ன செய்வதென்று தெரியாமல் முளிக்குதுகள்" என்று கூறி ஒரு பிரசங்கமே செய்து விட்டார்.

சதீசன் "ஓம் பாருங்கோ. நான் வந்து இரண்டு கிழமை தான். இங்குள்ள சனங்களின் சகல விதமான போக்குகளையும் நன்றாகப் படித்து விட்டேன். முதல் இது பற்றி வீரகேசரிக்கு ஒரு கட்டுரை எழுதப்போகின்றேன். அப்பதான் எனக்கு மனம் சிறிது ஆறுதல் அடையும்" என்று கூறவே இடைமறித்த கந்த சாமி, "ஜெயம் உமது மாமா ஆனந்தனின் தந்தை என்ன 45 வயது தானே. ஏன் செத்துப் போனார். ஏதும் வருத்தம் துன்பமோ? என்ன நடந்தது" என்று விசாரித்தான்.

இதுபெரிய கதைபாருங்கோ. இதைச் சொன்னால் பெரும் வெட்கமும் வேதனையும் தான். இருந்தாலும் உங்களுக்குச் சொல்லத்தான் வேண்டும். அவர் இறந்த போது ஒரு பிள்ளைகூட அவரருகே இல்லை. அதுவும் எனது மாமி பொல்லாதவர். எல்லாப் பிள்ளைகளும் வெளிநாட்டிலிருந்து காசு அனுப்ப ஊரில்கிடந்து கரடு முரடுக் காணிகள் எல்லாம் வட்டிப் பணத்திலே வேண்டியுள்ளார். வீடும் எல்லாப்

www.tamilarangam.net



பிள்ளைகளுக்கும் கட்டியுள்ளார். ஆனால் மாமாவையோ வீட்டை அடுப்பதில்லை. குடிகாரன் என்ற சாட்டைச் சொல்லி வீட்டை விட்டு விரட்டி விட்டார். அந்தாள் சாப்பாடில்லாமல் திரிந்து கடைசி 2 வருடமாக வயோதிகர் இல்லத்தில் இருந்துதான் செத்தவர். மாமா உயிருடன் இருக்கும்போது எந்தப்பிள்ளையோ மருமக்களோ என்ரை அக்காகூட ஒரு சதம் அவருக்கு அனுப்பவில்லை. அவருக்கென்று சிறு தொகை அனுப்பியிருந்தால் இன்னும் பத்து பதினைந்து வருடம் உயிருடன் வாழ்ந்திருப்பார். மாமியின் கொடுமையும் பிள்ளைகள் ஒன்றும் தன்னைப் பார்க்கவில்லை என்ற கவலையும் தான் அந்தாளைச் சாகடித்த வேதனைகள்.

இங்கே என்னவென்றால் அத்தானும் அக்காவும் ஊருக்கு விலாசமாக ஐயரையும் பிடித்துப் போட்டோவும் எடுத்து சிறப்பாக மாமா செத்த 31ஆம் நாள் கொண்டாடுகிறார்கள்.

இன்று இந்தக் கொண்டாட்டத்துக்குச் செலவாகும் தொகையைப் பார்த்தால் மாமா உயிருடனிருந்தால் 2 வருடத்துக்கு சும்மா இருந்துகொண்டு சாப்பிடப்போதும். இதைப் பார்க்கும்போது வேடிக்கையாகவும் வெட்கமாகவும் இருக்குது பாருங்கோ" என்று கூறி முடித்தான்.

என்ன கொண்டாட்டத்தை எப்படிக் கொண்டாடுவதென்று தெரியாது தம்பி எங்கட சனத்துக்கு. எல்லாரும் கொண்டாடு கினம் நாமும் கொண்டாடுவோம். என்ற நிலைதான். பெற்ற தாய் தந்தை உயிரோடு இருக்கும் போது உதவி செய்து உயிர்ப்பிச்சை கொடுக்க முடியாது. இறந்தவுடன் விலாசம் எழுப்பும் எங்கட ஆட்கள் இங்கு நிறைய இருக்கிறார்கள். தம்பி என்று கூறினார்.

என்னடா கதை அளக்கிறாய்,தொடங்கி விட்டார் லெக்சர் அடிக்க என்ற சகோதரி கண்மணியின் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். சகோதரியின் முகபாவனையில் கோபம் திழைத்திருந்தது. மருமகள் கொண்டு வந்த இரு தேநீர்

www.tamilarangam.net



கப்புகளையும் வாங்கிக் கொண்டு இருவரும் வீட்டிற்குள் போய் சோபாவில் அமருகிறார்கள் "வாழ வைத்த தெய்வம்" என்னும் தமிழ்ப் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. பலர் இரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 4. வாழ்வு

பாழாய்ப் போனவங்கள் குண்டைப் போட்டாங்கள் என்ர வீடு நாசம்! அந்த வீட்டைப் பார்க்க வயிறு பத்தி எரியுது. என்ர மனிசன் அந்த வீட்டைக் கட்டி கல் சுமந்து ...கூலி கொடுக்காமல் கட்டிக் குடிபுகிர்ந்த வீட்டை பாரன்... சுடலை மாதிரித் தெரிகிறது. ஆ... கடவுளே நீயுமா கைவிட்டிட்டாய்...

தங்கம்மாக் கிழவியின் அந்த வீடு ஒழுங்கை மூலைவீடு தான். பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில் தான் உடைந்து நொறுங்கிய வீட்டுக்கு அருகே ஓலைக் குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறார். அவருக்குத் துணையாக ஒரு நாய், ஒருபூனை, ஒரு பசுமாடு,மிருகங்களுடன் தான் அவர் வாழ்க்கை.

ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையான கந்தப்பர் வீடு குண்டு விழுந்ததுடன் அவரும் இறந்து விட்டார். மகன் ஒருவன் இயக்கத்துக்கென்று வெளிக்கிட்டவன், இன்று வரை வீடுவாசல் இல்லை. ஒரு மகன் இயக்கத்தில் இருந்து சண்டையில் இறந்துவிட்டான். அவனின் இறந்த உடலைக்கூட தங்கம்மாக் கிழவிக்குக் காட்டாமல் ஏதோ செய்து விட்டார்கள். மூத்தமகன் குடும்பமாக கனடாவில். ஆசையுடன் பெத்தமகள் ஒருத்தி குடும்பத்துடன் ஜேர்மனியில். இளையமகன் இயக்கப் பிரச்சனையால் குடும்பமாக இந்தியாவில்.

தேநீர் அடுப்பை மூட்டி புகையூதிக் கொண்டிருக்கையில் தபால்காரனின் மணிச்சத்தம் கேட்டு படலையடிக்குப் போனா

www.tamilarangam.net



தங்கம்மா கிழவி... ஆச்சி உனக்கு கடிதமணை ஒன்று கொடுத்துவிட்டுக் கிளம்பி விட்டான் தபால்காரன். கடிதத்தைப் பிரித்தா ஒன்றும் விளங்கவில்லை. வயது அப்படியென்ற படியால் கண்பார்வை தெரியவில்லை. என்ன செய்வதென்று யோசித்து விட்டு வாத்தியார் வீட்டைப் போனால் அவரைக் கொண்டு வாசித்து அறியலாம் தானே. என்ற நினைப்பில் புல்லுக் கடகத்தையும் தூக்கிக் கொண்டு பசுமாட்டையும் இழுத்தபடி அந்தக் குச்சி ஒழுங்கையால் ஏதோ பேசியபடி போய்க்கொண்டிருந்தார்.

எதிரே வந்த வாத்தியார் எணை ஆச்சி என்னனை பேசிக்கொண்டுவாறாய்... எடதம்பியின் கடிதம் வந்தது தம்பி. ஒருக்காவாசி தம்பி... ஆர்போட்டது... எனக்குக் கண் தெரிந்தால் தானே... கடிதத்தைப் பார்த்த வாத்தியார்... எணை... உன்ர இளையமகன் இந்தியாவிலிருந்து போட்டிருக்கிறான்... தம்பி வாசிமோனை... ஆச்சிக்கு சுகத்தை எழுதிவிட்டு... அதிர்ச்சியான செய்தி உனது செல்லப்பேரப்பிள்ளை...நீ தாலாட்டி வளர்த்த பிள்ளை எனது மகன் காந்தன் (52 வயது) அகதிமுகாமில் இறந்து விட்டான். மருந்து வேண்டுவதற்கும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கும் பணவசதி இல்லை. சகோதரங்களுக்கு வெளிநாடுகளுக்குப் பல கடிதம் போட்டும் காசு அனுப்பவில்லை. ஆதலால் என் செல்வனை அநியாயமாக இழந்து விட்டேன். எனது மனைவி மகனின் பிரிவு தாங்க முடியாமல் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். என வாசிக்க தங்கம்மா கிழவி ஒப்பாரிவைத்துக் குளறினாள்.

என்ரபிள்ளை இத்தனை ஆமிப்பிரச்சனைக்கேயும் எனக்கு கஞ்சி, கூழ் ஊற்றிக் காப்பாற்றினவன். என்ர பேரக்குஞ்சுக்கு எத்தனைதரம் அப்பம் சுட்டுக் கொடுத்தனான். கடையிலை ஓடோடிப் போய் வெத்திலை வேண்டித்தந்த எனது செல்லக்குட்டி பட்டினியால போய் விட்டானே... என்ர வயிறு எரிகிறதே... ஐயோ... எனக்கு யார் ஆறுதல். ஐந்தைப்

www.tamilarangam.net



பெற்றேன். ஒன்றும் இப்ப என்னோடு இல்லை. எனக்கும் இந்தக்கதிதான். ஆ... கடவுளே... என் பிள்ளைக்கும் இக்கதியா...

தங்கம்மா ஆச்சியின் இளையமகன் படிப்பில் சிறிது குறைவுதான். மூத்த சகோதரன் கனடாவுக்கு வரும்படியும் சகோதரி ஜேர்மனி வரும்படி பலதடவை முயற்சி எடுத்தும் அவன் தனிமையில் இருந்த கிழவியை விட்டுப் போக விரும்பாமல்தான் வாழ்ந்து வந்தவன். இறுதியில் உயிருக்கே ஆபத்தான நிலையில்தான் இந்தியா வந்து சேர்ந்தவன்.

கண்ணீரைத் துடைத்தபடி எடதம்பி...இவ்வளவும் தானே... என்னும் இருக்கிறதோ படி தம்பி... படி... ஓமணை வாசிக்கிறேன்... என்று வாத்தியார் தொடர்ந்தார் இங்கேயும் சாதிப்பிரச்சனை, சாப்பாட்டுப் பிரச்சனை, வீட்டுப் பிரச்சனை, அரசியல் பிரச்சனையில் இப்போதுள்ள நிலைமையில் றோட்டில் உலாவமுடியாது பசிபட்டினி, நோய், காசு பணம் இல்லை. இங்கேயும் வாழமுடியாது சொந்த மண்ணிலும் வாழமுடியாது. எனி கடலில் குதிப்பது தான் இறுதி முடிவு வாழ்வா? சாவா?-என்ற நிலைதான். அகதிமுகாம்களில் எம்மவரின் வாழ்வு இப்படியாகத்தான் இருக்கிறது. வாழ்க்கை, எதிர்காலம் யாவும் கேள்விக் குறியாகத் தான் இருக்கின்றது. நாங்கள் திரும்பி எப்ப வருவோம் என்பது உறுதியில்லை... நீயும் உயிருடன் இருக்கிறாயோ தெரியவில்லை... அடைவு வைத்த என்ர தாலிக்கொடியை விற்று வாத்தியாரைக் கொண்டு காசை அனுப்பிவைக்கவும் என எழுதப்பட்டிருந்தது...

மேலும் தங்கம்மா கிழவிக்கு அழுகை வரவே... பாழாய்ப் போன ஆமிக்காரரால் எனிமேல் மனிசர் மட்டுமல்ல மிருங்கங்களும் இந்தமண்ணில் வாழ முடியாது. என்ன கலிகாலமோ தெரியவில்லை. எனி ஆண்டவனாலும் எங்களைக் காப்ப முடியாது... என்று பேசித்திட்டிக் கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருகையில் புல்லுக்கடகமும் மறுகையில் பசுமாட்டையும் இழுத்துக்கொண்டு போகின்றா... நாயும், பூனையும் பசி தாங்க முடியாமல் அவளைப் பின்தொடர்ந்து செல்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 5. பாடசாலை

வடபகுதியிலிருந்து பெருமளவு மக்கள் போரின் கொடுமையால் இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்தவர்கள் தானே. வன்னிக்கு வந்து குடியேறிய மக்கள் பலகொடுமை களுக்கும் ஆளாகியிருப்பது எவ்வளவு கடினம். உணவில்லை நல்ல உடையில்லை. உறங்க வீடில்லை. அதுமட்டுமா. பாம்புக்கடி, மலேரியா, வயிற்றோட்டம் எனப் பலவியாதிகளில் வாழ்ந்து கொண்டிருப்பது தான் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரின் நியதியாகிவிட்டது.

பாலன், தருமன், சுதா, கௌரி, என இருபதுக்கும் அதிகமான சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் அந்தத் தமிழ்ப் பாடசாலை. பாடசாலைக்குக் கட்டிடம் கிடையாது. மரநிழலில் தான் பிள்ளைகள் நிலத்தில் இருந்துதான் படிப்பு. அகதியாக இடம்பெயர்ந்தவர்களிடம் வசதிகள் கிடைக்குமா.

எல்லோரும் சிறு சிறு குடிசைகளில் வாழ்வு. பாடசாலையில் இரண்டு ஆசிரியைகள். வகுப்புக்கள் நடக்கும் மழைவந்தால் பிள்ளைகள் மரங்களின் ஓரத்தில் ஒதுங்குவார்கள். வெள்ளம் வந்தால் பாடசாலை நடைபெறாது. இந்த நான்கு சிறுவர்களும் மிகவும் கெட்டிக்காரர். துடிப்பானவர்கள். பாலன் மற்றைய மூவருக்கும் புத்தி சொன்னான். மரங்களை வெட்டிக் குற்றியை எடுத்து வந்து கதிரை ஆக்குவோம். மரப்பலகையை வெட்டி மேசையாக்குவோம். அப்படியே நால்வரும் தமது சொந்த முயற்சியால் பல கதிரைகளையும் மேசைகளையும் உரு வாக்கிப் படிப்பைத் தொடர்ந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணவர்களுக்கு புத்தகம், கொப்பிகள் வேண்டுவதற்காக வவுனியா நகருக்குச் சென்ற அந்த இளம் ஆசிரியையைக் காணவில்லை. அந்தக் காட்டுக்கிராமத்தில் அகதிகளாக வாழ்ந்த மக்கள் மத்தியில் இக்கதை எட்டியது. ஆசிரியையைத் தேடினார்கள். கிடைக்கவில்லை அடுத்த நாள் அந்த ஆசிரியை பிணமாகக் காட்டில் மீட்கப்பட்டாள். இராணுவ அரக்கர்களால் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டு கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதாக விடயம் வெளிவந்த போது அந்தமக்கள் பட்ட துன்பத்தை எப்படிச் சொல்வது?

பாடசாலை தொடர்ந்தது. பாலன், தருமன், சுதா, கௌரி இந்த நால்வரும் மற்றவர்களைவிட அதிகமாகக் கவலைப் பட்டார்கள். இருந்தும் படிப்பு மீது அதிக அக்கறை கொண்டு படித்தார்கள். இந்த நால்வரின் முயற்சியால் அந்த அகதிக் கிராமத்தில் பல நல்ல விடயங்கள் நடைபெற்றன. அங்கு வாழும் மக்களின் உணவு, உடை வதிவிடம், சுகாதார விடயங்களில் சிறு முன்னேற்றம் காணப்பட்டாலும், சொந்த மண்ணில் சொந்த நாட்டில் வாழ்வது எப்போது என்னும் ஏக்கமும் குடிகொண்டிருந்தது.

பாடசாலை வழமை போல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விமானம், ஹெலி சத்தங்கள் விரைந்தன. குண்டுச்சத்தங்களும் கேட்டன. திடீரென அந்த அகதிக்கிராமம் அல்லோல கல்லோலப்பட்டது. தருமன், சுதா, கௌரி உட்பட பத்து மாணவர்களும் ஆசிரியையும் இரத்த வெள்ளத்தில் உயிரற்ற உடலாகச் சிதறிக் கிடந்தனர். பாலன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தான். “ரீச்சர், ரீச்சர்” எனப் புலம்பியவாறு அவன் உயிரும் பிரிந்தது.

www.tamilarangam.net

# 6. மாப்பிள்ளை சார்

பிராங்போட் விமானத்துறையின் நாலாபக்கத்திலிருந்தும் பலநாட்டு விமானங்களும் தரையை விட்டுக் கிளம்பிய வண்ணமும், தரையில் வந்து இறங்கிய வண்ணமும் இருந்தன. பல நாட்டவர்கள் வருவதும் போவதுமாகச் சன நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இலங்கை செல்வதற்கான வரிசையில் தமிழ்ப்பெண் ஒருத்தி இருந்ததைக் கண்டு அந்தப் பெண்ணை ஒரு நோட்டம் விட்டேன். அழகானவள் தான், பார்க்கக் கலியாணம் செய்தவள் போல் தெரிந்தது. தாலிக் கொடியைக் காணவில்லை. முகத்தில் சோகம் படர்ந்திருந்தது. அவள் இருந்த அமைதியில் இருந்து ஏதோபிரச்சனை எனச் சிந்திக்கத் தூண்டியது. அவளை நெருங்கி "நீங்கள் சிலோனுக்கா போகிறீர்கள்" எனக் கேட்டேன். ஆமென்று பதில் கொடுத்துவிட்டு நீங்களும் சிலோனுக்கா போகிறீர்கள் என அமைதியாகக் கேட்டாள்.

எனது நண்பர் தான் போகிறார்.நான் போகவில்லை. எனக்கும் வீட்டை போக ஆசைதான். எனது வீட்டுஐந்து குமருகளுக்காக இன்னும் பத்து வருடம் உழைத்தால்தான் நான் ஊரைப்பற்றி, என் வாழ்வைப் பற்றி யோசிக்க முடியும். எனக் கூறிய பொழுது ஆ... ஐந்து... குமரா... கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்றாள். நான் தொடர்ந்தேன். என்ன உங்களைப்பார்க்க ஏதோ பிரச்சனைக்குள்ளாகியதைப் போல் முகம் சொல்லுது. என்ன விஷயம் ஏன் நாட்டுக்குப் போகிறீர்கள். சொல்லுங்கோ என்றேன்.அவள் தொடர்ந்தாள் தனது சோகக் கதையை.

www.tamilarangam.net



எனது அப்பா ஒரு தமிழ் வாத்தியார். அம்மா ஒரு வட்டி முதலாளி. குடும்பத்தில் இரண்டு தம்பியும் நான் ஒருத்தியும் தான். அப்பா எங்களைப் படிப்பித்து இரண்டு தம்பிகளையும் கனடாவுக்கு அனுப்பிவிட்டார். எனக்கு உத்தியோகம் ஒன்றும் பெற்றுத் தந்தார். எனக்கு இப்போ 30 வயது. 20 வயதில் வேலைக்குப் போனேன். 30 வயது வரை பல இடத்தாலும் கலியாணம் பேசிவர அப்பா, அம்மா அந்தஸ்துப் பார்த்து எனது கலியாணத்தில் தோல்வி கண்டனர். முப்பதாவது வயதிலேயே எனது சிறிய தகப்பனாரின் முயற்சியால் ஜேர்மன் மாப்பிள்ளை ஒருவரைப் பேசி 5 லட்சம் வீடு வளவு, 50 பரப்பு நெல்காணி, 10 பரப்புத் தோட்டக்காணி 2 லட்சம் காசு என எல்லாம் பேசி முற்றாக்கிப் பார்சல் அனுப்புவதுபோல் என்னையும் இங்கு அனுப்பி வைத்தனர். இங்கு வரும் போது இது ஒரு புதிய நாடு, புதிய சூழல், என்னை முடிப்பவர் எப்படிப்பட்டவர் என்று ஒன்றுமே தெரியாத பலகேள்விக் குறியோடுதான் இங்கு வந்தேன் வரும்பொழுது கழுத்துக்குக் கட்டுவதற்கென 25 பவுன் தாலிக்கொடியையும் சூட்கேசில் காவிக் கொண்டுதான் இங்கு வந்தேன்.

இங்கு வந்து ஒரு மாதத்தின் பின்னர் எனக்குத் தடல் புடலாகக் கலியாணம் நடந்தது. அவர் காலையில் வேலைக்குப் போனால் இரவில் தான் வருவார். சில வேளை இரவு வருவதுமில்லை. நான் தனியறையில் கிடந்து புரளுவேன். வேலையால் இரவு வருவார். வாய்க்கு ருசியாகச் சாப்பிடுவார். உடற்பசியைத் தீர்ப்பார். தூங்குவார். வேலைக்குப் போய் விடுவார். சில வேளைகளில் மதுபோதையில் வந்து அலட்டுவார். அடிப்பார். நாட்கள் ஓடின. சிந்திக்கலானேன். பல புத்திமதிகளையும் கூறினேன். நீ கந்தோரில் வேலை செய்த பொழுது எத்தனை பேருடன் போய் வந்தனியடி. உன்னை எனக்குத் தெரியுமடி. என்று வீண்பழிகளையும் சுமத்திடுவார். நான் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு என்தலைவிதி. இப்படியாக முடிந்து விட்டது, என மனம் நொந்து கொள்வேன்.

www.tamilarangam.net



ஒருநாள் எனது கணவரின் நண்பர் ஒருவர் எனது கணவரைத் தேடி எங்கள் வீட்டுக்கு வந்தார். “இப்ப வேலையாலை வந்து விடுவார்” எனக்கூறிக் கோப்பியைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவர் குடித்துக்கொண்டே “அக்கா! உங்களைப் பார்க்க எனக்குக் கவலையாக இருக்கிறது. எனது சகோதரி ஒருவருக்கு இப்படி நடந்தால் என்னால் தாங்கமுடியாது. சில உண்மைகளைக் கூறப்போகிறேன். இவ்வளவு நாளும் பொறுத்துக் கொண்டிருந்தேன். இனியும் உங்களுக்குச் சொல்லாவிடின் என்மனச்சாட்சிக்கு நான் துரோகம் செய்தவனாகி விடுவேன்” என்றான் என்ன சொல்லுங்கோ என்றேன். அவன் தொடர்ந்தான்.

அக்கா உங்கள் கணவர் எனது நண்பர்தான். அவருக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது. ஒரு ஜேர்மென் பெண்ணை மணந்து இரண்டு குழந்தைகளும் உண்டு. இதனால் தான் சில இரவுகள் அவர் வீட்டுக்கு வருவதில்லை. நல்ல குடிகாரர், கடனாளியும்கூட என்றார். எனக்கு இருதயத்தில் ஈட்டியால் குத்தியது போலிருந்தது. அழுதேன்; புலம்பினேன். வந்த நண்பனும் எனது அழுகையைச் சகிக்கமுடியாமல் எனக்குச் சொல்லாமலே போய்விட்டான்.

எனது கணவன் எனக்கு மட்டுந்தான் என நம்பியிருந்த நான் அடுத்த நாள் இவர் வேலைக்குப் போனதும் இவரது பொக்கிசங்களைத்தேடத் தொடங்கியபோது பழைய போட்டோ ஆல்பம் ஒன்று என் கைக்கு எட்டியது. ஆல்பத்தின் பக்கங்களைப் புரட்டினேன். இலங்கையின் காதலிகளுடன் எடுத்த பலரகமான போட்டோக்கள், காதல் கடிதங்கள், இறுதியில் ஜேர்மென் பெண்ணோடு எடுத்த போட்டோக்கள். இரு குழந்தைகளுக்கும் இவர்தான் அப்பா என்பதும் நிரூபணமாகியது.

அடுத்தநாள் இவர் வேலைக்குச் சென்றுவிட்டார். எனது பவுண் காப்புகள் ஆறையும் தமிழ்ப்பெண்மணி ஒருவருக்கு அறா விலைக்கு விற்றேன். பிராங்போட் கொழும்பு ரிக்கட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டிக் கொண்டேன். இரவு வீட்டுக்குகணவர் வந்தார். நான் நாளைக்குப் பிராங்போட் விமான நிலையத்துக்குப் போய் வாறேன் என்றேன். அவர் ஏன் என்றார். எனது சிநேகிதி இலங்கையிலிருந்து இங்குவருகிறாள். அவளை அழைத்து வரப் போகிறேன் என்றேன். சரி போய்வா என்றார். கழுத்தில் தொங்கிய 25 பவுன் தாலிக் கொடி சூட்கேசில் என்று கூறிக் கொண்டு எயர்லங்கா விமானப்படிகளில் அவள் ஏறியபடி கையை அசைத்து விடை பெறுகின்றாள். விமானம் புறப்பட்டுப் பறக்கிறது.

என்னைப் போல் எத்தனையோ பெண்கள் இன்று வெளிநாடுகளில் இருண்ட வாழ்வு வாழ்கின்றார்கள். ஒன்றும் செய்ய முடியாத நிலையில் கழுத்தை நீட்டிவிட்டோம். இங்கு வாழும் மாப்பிள்ளைகள் பலர் இன்னும் திருந்தவில்லை. பெண்களிடம் கொள்ளையடித்துப் பெண்களை அடிமையாக வைத்திருப்பது தான் அவர்களின் நோக்கம். என்போன்ற பலபெண்கள் வாழ்வு கேள்விக் குறியாகத்தானிருக்கிறது. இந்தப் போலிக்கணவனுடன் வாழ்வதை விட, சொந்த மண்ணில் அவதியுறும், அகதிகள், அனாதைகள் ஊன முற்றவர்களுக்காகச் சேவை செய்வதே மேலானது என எண்ணிக் கணவனை உதறித்தள்ளிவிட்டு எனது சொந்த நாட்டுக்குப் போகிறேன். இதுவே அவள் இறுதியாகக் கூறிய வார்த்தைகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 7. தலைவிதி

பதினேழு வயதில் பாடசாலைப் படிப்பை முடியாமல் வெளிநாடுவந்த ரமேஸ் வெளிநாட்டில் உழைத்துத் தனது இரு சகோதரிகளையும் வெளிநாட்டுக்கு அழைத்துத் திருமணமும் செய்து வைத்தான். இந்தப் பத்து வருடங்களில் வெளிநாட்டு வாழ்க்கை குளிர், பனி, உழைப்பு, வீடு எனக் காலம் ஓடியதில் தானும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் முடிவுக்கு வந்துவிட்டான். வெளிநாடுகளுக்குக் கூப்பிட்ட சகோதரிகளும் அவனுக்கு எங்கேயாவது பெண் பார்ப்பார்கள் என்ற ரமேசுக்கு ஏமாற்றம்தான். அவர்களும் தம்பாடு என வாழ்கிறார்கள்.

ஊரில் இருந்து தாயாரின் கடிதம் வந்தது. உனக்கு B.A. படித்த பெண் ஒன்றைப் பார்த்து ஏஜென்சிக்காரனிடம் காசும் கட்டியாச்சுது. வருகின்ற கிழமை பெண் வந்து விடுவாள். திருமணத்தைத் தடல்புடலாகச் செய்து வீடியோ கொப்பியை விரைவாக அனுப்பிவைக்கவும் என்றிருந்தது. B.A. என்றால் பெரிய படிப்பு. நான் படிக்கவில்லையே என ரமேஸ் வேதனைப்பட்டதுடன். பெருமையும் கொண்டான்.

படித்த பெண்ணும் ரமேசிடம் வந்து சேர்ந்துவிட்டாள். முதன் முதலாக ரமேசின் வீட்டில் இருவரும் ஒன்று சேர்ந்து உணவருந்தியபடியே கருத்துக்களைப் பரிமாறினார்கள். பள்ளிப் படிப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்புவரை, நண்பர்கள், தோழிகள், ஊர் நடப்புகள் யாவற்றையும் கதைத்துக் கொண்டிருந்த போது, “நீங்கள் எந்த வகுப்பு வரை

www.tamilarangam.net



படித்தீர்கள்?" என்று திடீரென நகுலா கேட்டாள். உடனே ரமேஸ் ஏன் என்ர அம்மா சொல்லவில்லையோ? எனக் கேட்டான். நான் O/L பாஸ் பண்ணவில்லை. வெளிநாடு வந்து விட்டேன் என்றான். நகுலாவிற்கு நாக்கே தடுமாறியது. "எனி என்ன செய்வது? எங்களுடைய திருமணங்கள் எல்லாம் வியாபாரம் தானே. பணம் உண்டானால் எதையும் செய்து விடலாம். படித்தவர்களுக்கு எங்க மரியாதை இதைத்தானே எங்கட சமுதாயம் கட்டிவளர்த்து வருகின்றது." என வேதனைப்பட்டாள்.

ரமேஸ் தேநீரைக் கொண்டு வந்து அவளுக்குக் கொடுத்துவிட்டு. "சரி, சரி, உம்மோடு ஒன்று கதைக்க வேண்டும். நான் படிக்காதவன். நீர் B.A படித்தனீர், எங்கடை ஆட்கள் இதை அறிந்தால் என்னைக் கேவலமாக நினைப்பார்கள். யாரும் கேட்டால் நீரும் O/L வரைத்தான் படித்தது என்று சொல்லும். B.A படித்தது என்று சொல்லக் கூடாது. சொன்னால் எனது கௌரவம் என்னாவது. எனது அந்தஸ்து பணம் எல்லாம் யோசித்துப்பாரும்" எனக் கட்டளையிட்டான்.

எனி என்ன செய்வது. தாலிகட்டப் போகிறவன். நான் கழுத்தை நீட்ட வேண்டியவள் தானே. B.A என்ன M.A படித்தாலும் பெண்களின் வாழ்க்கையில் இது தலை விதிதான் என்று நொந்துகொண்டாள்... எமது சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் நோய்தான் என நகுலா வருத்தப்பட்டாள். பல்கலைக்கழகத்தின் அந்த உயர்ந்த தோற்றம் உடைந்து விழுந்தது போல் அவளின் மனத்தில் பட்டது.

www.tamilarangam.net

# 8. இருள்

ரகுவும்-பாமாவும் திருமணம் முடித்து ஐந்தாவது நாளே பிரான்ஸ் நாட்டிற்கு வந்தவர்கள். தற்போது 18 வருடங்களாகிவிட்டன. இதுவரை நாட்டிற்குப் போகவில்லை. சிற்றிசென் எடுத்த இருவரும் தமது இருபிள்ளைகளுக்கும் சிற்றிசென் எடுத்து நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

ரகு ஓரளவு பிரெஞ்ஸ் படித்துப் பேச, எழுத கற்றுக் கொண்டான். மனைவியும் அப்படியே காரும் ஓட்டக் கற்றுக் கொண்டாள். இருவரும் உழைப்பு, நிறைய பணம், சொந்தவீடு. ஆனால் சொந்தங்களையும், நண்பர்களையும் சேர்த்துக் கொள்வதில்லை.

யாரும் கொண்டாட்டங்களுக்குச் சொன்னால் தான் மட்டும் சென்று வருவான். மனைவி, பிள்ளைகள் ஓரிடமும் செல்வதில்லை. இத்தோடு ரகு தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர். சிறிது சம்பளத்தோடு இந்தத் தொழிலையும் செய்தான். ஆனால் தனது பிள்ளைகள் இரண்டும் தமிழ்ப் படிப்பதில்லை. ஊருக்கு உபதேசம் உனக்கில்லை என்ற நிலைதான்.

ரகுவின் மனைவி ஒரு தவறான கொள்கையோடுதான் பிள்ளைகளை வளர்த்து வந்தாள். அதாவது தமிழ்ப் பிள்ளைகளோடு சேர்ந்தால் தமது பிள்ளைகள் கெட்டு விடுமாம். வெளிநாட்டில் என்ன தமிழ்க்கலாச்சாரம், பாரம்பரியம், விரும்பிய உடை, விரும்பிய வாழ்க்கை என்று எண்ணி வாழ்ந்து வந்தாள். அத்துடன் தமிழர் கொண்டாட்டங்

www.tamilarangam.net



களுக்கோ, பொது கலாச்சாரவிழாக்களுக்கோ, அல்லது கோயிலுக்கோ அழைத்துச் செல்வதில்லை. தனது மூத்த மகள் 17 வயது ரேகாவை வீட்டில் பூட்டி, அடக்கி வளர்த்துவிட்டனர்.

எப்படி அம்மா கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும் பள்ளிக் கூடத்திற்குப் போகத்தானே வேண்டும். அதற்கு நம்மவர்கள் தடைவிதிக்க முடியாதுதானே, திடீரென ஒரு நாள் வைத்திய சாலையிலிருந்து டெலிபோன் வந்தது. உங்கள் மகள் இங்கு உள்ளார். உடன் வரவும். ரகுவும்-பாமாவும் பதறி அடித்துக் கொண்டு ஓடினார்கள். விசயம் வெளிவந்தது. உங்கள் மகள் போதை வஸ்து அதிகமாக உண்டதால் மயக்கம் அடைந் துள்ளாள். உயிராபத்து இல்லை. என்றார் டாக்டர். பூட்டிவைத்து பூனைபோல் வளர்த்த ரேகாவின் வாழ்வு கேள்விக் குறியாகி விட்டது.

www.tamilarangam.net

# 9. அகதி

தியாகு அந்த ஏழைக்குடும்பத்தின் மூத்தமகன். ஐந்து சகோதர்களுடன் பிறந்ததாலே வீட்டின் உழைப்பாளியாக இருந்து வந்தான். தனது நான்கு சகோதரர்களும் நன்றாகப் படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என எண்ணி, தனது படிப்பையும் 8ஆம் வகுப்போடு நிறுத்திவிட்டுத் தனது தந்தையோடு உழைத்து கஷ்டப்பட்டு மற்றைய சகோதரர் களைக் கவனித்துக் கொண்டான்.

காலம் ஓடியது தியாகுவிற்குக் கலியாணம் செய்து பிள்ளைகளும் மூன்று பிறந்து விட்டது. சகோதரர்களும் தியாகுவின் உழைப்பால் உயர்படிப்பை முடித்து நல்ல உத்தியோகம் செய்ய ஆரம்பித்து விட்டனர். தியாகுவும் நல்ல இடங்களைப் பார்த்து அவர்களுக்குத் திருமணமும் செய்து வைத்துவிட்டான். மூத்தபிள்ளையென்றால் எல்லாப் பொறுப்பும் அவன் தலைமேல் தானே.

குடும்பங்களாகிவிட்ட சகோதரர்கள் நாட்செல்ல தியாகுவை வெறுத்தனர். தமது மனைவி, பிள்ளைகள், சொத்துக்கள், பணம், பொருளில் மட்டும் அக்கறையாக இருந்தனர். தியாகுவும் கடின உழைப்பால் நோய்வாய்ப்பட அவன் மனைவியும், பிள்ளைகளும் மிகவும் கஷ்டப்பட ஆரம்பித் தனர். சகோதரர்கள் யாவரும் தியாகுவின் தொடர்பைத் துண்டித்து. தனியாகச் சென்று விட்டதுடன் வயதான தாய் தந்தையரையும் கைவிட்டதுடன் கவனிப்பதும் இல்லாமல் போய்விட்டது.

www.tamilarangam.net



சிறிது காலத்தில் எல்லாச் சகோதரர்களும் பிள்ளைகளும் வெளிநாடு சென்று விட்டனர். நாட்டில் பிரச்சனைகள் அதிகரிக்கவே தியாகு குடும்பம் வறுமையால் வாடியது. இருந்த காணி, மனைவியின் தாலிக் கொடி விற்று அகதிக் குடும்பமாகத் தோணி ஏறி வயதான தாய் தந்தையரையும் அழைத்துக் கொண்டு இந்தியா வந்து சேர்ந்து விட்டான்.

இப்பொழுது இந்திய அகதிமுகாமில் வாழ்க்கை. மாதாந்தரம் கொடுக்கப்படும். உணவுப்பொருட்களோடு அவன் குடும்ப வாழ்வு ஓடிக் கொண்டிருக்கிறது. தன்னை வருத்தி, தன் கல்வியை இடை நிறுத்திச் சகோதரர்களைப் படிப்பித்து ஆளாக்கிய தன் சகோதரர்களை எண்ணிப் பார்த்தான். தெருவில்போகும் நாய்க்கு இந்த உதவிகளைச் செய்திருந்தால் அது வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் இருக்கும். இவர்கள் நாயைவிடக் கேவலமானவர்கள் என எண்ணிக் கண்ணீர் விட்டான். தியாகுவை ஒரு மெழுகுவர்த் திக்கு ஒப்பிடலாம் என்பது உண்மை தானே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10. கல்லறைப் பூக்கள்

சிவாவும்-புஷ்பமும் அருகருகே உள்ள ஹாலில் வசிப்பவர் கள்தாம். இருவரும் ஒரே பாடசாலையில் சிறுவகுப்பிலிருந்து உயர் வகுப்பு வரை படித்தவர்கள்தாம். சிவனின் பெயரைக் கொண்டிருக்கும் சிவா நல்ல அழகான கட்டுடலைக் கொண்டவன். புஷ்பமும் மலரைப்போல் அழகானவள் தான்.

உயர்படிப்பு படிக்கும் போதே இருவருக்கும் காதல் மலர்ந்தது. ஊரிலுள்ள பல சமூகப் பிரச்சனைகளால் இருவருடைய காதல் வாழ்வில் பல எதிர்ப்புக்கள் தோன்றி னாலும், உண்மையான இவர்களின் காதலுக்குக் களங்கம் ஏற்படவில்லை. பாடசாலையிலும், கோவில், விளையாட்டு நிகழ்வுகளிலும் இவர்கள் அன்பைப் பரிமாறுவார்கள். ஊரைப்பற்றியும், தம் உறவுகள் பற்றியும் நினைத்துக் கவலைப்படுவார்கள். "உண்மையாக நாம் இருவரும் நேசிக்கிறோம். ஏன் இந்தச் சனம் இல்லாத பொல்லாதவற்றைக் கூறி- நமக்குத் தடைபோடுகிறது?" எனச் சிவா புஷ்பத்திடம் கேட்டுக்கொள்வான்.

புஷ்பம் அமைதியானவள், அடக்கமானவள் அழகானவள். யார் எதைக்கூறி அவளின் மனதைக் குழப்ப வெளிக்கிட்ட வேளைகளில் அவர்களுக்கு ஏன்? எப்படி, எதற்கு என விளக்கமாகப் பதில் கூறிவிடுவாள். இருந்தபோதிலும் தனது வீட்டில் இக்காதலுக்கு பாரிய எதிர்ப்பு உண்டு என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. ஒரு நாள் சிவாவிடமிருந்து திடீரெனக் கடிதம் வந்திருந்தது. ஆவலுடன் பிரித்துப்

www.tamilarangam.net



படித்தாள். "புஷ்பா என்னை மன்னித்துவிடு. நமது காதலை விட நமது மக்கள் முக்கியம். இராணுவப்படைகளின் கொடுமையை எதிர்த்துப் போராடுவதற்காக நான் இயக்கத்தில் சேர்ந்துவிட்டேன். நன்றாக யோசித்துத்தான். இந்த முடிவு எடுத்தேன். எனக்கு வேறு வழியில்லை. மறுபிறவி என்றால் இருவரும் ஒன்று சேருவோம்" என எழுதி இருந்தான்.

கடிதத்தைப் படித்து முடித்த புஷ்பா கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். தனது தலைவிதியை நொந்துகொண்டாள். ஒரு கிழமையாக உணவின்றி, உறக்கமின்றி நடைப்பிணமாய் வாழ்ந்தாள். சிவா இல்லாத வாழ்வும் வாழவா என எண்ணித் தவித்தாள். எந்த உயர்ந்த இலட்சியத்திற்காகச் சிவா சென்றானோ அந்த இலட்சியத்தில்– அவளும் இயக்கத்திற் குப் போய்ச் சேர்ந்து விட்டாள்.

காலம் உருண்டது. மேலிடத்திலிருந்து கட்டளை கிடைத் தது. ஆனையிறவுத்தாக்குதல் உக்கிரமடைகின்றது. பல நாட்களாக உணவு, தண்ணீர் உறக்கம் இல்லாமல் போராட்டம் தொடர்கிறது. ஆனையிறவுத் தளம் வீழ்ச்சி, வீரர்கள் வெற்றி வாகை, சிவாவும், புஷ்பமும் போரில் மடிந்து விட்டார்கள் என்றும் அறிவிப்புக் கிடைக்கிறது. அவர்களின் உடலங்கள் ஊருக்கு கொண்டுவரப்படுகின்றன. ஊரே கதறி அழுகின்றது. பலவகையான சமய, அரசியல் வழிபாடுகளுடன் அவர்களின் உடலங்கள் ஒன்றாகக் கல்லறையில் மக்களின் கண்ணீர் வெள்ளத்தில் அடக்கம் செய்யப் படுகின்றன. அந்தக் கல்லறையில் பூவைத் தூவிய அவளின் தாய் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.

www.tamilarangam.net

# 11. விடுதலை

ஊரில் படித்து உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமி வாத்தியார் ஒரு வாயாடிதான். வாத்தியார் வேலை செய்து கொண்டு தனது ஐந்து பிள்ளைகளையும் படிப்பித்து உத்தியோகம் பார்க்க வைத்துவிட்டார். இதற்குக் காரணம் கந்தசாமி ஆசிரியர் தொழிலோடு அரசியல்வாதியாகவும் இருந்தமையே.

வாத்தியார் அவர்கள் அரசியல், இயக்கக் கூட்டங்களென்றால் அவர்தான் பேச்சில் முதலிடம் வகிப்பார். அவ்வளவுக்கு மக்களைக் கவரும் விடுதலைப்பேச்சுக்களை பேசி மக்களைத் தன்வசம் சேர்க்கும் திறமை படைத்தவர். உண்மைதான். இன்றைய நிலையில் தமிழர்களுக்கு விடுதலை கிடைத்தே ஆகவேண்டும். பல்லாயிரம் உயிர்கள் அழிவிலும் பலகோடி சொத்துக்கள் இழப்பிலும் இன்றைய போராட்டம் நீண்டு விட்டது.

நாட்டில் அவலங்கள் பெருகவே கந்தசாமி தனது மூன்று ஆண்பிள்ளைகளையும் இரண்டு பெண்பிள்ளைகளையும் கனடா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, இங்கிலாந்து, சுவீஸ் நாடுகளுக்குத் தனது அரசியல், இயக்கச் செல்வாக்கைப் பாவித்து அனுப்பிவிட்டார். தானும் மனைவி செல்லம்மாவும் ஓரிருவருடங்களில் வெளிநாடு வந்து சேர்ந்து விட்டனர்.

கந்தசாமி மாஸ்ரர் சும்மா இருப்பாரா இங்கே வெளிநாட்டிலும் அரசியல் பிரசங்கம் தான். கொண்டாட்டங்கள், பொது

www.tamilarangam.net



விழாக்களில் கந்தசாமி மாஸ்ரரோடு ஒரு கூட்டம் எப்போதும் காணலாம். மக்களை வசீகரிக்கும் தன்மை, அவரின் பேச்சு நடை, உடை பாவனை அத்தனையும் சேர்ந்து அவரை ஒரு செல்வாக்கான மனிதராகக் காட்டியது.

அன்றொருநாள் பிறந்த நாள் கொண்டாட்டம் பெண்கள் ஒருபுறம் பவுண், சாறி, ஊர்வம்புகள், ஆண்கள் தண்ணீர் அடி, அரசியல்விமர்சனம், உலக விமர்சனம் இதுதானே வழமை யானவை. கந்தசாமி மாஸ்ரரைச் சுற்றி ஒரு கூட்டம். மாஸ்ரர் விடுதலைப் போராட்டம் பற்றியும் நாட்டுநிலைமை பற்றியும். எல்லாரும் நாட்டுக்கு சென்று போராட வேண்டும் என்றும் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

திடீரென ஒரு குரல் ஒலித்தது. “தனது ஐந்து பிள்ளைகள் ஐந்து கண்டங்களில் சிற்றிசென் எடுத்து வாழுதுகள். வாத்தி இங்க லெக்சர் அடிக்குது. இதுதான் விடுதலை” என்றார் ஒருவர். வாத்தி வாய் மூடி மௌனமாகினார். இன்றுவரை வாத்தியார் விடுதலை என்ற பேச்சே எடுப்பதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 12. குடும்பம்

புலம்பெயர்ந்து வாழும் நகர் ஒன்றிலே சுமார் அறுபது குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. தம் தம் குடும்பம், உழைப்பு, பிள்ளைகள், எனத் தனித்து வாழ்ந்தாலும். அக்குடும்பத்தவர் களிடையே பல வேறுபாடுகளும் காணப்பட்டன. தமிழ்ச் சாதியம், ஊர், பிராந்தியம், படித்தவன், படியாதவன் பணக்காரன், ஏழை என்ற பேதம் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் நிலவும் பண்புகளாகும்.

இருப்பினும் தமிழர்களில் நல்ல சிந்தனை, ஒற்றுமை உள்ளவர்களும் இருக்கிறார்கள்தாமே. காலம் ஓடியது மன்றம், சங்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கல்விக்கூடம் தையல் வகுப்பு, மொழிவகுப்பு, விளையாட்டுக்கழகம் என்பனவும் சிறப்பாக இயங்கின. நாலு ஐந்து தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு ஓர் ஊர்போல் வாழ்ந்து வளர்ச்சிபெற்று வந்தது.

இந்த ஊரில் வாழ்ந்த அன்ரன் என்பவர் சற்று வித்தியாசமானவர். தானும், மனைவி, பிள்ளைகளோடு தனிவாழ்க்கையாக. மற்றைய தமிழர்களோடு கதைப்பதில்லை. கொண்டாட்டம். பொதுநிகழ்வுகளுக்கு வருவதில்லை. மனைவியை மற்றைய தமிழ்ப்பெண்களோடு கதைக்க அனுமதிப்பதில்லை. பிள்ளைகளைத் தமிழ்ப்பிள்ளை களோடு சேர விடுவதில்லை. ஓர் அந்நிய நாட்டுக்காரன் போல்தான் இவரின் வாழ்க்கை. மண்ணை மறந்து மக்களை நேசிக்காமல் ஒற்றுமையை மறந்து வாழவைத்தது. இந்த நாட்டு

www.tamilarangam.net



வசதிகளே இத்தமிழனுக்கு யார் புத்தி சொன்னாலும் ஏற்கமாட்டார்.

இவர் ஏனைய தமிழர்களால் தனித்து ஓரம் கட்டப்பட்டார். காலம் ஓடியது. கார்விபத்து ஒன்றில் இவரின் மகன் இறந்துவிட்டான். மரணச் சடங்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. மரணஅறிவித்தலும் தமிழ்க்கடைகள் சிலவற்றில் ஒட்டப்பட்டிருந்தது. மரணச்சடங்குப் பூசைவழிபாடு ஆரம்பமாகியது. தமிழர்கள் ஐந்து பத்துப்பேர் ஜேர்மன்காரர் பத்து இருபது பேர் மட்டும்.

ஜேர்மன் மதகுரு கேட்டார்: இந்த நகரத்தில் ஆயிரம் பேர் வரை வசிக்கிறார்கள். ஏன் இங்கு வரவில்லை என்றார். தமிழர்கள் அப்படித்தான் என்று தன் பிழையை மறைத்து ஒற்றுமை என்றால் என்ன என்று அந்தக் குருவிற்கு இவர் விளக்கமளித்தார். இந்த அன்ரன் குடும்பத்தைப்போல் எத்தனையோ தமிழ்க்குடும்பங்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13. மலடி

நவமும்-றஞ்சனியும் அந்த ஊர் பஸ்வண்டியில் தான் யாழ்கச்சேரிக்கு வேலைக்குப் போய் வருவார்கள். றஞ்சனியை விட நவம் ஐந்து வயது கூடியவன். அத்தோடு ஐந்து வருடங்கள் அரசசேவையிலும் அனுபவம் கூடியவன். வேலை செய்யும் இடத்தில் நவம் றஞ்சனிக்கு அவ்வப்போது பல உதவிகளைச் செய்துவருவான். இருவரும் ஒருநாள் காரியாலய விடயமாக தெல்லிப்பளைப்பகுதிக்குச் சென்று திரும்பி வரும்போது பஸ் விபத்துக்குள்ளானதால றஞ்சனை யின் காலில் காயம் ஏற்படவே அவளைக் காப்பாற்றி ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்து சுகம் பெறச் செய்து விட்டான்.

சிறிது காலத்தால் ஒரு நாள் இருவரும் கச்சேரி தேநீர் சாலைக்குத் தேநீர் அருந்தச் சென்ற போது தேநீர் அருந்தியவாறு இருந்தபோது றஞ்சனி இன்று எனக்குப் பிறந்தநாள் என்று கூறிய பொழுது அவன் எழுந்து அவளின் கைகளை இறுக்கிப்பிடித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தான். அவன் கைப்பட்டது அவள் உடலெல்லாம் மின்சாரம் பாய்ந்ததுபோல ஒரு உணர்வு. காலம் ஓடியது காதலும் மலர்ந்தது. திருமணம் நிறைவேறியது.

இருவரும் வேலையில் தொடர்ந்தனர் இரு வருடங்கள் ஓடின. குழந்தை ஒன்று பெற்றுக் கொள்வதில் இருவரும் ஆசைப்பட்டனர். இந்த ஊர் வாயைமூட வேண்டுமென்றால் ஒரு பிள்ளையைப் பெற்றே ஆகவேண்டும் என்று நினைத்து

www.tamilarangam.net



இருவரும் ஆஸ்பத்திரி எல்லாம் ஏறி இறங்கினர் பலன் கிட்டவில்லை. இருவரும் வெளிநாடு வந்து விட்டனர்

வெளிநாடுவந்த இருவரும். பல வைத்தியர்களிடம், பலமுறை பரிசோதனை செய்து கொண்டனர். பல பரிசோதனையின் பின் றஞ்சனிக்குக் கருத்தரிக்கும் சாத்தியம் உண்டு. மலட்டுத்தன்மை இல்லை என்றும் நவத்திற்கு இது எதிர்மாறாக இருக்கிறது. இனி ஆண்டவனின் கையில் என்று டாக்டர் பதில் கூறிவிட்டார். வீடு வந்து சேர்ந்த நவம் றஞ்சனியைக் கட்டிப் பிடித்து கதறி அழுதான். றஞ்சனி எனக்காக இந்தச் சமுதாயத்தில் நீ குற்றவாளியாக நிற்கிறாய், அவப்பெயரைத் தாங்கி நிற்கிறாய். நீ உண்மையிலே தெய்வம் தான். உன்னைப்போல எத்தனையோ பெண்கள் கண்ணீருடன் தெய்வமாகத்தான் வாழ்கிறார்கள். இதைப்புரிந்து கொள்ளாத எமது தமிழ்ச்சமூகம் உனக்கு மலடி என்ற பட்டத்தையே சூட்டிவிடுகிறது. இது கொடுமை என்னை மன்னித்துக்கொள் என்றான்.

வீட்டு மணி ஒலிக்கும் ஓசை கேட்டு கதவைத் திறந்தான். தபால்காரன் கடிதத்தைக் கொடுத்தான். அது இலங்கையி லிருந்து ஓர் அநாதை இல்லத்திலிருந்து வந்திருக்கிறது. அக்கடிதத்தில். நீங்கள் கேட்டிருந்த ஒரு அநாதைக் குழந்தைக்குப் பாஸ்போட், விசா எல்லாம் எடுத்து முடிந்து விட்டது. நீங்கள் இருவரும் இங்கு வந்து பிள்ளையை ஏற்றுக் கொள்ளலாம் என்றிருந்தது. இருவரும் கட்டித்தழுவி, கண்ணீர்விட்டு, சந்தோஷப்பட்டனர். இருவரும் நாட்டிற்குப் போகும் ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தனர்.

www.tamilarangam.net

# 14. சமரசம்

சிவலிங்கம் மாஸ்டரும், ரகுவரன் மெக்கானிக்கும் ஒன்றாகவே வெளிநாடு வந்தனர். கொடும்பனி, குளிர்தாங்க முடியாமல் இருவரும் அந்த அகதி முகாமில் தஞ்சம். ஆம் அகதி முகாம் என்றால் சொல்லவா வேண்டும். இரவு இரவாக தண்ணியடி, சீட்டாட்டம், தொலைக்காட்சி எனப் பொழுதுகள் உருண்டன.

அந்த அகதி முகாமில் தமிழர்கள் நூற்றுக்கணக்கானோர், அவர்களிடை நாம் தமிழர்கள் ஒற்றுமை பேணப்படவேண்டும். உழைக்க வேண்டும்; நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்னும் உணர்வு மேலோங்கி இருந்தது உண்மையே.

சிவலிங்கமும் ரகுவரனும் நல்ல நண்பர்கள். இருவரும் வேலை தேடி அலைந்தனர். காலையில் ஆரம்பிக்கும் வேலை தேடும்படலம். மாலையில் முடிவடையும். ஆனால் வேலைதான் கிடைக்கவில்லை. சோசல்காசோடு ஊருக்கும் அனுப்பிக் காலத்தைக் கழித்தனர்.

ஒருநாள் திடீரென ஒரு வான் (Van) வந்து அகதிமுகாமில் நின்றது. வானில் இருந்து இறங்கிய வெள்ளைக்காரன் டொச்மொழியில் சொல்ல ஒருவருக்கும் விளங்கவில்லை. கைப்பாஷையால் காட்டிவிட்டு மாஸ்ரர் சிவலிங்கத்தை அழைத்து வந்தார்கள். ஏனென்றால் மாஸ்டருக்கு ஆங்கிலம் தெரியும்தானே. மாஸ்ரர் வந்து அனுப்பிவிட்டார். மாஸ்ரர் கூறினார் நாளைக்கு வேலையாம் பத்துப்பேரைக் கூட்டி வரட்டாம் என்றார்.

www.tamilarangam.net



அடுத்த நாள் காலை ஏழுமணிக்கு வான் வந்து நின்றது. மாஸ்ரருடன் பத்துபேர் ஏறிக்கொண்டனர். வான் விரைவாகச் சென்று தோட்டத்தில் நின்றது. எல்லோரும் கோவாவை வெட்டும்படி பணிக்கப்பட்டது. வேலை ஆரம்பமானது. சிறிது நேரத்தில் எல்லோரும் களைத்துவிட்டனர். குளிர் ஒரு பக்கம், பசி, களைப்பு, வேலைக் கடினம், நேரம் ஓடியது வயதில் இளையவனான குலம் கண்ணீர்வடிய வேலை செய்து கொண்டிருந்தான். மாஸ்ரர் மெதுவாகச் சென்று குலத்தை விசாரித்தார். நான் ஒரே ஒரு செல்லப்பிள்ளையாக வளர்ந்தேன். இங்கு இந்த நிலையா? என்றான்.

மதிய இடைவேளை வந்தது சிறிது ஆறுதல் சூப்பும், பாணும் வந்தது. ஒருவாறு சமாளித்தனர். மாஸ்ரர் எழுந்து ஒவ்வொருவராக வினாவினார். ஊரில் என்ன வேலை செய்தனீர்கள் என்றார். மேசன் வேலை. தச்சு வேலை, கச்சேரியில் வேலை, கிராம சபையில் வேலை, ஆசிரியர் மாணவன், தோட்ட வேலை, வங்கியில் வேலை, கடையில் வேலை எனப் பட்டியல் நீண்டது. மாஸ்ரர் சிரித்துவிட்டுச் சொன்னார். ஆகா இதுவல்லவோ "சமரசம் உலாவும் இடம்" என்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 15. சந்தேகம்

யாழ்ப்பாணத்தில் வேறு வேறு திணைக்களகங்களில் வேலை செய்யும் சாந்தியும் சிவாவும் காதலர்கள். ஒரேபஸ்சில் செல்வார்கள். ஒரே பஸ்சில் வருவார்கள். கோயில் விழாக்களில் சந்தித்து மகிழ்வார்கள். காதல் நிறைவேறச் சீதனமும் குறுக்கே நின்றது பின்னர் ஒருவாறு முற்றுப் பெற்று வெளிநாடுவந்து உல்லாசவாழ்வு வாழ்ந்து இரண்டு பிள்ளைகளையும் பெற்று விட்டனர்.

அன்றொருநாள் சாந்தியுடன் படித்த நண்பர் ஒருவர் சிவா வீட்டிற்கு வந்திருந்தார். அன்று அவர்கள் பாடசாலை பழைய நகைச்சுவைகளைக் கூறி மனம்விட்டுப் பேசி சிரித்துக் கலகலப்புடன் காணப்பட்டனர். நட்பு நீடித்தது. அந்த நண்பனும் அடிக்கடி சிவா வீட்டிற்குத் தொலைபேசி எடுப்பான் அப்போது சாந்தியுடனும் சுகம் விசாரித்துக் கொள்வான்.

நட்புத் தொடரவே... சிவாவிற்கு சாந்தி மீது சந்தேகம் தோன்றியது; வளர்ந்தது. ஒரு நாள் சாந்தியை அடித்துக் காயப்படுத்தி விட்டான். அவள் எத்தனையோ நியாயங்களைக் கூறியும் சிவா ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த நண்பன் எத்தனையோ ஆறுதல் கூறியும் இவனால் ஏற்க முடிய வில்லை. அந்த நண்பனையும் தன் மனைவி சாந்தியையும் தொடர்புபடுத்தித்தானே பலருக்குக் கூறிவிட்டதோடு குடித்து விட்டு வந்து தினமும் அடிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டான்.

www.tamilarangam.net



சாந்திக்கு ஆறுதல் இல்லை. நிம்மதி இல்லை. உற்றார் உறவினர் இல்லை. பிள்ளைகள் இரண்டோடும் பெருந் துன்பப்பட்டாள். இது குடும்பப்பிரச்சனை என்று யாரும் ஏன்? என்று கேட்பது கூட இல்லை. வேறொரு நாட்டில் வசிக்கும் சாந்தியின் சகோதரர்க்கு இவ்விடயம் எட்டவே. அவர் கடுங்கோபங்கொண்டு பொலிஸ் பகுதிக்கு அறிவித்து விட்டார். பொலிஸ் வந்தது. சிவா கைது செய்யப்பட்டான். சாந்தியும் பிள்ளைகளும் தனிமை வாழ்வு. சந்தேகப்பட்ட கணவனோடு மீண்டும் ஒரு வாழ்வா? ஏன் இந்த வாழ்வு என வேதனைகளைச் சுமந்து கொண்டு தாய் நாட்டிற்குச் செல்வதற்காகக் கண்ணீர் சொரிந்தபடி தமது உடு புடைவைகளை பெட்டியில் அடுக்கினாள். சந்தேகம் ஒரு குடும்பத்தையே குலைத்துவிட்டது.

www.tamilarangam.net

# 16. உயிர்ப்பு

ஜெயன் நல்ல உடல்கட்டான வாலிபன். அவனின் நல்ல நிறத்தைப் போல் அவன் குணமும் அமைந்திருந்தது. வவுனியாக்கச்சேரியில் நல்ல பதவி ஒன்றில் வேலை பார்க்கும் அவன் மேலதிகாரிகளின் செல்வாக்கையும் பெற்றிருந்தான். அவனுடைய காரியாலயத்தில் கடமை புரியும் சிங்களப் பெண்ணான சுகுணாவதியோடு காதல் கொண்டிருந்த அவனுக்குச் சிங்களமொழி அவ்வளவாகத் தெரியாவிடினும் அரைகுறைச் சிங்களம் பேசிச் சமாளித்துக் கொள்வான்.

உண்மையான காதலுக்கு மொழி, மதம், இனம், சாதி, ஏதும் தடையா? இல்லவே இல்லை. காரியாலயம் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் இருவரும் கூடிக்குலாவி, மகிழ்வார்கள். ஜெயனுக்குச் சிங்களம் நன்றாகப் படிக்க வேண்டும் என ஆசை அதேபோல் தான் சுகுணாவதிக்கும் தமிழ்படிக்க வேண்டும் என ஆசை. இருவரும் காதல் பாடத்துடன் இந்த மொழிகளையும் படித்து வந்தனர்.

அவனுடைய மற்றைய தமிழ் அதிகாரிகள் பலர் அவன் காதலை எதிர்த்தனர். ஆனால் ஜெயன் அவள்மீது வைத்த காதல் உண்மையானது. அவளும் உயிருக்கு உயிராய் நேசித்தாள். இருவரும் சினிமா, பூங்கா என பொழுது போக்கியதுடன் புத்த விகாரை, கந்தசாமி கோவில் வரை சென்று வழிபட்டும் வந்தனர். இருவரும் உண்மைக் காதலுக்கு இலக்கணமாக நேசித்து வந்தனர்.

www.tamilarangam.net



ஒரு நாள் மேலதிகாரிகளின் கட்டளைப்படி காரியாலய விடயமாக மன்னாருக்குச் சென்று வரும்படி ஜெயன் பணிக்கப்பட்டான். மன்னாருக்குச் செல்லும் வழியில் விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்திற்கும் சண்டை நடக்கும் பிரதேசமென்றபடியால் பயப்பட்டான். என்ன செய்வது?

மேலதிகாரிகளின் கட்டளையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம். சுகுணாவையும் அழைத்துக் கொண்டு பஸ் வண்டியில் புறப்பட்டான். காட்டுவழியே சென்று கொண் டிருந்த பஸ்வண்டி திடீரென நடுவழியே மறிக்கப்பட்டது. தமிழர்கள் எல்லோரும் இறங்கி வரிசையாக நிற்கும்படி கட்டளை இடப்பட்டது. ஜெயனும் இறங்கி வரிசையில் நின்றபோது வெடிச்சத்தம் கேட்டது. இரண்டு வாலிபர்களைப் புலி என்று வெடித்துவிட்டார்கள். பதட்டம் அடைந்த சுகுணா பஸ்சிலிருந்து ஓடோடிச் சென்று ஜெயனைக் கட்டிப்பிடித்தபடி சிங்களத்தில் கத்தினாள். அழுதாள் "எனது காதலன், கணவன்" எனக் கத்தினாள். உடனே அந்த இராணுவச் சிப்பாய்கள் ஜெயன் நெஞ்சில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டனர். ஜெயனுக்கு உயிர்ப்பு கிடைத்தது. இருவரின் பயணம் தொடர்ந்தது. காதல் பயணமும் தொடர்ந்தது. உண்மையான காதலுக்கு வெற்றி கிடைத்தது.

www.tamilarangam.net

# 17. பொது உடைமை

காந்தன், மயூரன், ஜெயன் மூவரும் பாடசாலைத் தோழர்கள். பாடசாலையிலோ, ஊரிலோ வாசகசாலை, கோயில், நிகழ்ச்சிகளிலோ இளவயது தொடக்கம் முன்னின்று செய்துமுடிக்கும் திறமை படைத்தவர்கள். எந்தச் சம்பவமானாலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் எல்லோரும் சரிசமமாக வாழ வேண்டும் என்ற நோக்கில் பாடுபட்டு வருபவர்கள் தாம் இந்த மூவரும், மாவோ, லெனின், மார்க்ஸ் கருத்துக்களை நன்கு உள்வாங்கி இருந்த இந்த மூவரும் ஒருவருக்கொருவர் தோழர் என்றே அழைப்பார்கள். புதிய ஓர் சமுதாயத்தைப் படைத்து விட வேண்டும் என்ற துடிப்பும் காணப்பட்டது உண்மை தான்.

நாட்டில் உயிராபத்து நிலவவே மூவரும் ஒருவர்பின் ஒருவராக வெளிநாடு வந்து சேர்ந்தனர். வெளிநாட்டிற்கு வந்ததும் மூவரும் வேறு இடங்களுக்குத் தனித்தனியாகப் பிரிந்து விட்டனர். காந்தன் தான் வசித்த நாட்டு மொழியையும் நன்கு படித்துவிட்டு நல்ல சம்பளத்தில் வேலையும் தேடிக்கொண்டான். காலம் ஓடியது. பென்ஸ் கார், சீதனத்துடன் மனைவி தொகையான பணம் சேர்த்துவிட்டான். பணம் மீது அளவில்லாத ஆசை. பணம், பணம் என அலைந்து பெரிய பணக்காரன் ஆனான்.

மயூரனும், ஜெயனும் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தாம் உழைக்கும் பணத்தில் ஒரு பகுதியைத் தம்து குடும்பத் தாருக்கும், ஊர் வாசகசாலை, கோவில், அகதி முகாம்கள்

www.tamilarangam.net



இவைகளுக்கு அனுப்பி உதவிபுரிந்து வந்தனர். இப்போதும் பொது உடைமைக் கருத்துக்களைப் பின்பற்றியே வாழ்ந்து வந்தனர்.

ஆனால் காந்தனின் வாழ்வில் சரியான மாற்றம். ஆடம்பர வாழ்வு, பெரும் பணக்காரன், ஊருக்கோ அல்லது பெற்றோருக்கோ பணம் அனுப்பாமல், இங்கு வட்டி முதலாளியாய் மாறிவிட்டான். இவன் வாழும் இடம் பணம், பேராசை என்பனவே. இவனை மாற்றமடையச் செய்தது. பொதுவுடைமைக் கொள்கைகளை மறந்து ஒதுங்கி விட்டான். தான் சிறுவயதில் ஏனைய நண்பர்களுடன் துன்பப்பட்டவற்றை மறந்துவிட்டான். நம்மக்கள் படும் துன்பம், துயர்களை மறந்து விட்டான். பக்கத்து வீட்டு டொச்சுக்காரனுக்கு மேதினம் என்றால் என்ன என்று விளக்கமளித்துக் கொண்டிருந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 18. தாய்மொழி

கந்தசாமி, மகேஸ்வரன், சிவநேசன் மூவரும் சகோதரர்கள். ஊரில் கல்விகற்றுவிட்டு இளம் வயதிலேயே பிரான்ஸ், ஜேர்மனி டென்மார்க் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். வெளிநாடு வந்தவர்கள் தாமுண்டு தம்பாடு உண்டு என்று உழைத்துச் சம்பாதிப்பதுடன் திருமணத்தையும் கொழுத்த சீதனம் வேண்டி ஆடம்பரமாகச் செய்து கொண்டனர்.

வெளிநாடு வந்து பத்து வருடங்களுக்குப் பின் பிள்ளைகளும் பிறந்து விட்டன. ஆனால் ஒருவரை ஒருவர் சந்திப்பது கிடையாது. தொலைபேசியோடு மட்டும் உறவுகளின் பாசம் நீடித்தது. பிள்ளைகளும் வளர்ந்து விட்டனர். வீட்டில் தமிழ்ப்புத்தகங்களைக் காட்டுவது கூட இல்லை. தமிழ் சொல்லிக் கொடுப்பதில்லை. தமிழர் கொண்டாட்டங்களுக்குக் கூட்டிச் செல்வதில்லை. இப்படியே பிள்ளைகளை வளர்த்து வந்தனர். பிள்ளைகளும் அந்நிய மொழிதான் தமது தாய் மொழி என்ற நினைப்பில் வாழ்க்கை ஓடியது. பெற்றோரும் மொழி மீது அக்கறைப்படாமல் வளர்த்து வந்தனர். பணம் இருந்தால் மட்டும் போதும் என்ற நினைப்பு மட்டுமே மேலோங்கி இருந்தது.

தமது இளைய சகோதரியின் திருமணத்திற்கு மூன்று குடும்பங்களும் பதினைந்து வருடங்களின் பின் ஒன்று கூடினர். சகோதரர்கள் ஒன்று கூடுவதென்றால் எவ்வளவு சந்தோசம். எவ்வளவு ஆனந்தம். ஒன்று கூடி கட்டித்தழுவி அன்பைப் பரிமாறி, ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்தவண்ணம்,

www.tamilarangam.net



உழைப்பு, வீடு, கார், விசா சம்பந்தமாக அலசி ஆராய்ந்த வண்ணம் இருந்தனர்.

ஆனால் இந்த மூன்று குடும்பத்துப்பிள்ளைகளும் தனித்தனியே இருந்து தமது நாட்டுப்பாஷையில் ஏதோ ஏதோ எல்லாம் கதைத்துக் கொண்டிருந்தனர். ஓரிரண்டு பிள்ளைகள் அழுது கொண்டும் இருந்தனர். தாயார் ஒருவர் கண்ணுற்றார். ஏன் பிள்ளை அழுகிறாய் என்று கேட்ட போது. அவர்கள் கதைக்கிறார்கள் இல்லை என்று தனது மொழியில் கூறியது. அப்போது தான் இந்தச் சகோதரர்களுக்கு விஷயம் தெரிந்தது. பிள்ளைகள் ஒருவருக்கும் தமிழ் தெரியாது. ஆதலால் அவர்களால் ஒன்றும் கதைக்க முடியவில்லை. விளையாட முடியவில்லை. பிள்ளைகளின் எதிர்காலமே தெரியாமல் பாசம், அன்பு, உறவுகள் அற்ற வாழ்க்கை என்பது தான் வெளிநாட்டு வாழ்க்கை. பிள்ளைகள் மீது குற்றமா? நிச்சயம் பெற்றோரின் குற்றமே. பெற்றோர் வெட்கித் தலை குனிந்து தாய்மொழியின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கினர்.

www.tamilarangam.net

# 19. ஆச்சி

அந்த ஊரில் தங்கம்மா ஆச்சி என்றால் தெரியாதவர்கள் கிடையாது. ஏன் பக்கத்து ஊர்களின் சாதி சனங்களுக்குக் கூட தங்கம்மாவை-ஆச்சியை-நன்றாகவே தெரிந்திருந்தது. அவளின் கணவர் துரை; கடும் உழைப்பாளி. அந்தக் காலத்தில் படிப்புக் குறைந்தாலும். பண்பு மரியாதைக்குக் குறைவு இல்லை. இவர்களின் பத்து பிள்ளைகளில் ஒரு பிள்ளை இராணுவக் கொடூரத்தால் பலியாகிவிட்டது. மிகுதி ஐந்து பிள்ளைகள் குடும்பமாக வெளிநாடுகளில்.

தங்கம்மா ஆச்சியின் கணவர் துரையும் இறந்து பல வருடங்கள் ஓடி விட்டன. தங்கம்மா ஆச்சியை ஏனைய பிள்ளைகள் கவனித்து வந்தனர். எண்பது வயதிலும் தங்கம்மா கிழவி நடந்து திரிந்து தனது கருமங்களை தானே செய்து வருவார். தினமும் குளித்து நீராடி வெள்ளை உடை அணிந்து திருநீறு பூசி பக்கத்திலுள்ள அம்மன் கோவிலுக்குப் போய் வருவார்.

அவர் போகும் வழிகளில் சிறுவர் முதல் வயது வந்தவர்கள் கூட இடைமறித்து அவரிடம் கதைகளை அறிந்து கொள்வார்கள். முக்கியம் என்ன வென்றால் தனது பிள்ளைகள் அனைவரையும் நன்றாகப் படிப்பித்து, நல்ல தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து. நல்ல இடங்களில் திருமணம் செய்து கொடுத்து. மருமக்களையும் தன் பிள்ளைகள் போல் நேசித்து நல்வழியாக எந்த ஒரு பிரச்சனையும் வராமல் பாதுகாத்து தாய்க்கு தாயாக மாமிக்கு மாமியாக பாட்டியாக, பூட்டியாக இருந்து காலத்தைக் கழித்து வந்தார்.

www.tamilarangam.net



இது மட்டுமல்லால் கோயில் திரு விழாக்கள் வாசகசாலை நிகழ்ச்சிகள், கலியாணவீடு, சாமத்தியவீடு, மரணவீடு என்றால் கூட தன் செலவில் எல்லாவற்றையும் செய்து பொதுச்சேவைக்கு முன்னின்று உழைத்து அந்த ஊரின் முன்னோடியாகத் திகழ்ந்தார். இந்தத் தள்ளாத வயதிலும் கிழவி ஓடி காரியங்களைச் செய்யும். ஊரில் ஏதும் சம்பவம் என்றால் எல்லாரும் கிழவியிடம் சென்றுதான் ஆலோசனை, அறிவுரை கேட்டு நல்லபடி செய்து முடிப்பார்கள். இப்படியாகத் தனது குடும்பத்தைப்போல் அந்த ஊர் மக்களையும் நேசித்து வந்தார்.

ஒரு நாள் இரவு ஊரே அடங்கியிருந்தது. அமைதி நிலைகொண்டிருந்தது. கிழவியின் உயிரும் பிரிந்துவிட்டது. ஊர்மக்களும், அயல் ஊர்மக்களும், சொந்தங்கள் பந்தங் களுமாகக் கண்ணீர்விட்டுக் கதறி அழும் காட்சி அவலமாக இருந்தது. சுடுகாடு நோக்கித் தங்கம்மாக் கிழவியின் இறுதிப் பயணம் ஆரம்பமானது.

தங்கம்மா ஆச்சி போன்ற சில பெரியவர்களின் அறிவுரை களால் தான் சில குடும்பங்கள் பிரச்சனைகளை வென்று நல்ல குடும்பமாக வாழ்ந்து வருகின்றன. தங்கம்மா ஆச்சியின் நாமம் இன்றும் அந்த ஊரில் நிலைத்து நிற்கிறது.

www.tamilarangam.net

# 20. உயர்வு

தனது பதினைந்து வயதில் வெளிநாட்டுக்கு வந்த ராகுலன் ஊரில் படிப்பிலே, விளையாட்டுத்துறையிலே நல்ல கெட்டிக்காரன். காதல் அரும்பிய அந்தப் பதினைந்து வயதிலேயே தனது காதலி ராதிகாவை விட்டுப்பிரிந்து வரும்போது வேதனையுடன் தான் வந்தான். சுறுசுறுப்பான ராகுலன் வேலை தேடி அலைந்து பழைய பொருள்விற்கும் கடையொன்றில் வேலைக்குச் சேர்ந்ததுடன் பிறநேரங்களில் டொச்மொழி படிப்பதிலும், தமிழ்ப்புத்தகங்கள், சஞ்சிகைகள் வாசிப்பதிலும் கவனத்தைச் செலுத்தினான். போக்குவரத்துக்கு பணம் இல்லாதபடியால் தினமும் நடந்தே ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்கு வேலைக்குச் சென்றுவருவான். பின்பு சிறிது காசு சேர்த்து பழைய சைக்கிள் ஒன்றை எடுத்துப் பாவித்தான். சைக்கிள் பழுதடையவே பஸ் வண்டியில் போய் வந்தான். இத்தனைக்கும் மத்தியில் தனது காதலிக்கும் தனது வீட்டுக்காரருக்கும் கடிதம், பணம் அனுப்பத் தவறவே மாட்டான்.

சிறிது காலம் செல்ல புதிய சைக்கிள் ஒன்றை வேண்டி வேலைக்குச் சென்று வந்தான். வேலையில் ஜேர்மன் நண்பர்களைவிட ராகுலன் திறமையாக வேலை செய்யப் பதவி உயர்வும் கிடைத்தது. சம்பள உயர்வும் கிடைத்தது. சிறிது காலம் ஓடியது. ராகுலன் பழைய கார் ஒன்றை வேண்டி வேலைக்குப் போகலானான். திருமண வயதை அடைந்தான். தன்குடும்பத்திற்குப் பணம் அனுப்பி உதவியதுடன் தனது

www.tamilarangam.net



காதலிக்கும் பணம் அனுப்பிச் சீதனம் எதுவும் வேண்டாமல் அழைத்து விட்டான்.

ஆம் அன்று திருமண நாள். தனது அன்புக்காதலிக்குத் தாலிகட்டி முதலிரவு கொண்டாடப் புறப்பட ஆயத்தம் நல்ல விலை உயர்ந்த அழகான பென்ஸ் கார் ஒன்று அலங்கரித்தபடி வந்து நின்றது.

அக்காரின் சாரதியாக அவனுடன் ஜேர்மன்கார நண்பன் வந்திருந்தான். கார் புறப்பட ஆரம்பமாகுமுன் ஓர்சில கடிதங்களை அந்த ஜேர்மன் நண்பன் அவனுடைய காதலியிடன் நீட்டினான். அவளும் ஏதோ அன்பளிப்பு என கடிதத்தைப் பிரித்தாள். காரின் உரிமையாளர் யாரும் இல்லை. தனது அன்புக் கணவனின் பெயரே இருந்தது. புதுமணத் தம்பதிகள் கட்டியணைத்து முத்தமிட்டனர். ராகுலன் உழைப்பால் உயர்ந்தவன் என்று கூறி இரு ஜேர்மன் நண்பர்களும் கைகுலுக்கி விடைபெற்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21. சீதனம்

தமிழ்ச் சமுதாயத்தில் சீதனக்கொடுமை யாரைத் தான் வாழ வைத்தது. இதனால் எத்தனை குடும்பங்கள் சீரழிந்தன. எத்தனை உயிர்கள் பலியாகின. அப்பப்பா இப்படிக் கொடுமையா என்று படுக்கையில் சிந்தித்தவாறு கிடந்த நகுலன். இதற்கு மாற்று வழி இல்லையா? இது தலைவிதியா? என்று எண்ணியவாறு தூங்கி விட்டான்.

ஆம் நகுலன் தனது சகோதரிகளின் திருமணத்திற்குப் பணம் சேர்க்கும் நோக்கில் சவுதிநாட்டிற்குச் சென்று ஐந்துவருடம் உழைத்துவிட்டு ஐரோப்பா நாடொன்றிற்கு வந்திருந்தான். அங்கும் சில காலம் உழைத்து அனுப்பிவிட்டுக் கனடா சென்று அங்கும் உழைப்புத்தான். உழைப்பு பெருகவே சகோதரிகள் ஒவ்வொருவரின் திருமணமும் இரண்டு வருடங்களுக்கு ஒன்றாக முடித்துக் கொண்டிருந்தான்.

நகுலன் நல்ல உழைப்பாளி, நல்ல திடகாத்திரமானவன். அவன் கனடாவிலிருந்து உழைத்து அனுப்ப ஊரில் அவர்கள் ஆடம்பரவாழ்வு. அவன் கொட்டும் பனியிலும் கொளுத்தும் வெயிலிலும் நேரத்திற்குச் சாப்பாடு இல்லாமல் கடும் உழைப்பு, பணம் சம்பாதிப்பு. ஊரிலோ தாயும் பிள்ளைகளும் தேவை யற்ற செலவு, பணம் வீண் விரயம் செய்வது. ஊரில் நடப்பது நகுலனுக்கு எங்கு தெரியப்போகிறது.

இவன் தனக்கென்று ஒரு சதம் கூடச் சேகரித்து வைக்க வில்லை. பணம், பணம் என்று கொக்கரிக்கும் தாயாரின் ஆசைக்காகவே வாழ்ந்துகொண்டிருந்தான். வயதும்

www.tamilarangam.net



நாற்பதைத் தாண்டி விட்டது. தாயார்க்கோ அவனுக்குக் கலியாணம் செய்ய வேண்டும் என்ற சிந்தனை இல்லை. அவனாகவே கலியாணத்திற்கு விருப்பப்பட்டு ஊருக்குக் கடிதம் எழுதினான். பதில் இல்லை. நீண்ட நாட்களின் பின் தாயாரின் கடிதம் வந்தது. "தம்பி உனது நிலமையை எல்லாம் பெண்வீட்டாருக்குக் கூறினேன். அத்துடன் தலைமுடி ஒன்றும் இல்லை எண்டதும் கலியாணம் குழம்பி விட்டது. உனக்கு இங்குக் கலியாணம் பார்க்க முடியாது. கனடாவில் இருந்தால் பார்த்துச் செய்" என்றிருந்தது. தனது உழைப்பு, தனக்கென்று ஒன்றுமே இல்லை. என எண்ணிக்கண்ணீர் விட்டான். தனது மொட்டைத் தலையைத் தடவியவாறு வேலைக்குப் புறப்பட்டான் நகுலன்.

www.tamilarangam.net

# 22. ஆசை

பொன்னம்பலம் மாஸ்டர் குடும்பம் அந்த ஊரின் வசதியான பணக்காரக் குடும்பம். சாதியால் உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்வார்கள். ஊரிலுள்ள அரைவாசிக் காணிகள் அவர்களுக்குச் சொந்தம். பொன்னம்பலம் மாஸ்டர் வீட்டில் பெரிய மாட்டுப்பண்ணை, ஆட்டுப்பண்ணை, கோழிப் பண்ணை என எந்த நாளும் பல வேலையாட்கள். தனது நெல்வயல், காணிகளிலும் வேலையாட்கள்தான். மாஸ்ரர் நிதானமானவர்தான், சம்பளம். சாப்பாடு ஒழுங்காகக் கொடுப்பார். ஆனால் சாதியத்தில் மட்டும் கண்டிப்பானவர், கொடுமையானவர்.

ஒரு நாள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பையன் மயங்கிவிழுந்த போது கூட அவனைத் தூக்கி ஏற்றி வண்டியில் கொண்டு செல்லாமல் பக்கத்துத் தோட்டக்காரனை அதாவது சக தொழிலாளியைக் கொண்டு அவனை ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தார். அப்படியான சாதித்தடிப்பு, திமிர்படைத்தவர்தான் இவர். ஊர்ச்சனங்களும் என்ன செய்வது, பொன்னம்பலம் வாத்தியாரை விட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. தமது வீடுகளின் வறுமை நிலையை உணர்ந்து அடிமைத் தொழிலாளர் போல்தான் அந்தக் கிராமத்து மக்கள் இருந்தனர்.

சிறிது காலம் ஓடியது. பொன்னம்பலம் இளையமகள் அங்கு கூலி வேலை செய்யும் இன்னொரு சாதிப்பையனோடு காதல் கொண்டிருந்தாள். வாத்தியார் தனது மகளைக் கண்டித்து, பல

www.tamilarangam.net



புத்திமதிகளைக் கூறியிருந்தும் இளையமகள் தனது காதலை மறக்கமுடியவில்லை. கூலிக்காரக் காதலனையும் அடித்து களவெடுத்தவனென்று பட்டம் சூட்டிக் கலைத்தாலும் அவரின் மகளும் அவனும் சேர்ந்து ஊரைவிட்டே ஓடிவிட்டனர்.

பொன்னம்பலத்தாரின் மரியாதை பணத்திமிர் சாதிவெறி, எல்லாம் தவிடு பொடியாகவே. ஊரார், அவருடைய இன சனங்கள் வெறுத்தனர். பொன்னம்பலத்தாரின் மற்றைய பிள்ளைகளும் அவரைவிட்டு விலகி வேறு ஊர்களுக்குத் திருமணம் செய்து கொண்டு சென்று விட்டனர். வயதான அவரின் மனைவியாலும் ஒன்று செய்ய முடியாது. நோய்வாய்ப்பட்ட மனைவி படுத்தபடுக்கையில். திடீரென பொன்னம்பலத்தார் இறந்துவிட்டார். மரணச் சடங்கிற்குச் சொந்தங்கள், பிள்ளைகள் கூட இல்லை. அவரின் இளைய மகளைத் திருமணம் செய்த அந்த வாலிபனின்-அதாவது குறைந்த சாதியினர் எனக் கணிக்கப்பட்ட அந்தக் கூலித் தொழிலாளர்களே பொன்னம்பலத்தாரின் உடலைச் சுமந்து சென்று தகனம் செய்தனர். சாதி,மதம், பணம் அந்தஸ்து எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது அந்தக் காதல் ஜோடிகளின் இணைப்பு.

www.tamilarangam.net

# 23. உழைப்பு

குடும்பத்தில் இளையவனான சிவம் தனது மூத்த அக்காக்களின் வாழ்வு கருதி வெளிநாடு சென்றால் தான் சமாளிக்க முடியும் என்று நினைத்து வெளிநாடு புறப்படும்போது அவனது தந்தையாரும் நானும் வருகிறேன் எனக் கூற இருவருமாக வெளிநாடு வந்தனர். வெளிநாடு வந்த போது அங்கு அப்போது பெரும் கட்டுப்பாடு பக்கத்து நகருக்குச் செல்ல முடியாது. வேலை செய்ய முடியாது. சோசல் கொடுக்கும் பணத்தில் சாப்பிட்டு ஒரு பகுதியை மட்டும் ஊருக்கும் அனுப்பி வந்தனர்.

தகப்பனும் மகனும் வேலை தேடி அலையும் படலம் ஆரம்பம். பலன் இல்லை. இருவரும் ஒருநாள் அருகிலுள்ள பொழுது போக்குப் பூங்காவிற்குச் சென்றனர். அங்கே பெரும் தொகையான பியர்வெற்றுப் போத்தல்கள் காணப்பட்டன. இருவரும் அவற்றைச் சேகரித்துக் கடையில் விற்று சிறிது பணத்தைச் சேகரித்துக் கொண்டனர். இது அவர்களின் தொழிலாகவும் மாறியது.

வியாபாரச் சிந்தனை வளர்ந்தது. பெருகியது. படக்கொப்பி வியாபாரம் நடந்தது. வீடுவீடாகக் கொண்டு சென்று படக்கொப்பி, உடைகள், பவுண் விற்பதிலும் ஈடுபட்டனர். பணம் பெருகியது. தந்தையார் நாட்டுக்குத் திரும்பி விட்டார். சிவமும் நல்ல விசாப் பெற்றதால் அடிக்கடி சிங்கப்பூர்சென்று வந்து தனது வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டான். பணத்தைப் பெருக்கிக் கொண்டான்.

www.tamilarangam.net



காலம் ஓடியது. சிவம் ஒரு கடைக்குச் சொந்தக்காரனாகி விட்டான். ஒரு குட்டி முதலாளியாகியும் விட்டான், சகோதரிகள் நால்வருக்கும் திருமணம் நிறைவேறியது. ஊரிலும் அவர்கள் செல்வந்தர்களாகக் காணப்பட்டனர். மகன் அனுப்பும் பணத்தைக்கொண்டு தகப்பனாரும் ஊரில் ஒரு கடையைத் திறந்து விட்டார். குடும்பமே சிறந்து விளங்கியது. பாருங்கள் ஒருவன் தன் கடின உழைப்பால் எவ்வளவு தூரம் முன்னேறிவிட்டான்! அதுதான் சொல்வது கடின உழைப்புக்கு நிகரேது என.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 24. மாலை மரியாதை

சிதம்பரம் வாத்தியாரின் நான்கு பிள்ளைகளும் வெளிநாட்டில் நல்லபடியாக வாழ்கிறார்கள் என்று ஊரெல்லாம் பேச்சு. வாத்தியாரும் பிள்ளைகள் நான்கு பேரையும் நன்றாகக் கல்வி கற்பித்து, வளர்த்து, திருமணம் முடித்துத் தான் வெளிநாடு அனுப்பினார். அவர்கள் வெளிநாடு சென்று பத்து வருடங்களுக்கு மேல்.

வாத்தியாரும் மனைவியும் தனிமைதான். திடீரென ஒரு நாள் செல் தாக்குதலால் வீடு தரைமட்டம். மனைவி மங்கம்மாவின் உயிரும் பிரிந்து விட்டது. வாத்தியார் கடிதம் எழுதினார். "ஒரு பிள்ளையாவது நாட்டிற்குத் திரும்பி வாருங்கோ. சொத்துபத்துகள் சீரழியப்போகுது. வயது போன என்னை இறுதிக்காலத்தில் பார்க்க யாரும் இல்லை" என்று. ஆனால் பிள்ளைகள் ஒருவரும் திரும்பவில்லை. காசும் அனுப்புவதில்லை. வாத்தியாரின் சொத்துக்களும் சீரழிந்தன. ஓலைக் குடிசையில் வயதுபோன வாத்தியார் படுக்கையில் இருந்தார்.

பிள்ளைகள் நால்வரும் பத்துவருடங்களாகப் பணம் அனுப்புவதே இல்லை. பணம் குவிப்பதிலும், பவுண், கார் வெளிநாட்டு விசா பெற்றுத் தாம் பெரிய செல்வந்தர்போல் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

திடீரென செய்தி வந்தது. வாத்தியார் இறந்து இரண்டு மாதமாகிவிட்டது– என. வாத்தியாரின் மரணச்சடங்கை ஊரவர்கள் தாம் பணம் செலவழித்து நடத்தினார்கள்

www.tamilarangam.net



என்றிருந்தது. பிள்ளைகள் நால்வருக்கும் செய்தி பறந்தது. பெரிய மண்டபம் எடுத்து ஐந்நூறு பேர்வரை அழைப்பு விடுத்து இலங்கை, தாய்லாந்து நாடுகளிலிருந்து நேரடியாக மரக்கறி இறக்குமதி செய்து வீடியோ, போட்டோக்கள் எடுத்து ஆடம்பரமாக அந்தியேட்டியைச் செய்து முடித்துப் பெருமை கொண்டனர். இதுதான் வெளிநாட்டு வாழ்க்கை. உயிரோடு இருக்கும் போது பெற்றவர்களுக்கோ, உடன் பிறப்புகளுக்கோ, அல்லது அல்லல்படுவோருக்கோ உதவுவ தில்லை.

ஆனால் மரணமடைந்ததும் போலிக் கௌரவத்துக்காக இறந்தவர்களுக்கு மாலைமரியாதை செய்து நாடகமாடும் இப்பிள்ளைகளைப் போல் எத்தனை ஆயிரம் பேர் வெளிநாடுகளில் இன்றும் போலிக் கௌரவத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களோ?

www.tamilarangam.net

# 25. பூமிக்குச் சொந்தம்

ராமசாமி-கண்ணாம்பாள் மலைநாட்டில் வாழ்ந்த ஓர் குடும்பம். திருமணம் செய்து பதினைந்து வருடங்களில் நான்கு பிள்ளைகள். மலை நாட்டில் வேலை வாய்ப்பு குறைவடைந்த போது வறுமை தாண்டவம் ஆடியது. இதைவிடச் சிங்களவர் களின் கொடுமை. குடியிருப்புப் பிரச்சனை. இப்படியாகப் பல பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்காக இடம் பெயர்ந்து கிளிநொச்சியிலுள்ள ஓர் குடியேற்றத் திட்டத்தில் யாழ்ப்பாணத் தமிழரிடம் தஞ்சம் புகுந்திருந்தார். குடும்பமாகக் குடியேறிய ராமசாமிக்கு அந்த யாழ்த் தமிழர் குமாரசாமி தனியான குடிசையை அமைத்துக் கொடுத்து தனது தோட்டக்காணி, நெல்வயல்களில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

மலை நாட்டில் கடும்உழைப்பாளிகளாக இருந்த படியால் ராமசாமி குடும்பம் இங்கும் நல்ல வேலையாட்களாக இருந்தனர். முதலாளி குமாரசாமியின் நட்புக்குப் பாத்திரமாய் இருந்ததுடன் அவரின் வருவாய் பெருக்கெடுக்க உறுதுணை யாய் வாழ்ந்து வந்தனர். ராமசாமி ஒரு நாள் குமாரசாமியிடம் கேட்டான். “ஐயா எனது மூத்த இரண்டு பிள்ளைகளும் பள்ளிக்கூடம் போகவில்லை. சிறிசுகள் இரண்டையும் பள்ளிக்கு அனுப்புவம் என்று யோசிக்கிறேன்.” குமாரசாமி ஆத்திரப்பட்டார். பள்ளிக்கூடமோ...இவங்க படித்து கிளிக்கப் போகினமே... ஒன்றும் வேண்டாம் ஒழுங்காக எல்லாரும் தோட்டவேலைதான். இல்லை என்றால் அடித்துத் துரத்திப்

www.tamilarangam.net



போடுவேன்" என்றார். ஆமாங்க சாமி என்று ராமசாமி வாயைப் பொத்தியபடி நின்றான்.

என்ன செய்வது ராமசாமி குடும்பத்திற்குத் தலையெழுத்து இப்படியாக்கும் என்று நொந்தவாறு வேலைக்களத்தில் பிள்ளைகளோடு பாடுபட்டு உழைத்தான். ராமசாமியின் பிள்ளைகள் எல்லாம் அவரின் மனைவியும் கூட, வெளி நாட்டில். தனது சொத்துப்பத்துகளுக்காகவே ராமசாமியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகிறார். மாதத்தில் மூன்று நாலு தடவை கிளிநொச்சிக்கு வந்து போவார்.

ஒருநாள் இங்கு வந்தபோது ராமசாமிக் குடும்பம் அமைதியாகக் காணப்பட்ட போது "என்ன இன்றைக்கு சோகம்" என விசாரித்தபோது, ராமசாமியின் இளைய பிள்ளை துளசி பாம்பு கடித்து இறந்து விட்டாள். பிரேத அடக்கம் செய்யப் பணம் இல்லை. உறவுகளும் இல்லை. தோட்டக் காணியின் ஒரு மூலையிலே புதைத்துவிட்டோம் எனக் கதறி அழுதனர், இதைப் பார்த்த குமாரசாமி இதைப் பெரிசாக எடுக்காமல் தனது பொருள் பண்டக் கணக்கை கேட்டு விட்டுச் சென்றார்.

"அடபாவி! எங்கள் சோகத்தில் பங்கெடுக்காதவன் இவனும் ஒரு மனுஷனா? இவன் மிருகத்துக்குச் சமம்" என்று பேசிக் கொண்டிருந்தபோது ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்டது. குமாரசாமி மடியில் கட்டியிருந்த ஒரு லட்சம் பணத்துடன் பிணமாகக் கிடந்தார். காணி, நிலம், தோட்டம் பணம் யாவும் கஷ்டப்பட்டு உழைத்த ராமசாமி. குடும்பத்துக்குச் சொந்தமாகியது. குமாரசாமியின் உடல்மட்டும் பூமிக்குச் சொந்தமாகியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 26. ஊர்ப்பிள்ளை

புவனம் அக்காவும் கணவன் செல்வமும் அந்தக் கோடை கால வெயிலில் புல் தரையிலிருந்து தமது வளர்ப்புப் பிள்ளைகள் மூவரோடும் குதூகலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க எவ்வளவு சந்தோசம். ஆம் தமது இருபிள்ளைகளை விட தமது சகோதரியின் மூன்று பிள்ளைகளையும் தாங்களே பிணை வழங்கி வளர்த்து வந்தனர். புவனத்தின் பிள்ளைகள் இரண்டு. மூத்தது பெண் 18 மற்றது ஆண் 16 வயது.

வீடு ஒன்றாய் இருந்தாலும் புவனத்தின் இரண்டு பிள்ளைகளுக்கும் தனித்தனி அறை. ஆனால் இலங்கையில் இருந்து அண்மையில்தான் வந்த இந்த மூன்று பிள்ளைகளுக்கும் ஒரே அறை. அதுவும் வீட்டின் நிலத்தளப் பகுதியில் (கெலர்) பிள்ளைகள் மூன்று பேரும் அவ்வப்போது மேலே வந்து சாப்பிட்டு விட்டு அறையில் முடங்கிவிடும். ஆனால் இவர்களின் சொந்தப்பிள்ளைகளுக்கோ தனி அறை, ஜேர்மன் நண்பர்களோடு கும்மாளம் அடிக்கும். தனி அறை, தனித்தனி தொலைக்காட்சி, பல வசதிகள், அந்த மூன்று பிள்ளைகளுக்கும் வசதிகள், பொழுதுபோக்குச் சாதனங்கள் இல்லை. ஆடு, மாடுகள் போல் ஒரே அறையில் தான் வாழ்க்கை ஓடியது. இடைக்கிடையே செல்வம் அதாவது மாமன் தான் அப்பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறிவந்தார்.

காலம் ஓடியது பிள்ளைகள் மூன்றுக்கும் அன்பு, ஆதரவு, அரவணைப்பு இல்லாமல் போனது. மூவரும் தம்மை அப்பா-அம்மாவிடம் தாய்நாட்டிற்குக் கொண்டு போய்விடும்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழுதனர். கெஞ்சினர். செல்வம் ஆறுதல் கூறி சமாதானப் படுத்தி பாடசாலைக்கு அனுப்பினார். புவனம் அக்காவிற்குத் தான் பெற்ற பிள்ளையா? எனக்கென்ன என்ற மனப்போக்கு மேலோங்கி இருந்தது.

திடீரென அன்று ஒரு நாள் வீட்டுக்கு வந்து சிறுவர் பராமரிப்புப் பகுதியினர் பிள்ளைகள் மூவரையும் அழைத்து விசாரித்தபோது புவனமும்-கணவர் செல்வமும் இந்தப் பிள்ளைகளை வைத்துப் பணம் சம்பாதித்த விடயமும் பிள்ளைகளைக் கொடுமைப்படுத்திய விடயங்களும் வெளிவரவே இந்த மூன்று பிள்ளைகளையும் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். பிள்ளைகள் மூவரும் சந்தோசக் களிப்பில் அவர்களின் வெள்ளைவானில் ஏறிச் சென்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 27. விவாகரத்து

குமார்-கலா தம்பதிகள் அந்த ஊரில் வசித்து வரும் இளம் குடும்பத்தினர். இருவரும் நல்ல ஜோடி, அழகு, பணம், பொருள் யாவற்றோடும் சீராக வாழ்ந்து வந்தனர். இதைவிட இருவரும் நல்ல உழைப்பாளிகள். பணம் பெருகவே கலாவின் உறவினர்கள் பலரையும் வெளிநாட்டிற்கு அழைத்துக் கொண்டனர்.

கணவனின் பெருந்தொகையான சம்பளம். பிற வருமானங்களைப் புரிந்து கொண்ட கலா கோடீஸ்வரியாக வேண்டும் என எண்ணிக் கணவனை இரண்டு, மூன்று வேலைகளுக்குச் செல்லும்படி தூண்டுவாள். காசு என்றால் தான் எல்லாம் என கணவனுக்குக் கட்டளை. கணவன் குமாரும் ஒன்றும் செய்ய வழியில்லாமல் உழைப்பு, உழைப்பு என அலைந்து பெரும்தொகைப் பணத்தை அவளின் வங்கிக் கணக்கில் போட்டு விட்டான்.

கலாவிற்கு குணம், நடை, உடை பாவனை அத்தனையும் மாறின. கணவனையும் மதிக்காமல் நடந்தாள். உற்றார் உறவினர்களைகூட மதியாமல் தான் நினைத்தபடி தலைகீழாக நடந்தாள் பணத்திமிர் ஆட்டிப் படைத்தது.

சிறிது காலம் செல்ல, கணவன் கடும் உழைப்பால் நோய்வாய்ப்பட்டான். இவளின் மனமும் இளகவில்லை. வருத்தக்காரக் கணவனோடு என்ன செய்வது. தனது ஒரு பிள்ளையையும் அழைத்துக் கொண்டு தனிக் குடித்தனம் சென்றாள். கணவனும் பலமுறை அழுது மன்றாடி ஒன்றாய்

www.tamilarangam.net



இருப்போம் எனக் கேட்டான். பிள்ளைப்பாசம் யாரைத்தான் விட்டு வைக்கும். அவள் மசியவே இல்லை. பணம், பொருள், இளமை, அந்த நாட்டுச் சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி விவாகரத்துக் கோரிவிட்டாள். உடைகளை மாற்றுவதுபோல் கணவனையும் மாற்றலாம் என எண்ணங்கொண்டாளோ தெரியவில்லை.

கணவன் தாடியுடன் அலைகிறான். இவள் தனிவழி செல்கிறாள். குமாரின் அறிவீனம், பலவீனத்தால் பெரும் தொகை பணத்தையும் இழந்து, மனைவி, பிள்ளையையும் இழக்கும் நிலை ஏன் ஏற்பட்டது என்று பலர் யோசித்துக் கொள்வதில்லை. அதிகமாக ஆண்கள் வேலை என்று அலைந்து தாங்களும் நோய்வாய்ப்படுவர், குடும்பத்தை இழந்து இப்படித் தவிக்கும் ஆண்களைப் புலம் பெயர் நாடுகளில் அதிகம் காணலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 28. நட்பு

அப்துல் காதரும், அன்ரனும், சிவமும் அந்தக்கிராமத்தில் ஒன்றாய் வாழும் நண்பர்கள். அவர்களைப்போல் மூன்று மதத்தினரும் ஒன்றாய் வாழும் அந்த அழகிய கிராமத்தின் மக்கள் என்றும் நண்பர்களாய் அன்பாய் ஒவ்வொரு மதத்தவரும் தமது மதம், கலை கலாச்சாரப் பாரம்பரியங் களோடு வாழ்ந்து வருகிறார்கள். அந்தக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த இந்த மூவரும் ஒரே பாடசாலையில் கல்வி பயில்பவர்கள். விளையாட்டுப்போட்டி, கோவில் திருவிழா, நூல் நிலைய விழா இப்படி எந்த விழா அந்த ஊரில் நடைபெற்றாலும் இந்த மூவரையும் அங்கே காணலாம். எந்த மத வேறுபாடுகளும் இல்லாமல்ஒன்றாகச் சேர்ந்து பொது வேலைகள் செய்வதில் வல்லவர்கள்.

பலமதத்தையும் சேர்ந்த இந்தக்கிராமத்தில் எல்லோரும் ஒற்றுமையாக வாழும் மக்களாவர். அழகிய நீர் வளம், நிலவளம், நிறைந்த இந்தக் கிராமத்தில், சிறு கைத்தொழிற் சாலைகளும் உண்டு. எல்லோரும் உழைத்து உண்டு களித்து வரும் கிராமமாகும். நெல்வயல், தோட்டவேலைகள், கால்நடைகள் வளர்ப்பு, இதைவிடச் சிறு சிறு குடிசைக் கைத் தொழில்கள் நிறைந்த செல்வம் கொழிக்கும் கிராமமாக இக்கிராமம் மிளிர்ந்தது.

கால ஓட்டத்தில் விடுதலைப்போராட்டம் உக்கிரமடையவே இந்தக் கிராமத்தின் வாலிபர்கள், யுவதிகள் பலர் இயக்கங் களுடன் போய்ச் சேர்ந்துவிட்டனர். இராணுவ அட்டூழியங்கள்

www.tamilarangam.net



அதிகரிக்கவே அந்தக் கிராமத்தின் ஒற்றுமை குலைக்கப்பட்டு செல்வச் செழிப்புகள் பறிக்கப்பட, கிராமம் சின்னாபின்னப் பட்டது. அவரவருக்குத் தமது உயிர், உடமை, பிழைப்புக்காகச் சுயநலம் மேலோங்கியது. பொருள் வள முயற்சிகள் சீர்குலைந்தன. வறுமை தாண்டவமாடியது. இன ஐக்கியம் சிதறியது. சிலர் சுட்டுக்கொல்லப்பட்டதால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்கும் படலம் ஆரம்பமாகியது.

நாளடைவில் பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே செல்ல ஒரு மதமக்கள் இந்த மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்துல் காதருக்கும், அன்ரனுக்கும் சிவத்திற்கும் இவ்விடயம் எட்டியது. பதைபதைத்துப் போனார்கள். ஒன்றாய் ஒற்றுமையாய் வாழ்ந்த கிராமத்தில் இப்படி ஒரு வீண் விபரீதமா? என ஏங்கினார்கள். மூவரும் பல வழிகளிலும் முயற்சி எடுத்தனர். பலன் ஏதும் கிட்டவில்லை.

காலாதிகாலம் ஏன் நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சந்ததி சந்ததியாக மூன்று மதத்தவர்களும் ஒன்றாய் வாழ்ந்தோம் இந்த மண்ணில் பிறந்து, வளர்ந்து, விளையாடி, கால்பதித்து வாழ்ந்தோம். இந்த மண்ணைவிட்டுச் செல்வது எந்தவிதத்தில் நியாயம். பிழைவிட்டிருந்தால் விசாரணை செய்து குறிப்பிட்ட வருக்குத் தண்டனை வழங்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாக ஒரு இனத்தவர்க்கு இப்படித்தண்டனை வழங்குவது நியாயமாகாது என மூவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்த வேளை. வானில் வெடிச்சத்தங்கள் கேட்டன. அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்தக் கிராம மக்கள் எல்லோரும் கையில் எடுத்த துணிமணிகள், ஆடுமாடுகள், நாய் பூனைகளோடு அந்தக் கிராமத்தை விட்டு ஒட்டுமொத்தமாக வெளியேறினர். கிராமம் வெறிச்சோடியது. சோலைவனமான அந்தக் கிராமம் பாலைவனமாக மாறியது. அந்த அழகிய கிராமம் சுடுகாடு போல் தரைமட்டமாகியுள்ளது. இன்று பள்ளிவாசலும் தேவாலயமும், முருகன் கோவிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடிந்து விழுந்து காடாகக் காட்சியளிக்கின்றன. இந்த மூன்று நண்பர்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கமுடியாத தூரத்தில் வாழ்ந்தாலும், அன்பால் பிணைக்கப்பட்டு மீண்டும் சந்தித்து ஒன்றாய் வாழ்வோம் என்ற நம்பிக்கையோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 29. பாசம்

தாய் நாட்டின் அவலங்கள் மத்தியிலும் கணவனை இழந்த கண்மணி தனது மூன்று ஆண்பிள்ளைகளையும் உயர் படிப்பு படிக்க வைத்தாள். நாட்டில் உயிராபத்து நிலவவே மூன்று பிள்ளைகளையும் சுவீஸ், ஜேர்மனி, கனடா நாடுகளுக்கு அனுப்பி அங்கேயே அவர்களுக்குத் திருமணமும் முடித்து வைத்து நல்ல வாழ்வு வாழ வைத்தாள்.

தனது கடைசிமகனின் திருமணத்திற்கு ஜேர்மனிக்கு வந்த கண்மணி ஜேர்மனியிலே அகதி அந்தஸ்து கோரி வாழ்ந்து வந்தாள். கடைசி மகன் திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது. கண்மணிக்கு இனி தனது மருமகள் வயது போன தன்னைப் பார்ப்பாள் என்னும் நிம்மதிப்பெருமூச்சுவிடுமுன் மருமகளின் தனிக்குடித்தனம் அவளைக் கதிகலங்க வைத்தது. மாமியார் மீது இல்லாத பொல்லாத குற்றங்களைச் சுமத்தி மகனும் மருமகளும் தனிக்குடித்தனம் சென்று விட்டனர். தொடர்பு களும் துண்டிக்கப்பட்டன.

வருடங்கள் ஓடின மூன்று பிள்ளைகளும் தனித்தனி. ஒருவருக்கொருவர் கதைப்பதில்லை. தாயுடனும் தொடர் பில்லை. பேரப்பிள்ளைகளும் பிறந்தன. ஒரு பிள்ளையை யாவது கண்மணியால் தூக்கி முத்தமிட்டு வாரிசு என்று சொல்லமுடியவில்லையே என்று கலங்கியபடியே வாழ்க்கை. கண்மணி நோய்வாய்ப்பட்டாள். வயதும் ஏறிவிட்டது. வயோதிகர் மடத்தில் தஞ்சம் புகுந்தாள். அநாதையானாள். பிள்ளைகளின் தொடர்புகள் இல்லை. பெற்ற பாசமும்

www.tamilarangam.net



அடியோடு போய்விட்டது. தாய்நாட்டிற்குத் திரும்ப முடியவில்லை, சொந்த பந்தங்களும் இல்லை. இதுதான் வாழ்வா என்று ஏங்கிப் பெருமூச்சு விட்டாள். கருவில் சுமந்து பாலூட்டி, தேன் ஊட்டி, சீராட்டி வளர்த்த செல்வங்களை நினைத்து இரத்தக்கண்ணீர் வடிக்கும் நிலைதான். இந்த பெற்ற தாய்க்கு. வெளிநாடுகளில் தமிழர்வாழ்வில் பாசத்தை விட பணமே முன்நிற்கிறது என்பதைக் கண்மணி உணர்ந்து கொண்டாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 30. போராளிகள்

சாந்தினி, வைதேகி, சரஸ்வதி, கமலா நால்வரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். கல்விப் பொதுத் தராதர வகுப்பு பரீட்சையை எழுதிவிட்டு முடிவுகளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த நால்வரும் ஒற்றுமையாகவும் அந்நியோன்னியமாகவும் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்த போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சனை ஆரம்பித்து இருந்தது. நால்வரும் மாலை நேரம் நல்ல தண்ணீர் எடுக்கப் போகும் கிணற்றடியில் இருந்து ஊர்க்கதைகள் நாட்டு நடப்புகளைப் பேசி, கருத்துக்களைப் பரிமாறி அரட்டை அடித்து சிரித்து விளையாடிவிட்டு வீட்டுக்கு வருவார்கள்.

அந்த ஊரிலே இளம் வாலிபர்களுக்குத் தட்டுப்பாடுதான். பலர் இயக்கத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டனர். சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிட்டனர். சாந்தினியின் பாடசாலைக் காதலனும் இயக்கத்துக்குச் சென்று விட்டிருந்தபடியால் சாந்தினியும் இயக்கத்துக்குப் போகும் மனநிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாள். வைதேகிக்கு விருப்பமில்லாமலே அவளின் வீட்டவர் மணம் முடிப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். வைதேகிக்கு இதில் விருப்பம் இன்மையால் மனமுடைந்த நிலையில் இருந்தாள்.

சரஸ்வதி வீட்டிலோ, பத்துச் சகோதர சகோதரிகள். மிகவும் ஏழைக்குடும்பம் தகப்பனோ நித்தியம் குடிகாரன். தாயோ நோயாளி. தினமும் உணவுப்பிரச்சனை, உடைந்த வீடு, சகோதர சகோதரிகளுக்கு அத்யாவசிய உடைகளோ வேண்ட

www.tamilarangam.net



முடியாத வறுமைநிலை. சகோதரர் ஒருவரின் உழைப்பால் வாழ்வு ஓடிக்கொண்டிருந்தது. அடுத்து கமலாவின் குடும்பம் பெரிய பணக்காரர், காணி, நிலபுலம் நிறைந்த பெரும் வசதி படைத்தவர்கள். கமலாவின் பண வசதியால் தான் இந்த நால்வரும் ஒன்றாகச் சினிமாவுக்குப் போதல், திருவிழா, விளையாட்டுப்போட்டி என அவர்களுக்குப் பொழுதுபோய்க் கொண்டிருந்தது. பரீட்சை முடிவுகளும் வந்தது. ஒருவர் மட்டும் சித்தி பெற்றாள். மூவரும் கவலைகொண்டனர்.

ஒருநாள் மாலை நால்வரும் அந்த நல்ல தண்ணீர்க் கிணற்றடியில் ஒன்று கூடினர். நீண்ட நேரமாகப் பேசி முடிவுக்கு வந்தனர், நாம் எனி (இனி) தனித்தனியே வாழ்வதை விட ஒன்றாக இந்தச் சமுதாயத்துக்கு நல்லதைச் செய்ய வேண்டும். செய் அல்லது செத்துமடி என்ற வார்த்தைக்கு இணங்கி அந்த நால்வரும். அன்று இரவே விடுதலை இயக்கத்தில் போய்ச் சேர்ந்து விட்டனர். காலை விடிந்தது. அந்த நால்வரின் வீட்டிலும் மரணச்சடங்கு போல் அழுகுரல் கேட்டது. ஆனால் "தாய் நாடு காப்பதற்கு அவர்கள் சென்ற புனிதப்பயணம் புரியாது. ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்" என ஒரு வயோதிகரின் குரல் ஒலிக்கவே எல்லோரும் அமைதியானார்கள்.

www.tamilarangam.net

# 31. சகோதரர்கள்

சங்கரனுக்கு நான்கு ஆண்பிள்ளைகளுக்குப் பின் ஒரு பெண்பிள்ளை பிறந்திருந்தது. பெண் பிள்ளை பிறந்தவுடன் சங்கரனின் துணைவி சரஸ்வதி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். சிறு வயதிலிருந்து இந்த ஐந்து பிள்ளைகளையும் வளர்த்தெடுப்பதில் சங்கரன் மிகவும் கடினப்பட்டு உழைத்தார். பிள்ளைகள் வளர வளர பிரச்சனைகள் அதிகரித்தன. இளைய மகன் பாலனும், ஒரே ஒரு மகள் கௌசல்யாவும் படிப்பில் வல்லவர்கள். மற்றைய மூவரும், சண்டை, சச்சரவு, பழக்க வழக்கம் கெட்டுக் குடும்பம் சீர்குலைந்திருந்தது. தாயைச் சிறிய வயதில் இழந்த படியால் இந்தப் பிள்ளைகளின் வளர்ப்பில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

பிள்ளைகள் வளரவே ஆண்பிள்ளைகள் தாம் நினைத்தபடி வாழ்ந்து அடி தடி, சண்டை, சச்சரவு பொலிஸ், நீதிமன்றம் எனத் தொடர்ந்தது. பெண் பிள்ளைக்கு எங்கோ ஓரிடத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டார் சங்கரன். தான் செய்யும் கூலி வேலைச் சம்பளத்தோடு இளையமகன் பாலனை உயர்படிப்பை மேற்கொள்ள உதவினார். பாலனோ சகோதரர்களின் நிலைமைகளைப் புரிந்து படிப்பில் கவனம் செலுத்திப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்து ஓர் பொறியியலாளராக வெளியேறி வேலையும் பெற்று ஊரோடு வந்து விட்டான்.

www.tamilarangam.net



ஊர்வந்த அவனுக்கு மற்றைய சகோதரர்களால் பல இடையூறுகள். அவர்கள் வாழ்வில் மாற்றம் இல்லை. சிறியவனாகிய இவன் அவர்களுக்குப் பல புத்திமதிகள் கூறியும் அவர்கள் கேட்பதில்லை. குடி, சண்டை, பொலிஸ், பிரச்சனைகள் அதிகரிக்கவே. அவன் தனது வயதான தந்தையாரையும் அழைத்துக் கொண்டு கண்டிக்கு வேலைமாற்றம் சென்றுவிட்டான். காலம் ஓடியது. சகோதர சகோதரியை விட்டுப்பிரிந்து பத்து வருடங்கள் சென்று விட்டன.

இப்போது பாலனுக்கும் மலைநாட்டுத் தமிழ்ப் பெண்— நல்ல படித்த குடும்பத்துப் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாயிற்று. காதல் திருமணம் தான். சகோதரர்களுக்குத் திருமண அழைப்பிதழைக் கொடுப்பதற்காக இரவுப்புகையிரதத்தில் ஏறி காலையில் ஊர்வந்து சேர்ந்தான். தான் பிறந்து வளர்ந்து ஓடி விளையாடிய வீடு இடிபட்டு அலங்கோலமாகக் கிடந்தது. அயலவர்களை விசாரித்தான். ஒரு சகோதரர் சிறையில். மற்றவர் நோய்வாய்ப்பட்டு நடக்கமுடியாமல் ஆஸ்பத்திரியில். மற்றவன் திருமணம் செய்து வன்னியில். பெண் சகோதரி. வெளிநாடு சென்று விட்டாள். சோகம் தாங்க முடியாத மன வேதனையுடன் பாலன் கண்டிக்குப் பயணமானான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 32. சந்ததி

கந்தசாமிக்குத் திருமணம் முடித்து நான்கு ஆண் பிள்ளைகள். பிள்ளைகளும் வளர வளரச் சாப்பாடு, பாட சாலைச் செலவு ஏனைய குடும்பச் செலவுகள் அதிகரிப்பு ஒரு புறம். நாட்டின் இனப்பிரச்சனையால் உயிர் வாழ முடியாது. தொழில் செய்ய முடியாது. தாங்க முடியாத கந்தசாமி வெளிநாடு வந்துவிட்டார். இங்கு இருந்து சிறுதொகையாகப் பணத்தை அனுப்பிக் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டிருந் தார்.

கந்தசாமி கடும் உழைப்பாளி தினமும் இருவேளை, சனி, ஞாயிறு, ஒய்வுநாட்களிலும் கடும்பனி, குளிர் என எதுவும் பார்க்காமல் உழைப்பு. மனைவி பிள்ளைகளை வெளிநாட்டிற்குக் கூப்பிட்டு விட வேண்டும் என்ற ஆசை மேலோங்க பணத்தை உழைத்துச் சேகரித்து ஏஜென்சிக் காரனுக்குக் கட்டிவிட்டார். இதற்கிடையில் மூத்த மகன் இயக்கத்துக்குப் போய்விட்டான் எனக் கடிதம் வந்திருந்த போது. நாலில் ஒன்று நாட்டைக் காப்பாற்ற வெளிகிட்டது. சந்தோசம் ஒருபுறம்; கவலை ஒரு புறம் கந்தசாமியை வாட்டியது.

மற்றைய பிள்ளைகள் மூவரும் நன்றாய் வளர்ந்து விட்டனர். தாயுடன் வெளிநாடுவந்து சேர்ந்தனர். கந்தசாமியின் மிதமிஞ்சிய பண வருவாயைப் புரிந்துகொண்ட அவன் மனைவியும், பிள்ளைகளும் ஆடம்பரத்தில் மூழ்கினர். தேவையில்லாமல் பொருட்களை, விலை உயர்ந்த பொருட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை வேண்டி அடுக்கத் தொடங்கினர். அளவுக்கு அதிகமான பவுண் நகைகளை வேண்டிக் குவித்தாள். ஆடம்பரக் கார் ஒன்று வேண்டியாச்சுது பணவருவாயைக் கண்ட பிள்ளைகள் குடிப்பழக்கம். டிஸ்கோ, ஜேர்மன் பெண்களோடு சுற்றித் திரிய ஆரம்பித்து அவரவர் வந்த நான்கு வருடத்தில் கந்தசாமியின் பணத்தையும் அழித்து பிள்ளைகளும் தனிக்குடித்தனம் சென்று விட்டனர்.

ஒரு மகன் ஜேர்மன் பெண்ணொருத்தியுடன் சங்கமமாகி விட்டான். மற்றவன் மொட்டைத்தலையுடன் தோடும் குத்தி, தண்ணியும் அடித்துக் கொண்டு தெரு ஓர நாய்கள் போல் கண்ட இடத்தில் கிடப்பது; கண்ட இடமெல்லாம் திரிவது. இளையவனும் கோலங்கள் மாறி ஒரு மாதத்தில் ஓரிரு தடவை தாயை வந்து பார்த்துச் செல்வான். பிள்ளைகள் அனைத்தும் ஊதாரியாய் குடும்பத்துக்கோ, ஊருக்கோ, நாட்டிற்கோ உதவாதவர்களாகச் சென்று விட்டனர்.

மனைவியின் பிள்ளை வளர்ப்பில் குறை கூறிய கந்தசாமி மனைவி மீது கோபங்கொண்ட பொழுதெல்லாம் அவளும் விவாகரத்து என அவரை மிரட்டுவாள். கந்தசாமியால் என்ன முடியும்? வந்த மனைவியும் அப்படி; பிள்ளைகளும் அப்படி. “என்ற கடின உழைப்பும் அநியாயமாகப் போய் இன்று நான் நடுத் தெருவுக்கு வந்துவிட்டேன். இதுகளை இங்கே கூப்பிடாமல் விட்டிருக்க வேண்டும். இது எனது தவறு.” கூறிக்கொண்ட கந்தசாமி ஒருக்கா டாக்டரிடம் போட்டு வாறன் என்று கூறிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார்.

www.tamilarangam.net

# 33. விதவை

இருபது வயதில் திருமணம் முடித்த சரோவிற்கு இரண்டு பெண்குழந்தைகளும் அடுத்தடுத்துப் பிறந்து விட்டன. அவளது கணவனும் அவளது இருபத்தி நாலாவது வயதில் திடீரென ஒருநாள் இறந்து விட்டான். மாமியார் வீட்டில் இருந்த சரோசாவின் வாழ்விலும் புயல்வீச ஆரம்பித்தது.

மகனை இழந்த வேதனையில் தனது மருமகள் மீதும் பல இல்லாத பொல்லாத பிழைகளைப் பிடிக்க ஆரம்பித்த மாமியார் தனது பேரப்பிள்ளைகள் மீதும் போதாக்குறைக்கு இந்தப் பெட்டைக் குஞ்சுகள் எனத் திட்டித் தீர்ப்பார். மாமனார் சரோசாவிற்குப் பல ஆறுதல் கூறினாலும் மாமியார் கொடுமை அதிகரித்தது.

இந்த விதவைப் பெண்ணான சரோசா நல்ல காரியங் களுக்குப் போக முடியாது. நல்ல உடைகள் அணியக் கூடாது. எப்போதும் ஒதுங்கி வாழ வேண்டும். சமுதாயத்தில் ஓர் ஒதுக்கப்பட்ட பிரசையாக வாழவேண்டும். இதுதான் தமிழ்ச் சமுதாயம். இந்த விதவைக்குக் கொடுக்கும் கௌரவமா என எண்ணி வேதனைப்பட்டு அழுது தானும் இரண்டு பிள்ளைகளும் தனிக்குடித்தனம் சென்று விட்டனர். அத்துடன் படித்த பெண்ணான சரோசா உத்தியோகம் ஒன்றிலும் சேர்ந்து விட்டாள்.

காலம் ஓடியது. தனது பிள்ளைகள் இரண்டையும் நன்றாகப் படிப்பித்து பல்கலைக்கழகம் அனுப்பி விட்டாள். பட்டப் படிப்பை முடித்த பிள்ளைகள் ஒருத்திக்குத் திருமணமும்

www.tamilarangam.net



பேசிமுடித்து திருமண நாள் நிச்சயிக்கப்பட்டது. சரோசாவின் உத்தியோக நண்பர்கள் உறவினர்கள் நண்பர்கள் புடைசூழ திருமண வைபவம் ஆரம்பமாகியது.

அவளின் திருமணப்பிள்ளை தனது விதவைத் தாயைத் தேடினாள். தாய் எங்கோ ஒரு மூலையில் ஒளிந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். தாலிகட்டும் நேரம் நெருங்கியது. தனது விதவைத் தாயை அழைத்து வந்து "அம்மா! இந்தத் தாலியை நீங்கள் தான் எடுத்துக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எனது கழுத்தில் தாலி ஏறும். உங்களிடம்தான் முதல் ஆசீர்வாதம் பெறுவோம்" என உரத்த குரலில் கூறினாள். அப்போது சபையில் இருந்தவர்கள் "அவள் விதவை அல்லவா? எப்படி முன்னுக்கு வந்தவா?" என முணு முணுத்தனர். அவளின் காதுக்கு விழுந்து விட்டது. உடனே எழுந்த திருமணப்பெண் "எனது அம்மா இளவயதிலேயே கணவனை இழந்து தன் ஆசாபாசங்களைப் புதைத்துவிட்டு, கண்ணியத்துடன் நாணயமாகத் தான் வாழ்ந்தது மட்டுமல்லா மல் எங்களை நல்லநிலைக்குக் கொண்டு வந்த தியாகி, எந்த ஒரு ஆணும் செய்ய முடியாத காரியத்தைத் தனியே நின்று செய்து வைத்த தெய்வம். இந்தத் தெய்வத்தை வழிபடாமல், உணராமல் நீங்கள் ஏதோ ஏதோ எல்லாம் பேசுகிறீர்கள். இந்தச் சமுதாயத்தில் அம்மா ஒரு முன்மாதிரி. விதவைகளின் உணர்வுகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள், யாவற்றையும் புரிந்து கொள்ளுங்கள்" என்றாள். சபையோர் வாயைப் பொத்தி மௌனமானார்கள். கெட்டி மேளம் கொட்டியது விதவைத் தாய் தாலி எடுத்துக் கொடுக்க அவள் கழுத்தில் தாலி ஏறியது. விதவைத் தாயின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல எனக் கொட்டியது.

www.tamilarangam.net

# 34. மாறாத மனம்

தெருவிளக்குகள் ஒவ்வொன்றாகத் தமது கடமைகளைத் தொடர்கின்றன. வாகனங்கள் பேரிரைச்சலுடன் ஓடிக் கொண்டிருக்கின்றன. மாலை எட்டு மணியாகியும் சூரியன் தனது கடமையை முடித்துக் கொள்ளவில்லை. அவுஸ்லாண்டர் கைம் என்று அழைக்கப்படும் அந்தக் கட்டிடத்தின் அருகே ஒவ்வொரு நாட்டவரும் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்து கதைக்கின்றனர். ஆனால்சிறுவர்களோ இன வேறுபாடுகளை மறந்து ஒன்றாகச் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக் கின்றார்கள். ஒருபகுதியில் தமிழர்கள் ஆண் பெண் எனப் பத்துப்பேர் வரை இருந்து நாட்டு நிலைமைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்த நகரத்தில் வசிக்கும் குடும்பஸ்தர் மணியம் என்று அழைக்கப்படுபவர் வந்து சேருகின்றார். ஒரு குரல் "மணியண்ணை இருங்கோ. இந்தாங்கோ. ஜூஸ் குடியுங்கோ. சரியான வெய்யில்." வேண்டா வெறுப்புடன் சிறிதளவு பருகிவிட்டு அவ்விடத்தில் உட்காருகிறார்.

ஊர் நிலைகளையும் இங்குள்ள நிலமைகளையும் அதாவது பவுண் விலை தொடக்கம் வட்டிப்பணம் வரை எல்லோரும் கதைத்துக் கொண்டனர். மணியன்ணர் இந்த நகரத்தில் வதியும் குடும்பஸ்தர் நான்கு பிள்ளைகள். களவாக ஆறுவருடம் வேலை செய்பவர். வருமானம் எக்கச்சக்கம் அத்துடன் படம், துணிமணி, பவுண் வியாபாரம். மணியம் தொடர்கிறார் எனது மகனின் பிறந்த நாள் வாரம் திகதி, எல்லோரும் வரவேண்டும். இந்தநகரத்திலேயே மணியத்தின் கொண்டாட்டம் முதலாவது

www.tamilarangam.net



வரிசைக்குத்தான் வரும் ஜேர்மன்காரரே எக்கச்சக்கம். பாட்டுக் கோஷ்டி, நடனக்கோஷ்டி எல்லாம் வருகிறது இருந்து பாருங்கோ! திருவிழாத்தான். ஒரு குரல் இடைமறித்தது, மணியத்தார் அது சரி உங்கடவூர் குறைந்த சாதிப் பொடியன் களுக்குச் சொல்லவில்லையா? அவங்களுக்கென்ன சொல்கிறது. எங்களோடு நின்று சரி சமமாய், படமெடுத்தால் ஊரில் எங்களை மதிப்பாங்களே. எங்கட குலம் கோத்திரம் என்ன. பிறந்த ஊராக்கள்கூட எங்களை மதிக்க மாட்டினம். ஏன் எங்கட விட்ட அந்தப் பெடியன் சிலவேளை வந்தால் அவையளைக் கதிரையில் இருத்திக் கதைப்பதில்லை. அவைகளுக்கென்று கிளாசும் பிறம்பாக வேண்டி வைத்திருக்கிறேன். அதிலதான் தேத்தண்ணி கொடுத்து அனுப்புவேன். என்னொருவர் குரல். மணியண்ணை உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியாது. ஏன் 10 ஆயிரம் மார்க் கார் வேண்டி வைத்திருக்கிறியள். தம்பி என்ற விலாசம் உமக்குத் தெரியும் தானே. ஊரில் எங்கள் குடும்பம் வட்டிக்கு வட்டியில வளர்கிறது. இங்கும் விலாசம் வேணும் தானே. இந்த ஸ்ரட்டில் எல்லோரும். 2 ஆயிரம் 3ஆயிரம் பெறுமதியான கார்தானே வைத்திருக்கின்றார்கள். எனக்கு ஓட்டத் தெரியாவிட்டாலும் 10 ஆயிரம் என்ன புதிய பென்ஸ் ஒன்றும் எடுக்கவும் யோசிக்கிறன்.

என்னொருவர் இடைமறித்து அதுசரி சோசல் வீடுகள் எல்லாவற்றிலும் ஒரு ரெலிபோன்தான் இருக்கிறது. நீங்கள் போன் சிம்மர் படுக்கையறை, சமயலறை என 3 செலிபோன் பூட்டி வைத்திருக்கிறீர்களே என்றார். ஊரில் செலிபோனைக் கண்டிருக்கா விட்டாலும் இங்கே அனுபவிக்கத்தானே வேண்டும். மனிசியைக் கஷ்டப்படுத்தப்படாது என்று தான் குசினிக்கேயும் ரெலிபோன். அதில விசயமிருக்குது. நான் வேண்டும் வட்டிப் பணத்தை மனிசியிடம் கொடுப்பேன். அப்பணம் முழுவதையும் மனிசி யாருக்கும் கொடுத்து வட்டி வேண்டித்தான் மூன்று ரெலிபோன் காசு கட்டுகிறோம் இது பெரிய விசயமில்லை பாருங்கோ.

www.tamilarangam.net



நேரமாகுது நான் வீட்ட போகவேணும் என்று எழுந்த மணியண்ணரைப் பார்த்து பெண்ணொருத்தி அதுசரி வாற புதன்கிழமை எங்கட ஸ்ரட்டில் பெண்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டம் வைக்கப்போகினம் என்றார். மணியத்துக்குப் கோபம் பொத்திக் கொண்டு வந்தது. உங்களுக்கென்ன கூட்டம் அவளவைக்குப் புரிசன்மார் சரியில்லை. வேலையில்லாத பெண்கள் ஆடித்திரிகிறார்கள் என்று என்ர மனிசியையும் ஆடச்சொல்லிறியளா. என்ர மனிசியட படிப்பென்ன அழகென்ன ஒண்டு சொல்றன். இங்குள்ள ஆண்களுக்கு பெண்டுகளைக் கண்டபடி விட்டியளோ நாளைக்கு அவளவையே அடுத்தவனுடன் போட்டு வருவாளவை பார்த்துக் கொண்டு இருங்கோ என்றதும் ஆவேசம் கொண்டு எழுந்த ஒரு வாலிபன் "டே மணியா? நீ ஒரு மனிசனா? நீ மிருகத்தைவிடக் கேவலமானவன் நாட்டில் அகதிகள் முகாம்களில் சாதிபார்த்தா சாப்பிடுகிறார்கள். ஆமி சாதி பார்த்தா சுடுறான். நாடுகளில் ஒழிக்கேக்க சாதிப்பார்த்த ஒழிக்கினம். இவ்வளவு சனம் அழிந்ததும். உன்னைப்போல் எத்தனையோ மாடுகள் வெளிநாடுகளில் மேய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். உன்னை முதலில் சுட்டுத்தள்ள வேண்டும் உன்ர குடும்பவிலாசம் எங்களுக்கு தெரியாதென்று அலட்டுகிறாய் உன்ர சகோதரி குறைந்த சாதிப்பெடியனை முடித்தவளென்று செத்த வீட்டுக்கும் கூட அழைப்பதில்லை உன்ர அண்ணன் குறைந்த சாதிப்பெண்ணை காதலித்தது உங்கட தொல்லை தாங்க மாட்டாமல் தற்கொலை செய்தவன். உங்கள் குடும்பமே வட்டி முதலைகள். இங்க வந்து விலாசம் எழுப்புவதுடன் மற்றவர்களையும் குழப்பிப் பெண்களையும் அடிமைப்படுத்துகிறாய் போடா வெளியே!" என்றதும் நைசாக மணியத்தார் செல்கிறார். கூடியிருந்த சனங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அந்தத் தம்பி சொல்வது நியாயமெனப் படுகிறது எனப்பேசிக் கொள்கிறார்கள். மணியத்தின் பிறந்த நாளுக்கு ஒருவரும் போவதில்லை எனப் பேசிக் கொண்டு தமது வீட்டுக்குச் செல்கின்றனர். சிறுவர்கள் விளையாடிக் கொண்டே இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

# 35. அப்பா வேலைக்குப் போகிறார்

அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்த தங்கம் பம்பரம் போலச் சுறுசுறுப்பாகத் தனது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். கணவன் சபாரத்தினத்திற்குக் காலை நான்கு மணிக்குப் பெட் கோப்பி கொடுத்தால் தான் நித்திரைவிட்டு எழும்புவார். பெட் கோப்பியைக் குடித்து விட்டு வளைந்து நெளிந்து, உடம்பை முறுக்கெடுத்து விட்டுத்தான் நித்திரை விட்டு எழும்புவார்.

கணவன் வேலைக்குக் கொண்டுபோவதற்காக காலைச் சாப்பாடு, மதியச்சாப்பாடு, கோப்பி, பழம் எல்லாம் தயார் பண்ணி அவரின் பையில் வைத்து ரெடியாகிவிடும் போது ஐந்து மணியாகிவிடும். ஐந்தரைக்குக் கோப்பி குடித்துவிட்டுச் சபாரத்தினம் வேலைக்குப் போய்விடுவார் தங்கம் பிள்ளைகள் பாடசாலைக்குக் கொண்டுபோவதற்கு காலைச்சாப்பாடு, மதியச்சாப்பாடு எல்லாம் செய்து முடித்துவிட்டு, பிள்ளைகள் ஒவ்வொன்றாகத் தூக்கத்திலிருந்து எழுப்பு கோப்பி, பால்கொடுத்துப் பாடசாலைக்கு அனுப்புவாள். இதற்கிடையில் இளையவன் ராகுலனை சிறுவர் பாடசாலைக்கு காலை ஒன்பது மணிக்குப்போய் திரும்ப அழைத்து வருவாள். இதற்கிடையில் மதியச் சாப்பாடு செய்தல், உடைகளைக் கழுவிக் காயப்போடுதல், வீட்டைத் துப்பரவு செய்தல், அழகு படுத்துதல், கடைக்குப் போய் சாமான்கள் வேண்டுவது. அத்தனையும் அவள் செய்யும் வேலைதான்.

www.tamilarangam.net



சபாரத்தினம் ஐந்துமணிக்கு வேலைமுடிந்து வீடுவந்து விட்டார். தொலைக்காட்சிப் பெட்டிக்குமுன் குந்தி விட்டார். கோப்பி கொண்டுவா. சிற்றுண்டி கொண்டுவா என உண்டபடியே தொலைபேசியிலும் மணித்தியாலக்கணக்கில் கதைத்து அரட்டை அடிப்பார். இதற்கிடையில் தங்கத்துக்குச் சிநேகிதி ரெலிபோன் எடுத்துக் கதைத்தாள். சபாரத்தினம் வெடுக்கென்று எழுந்தார். "என்னடி மணிக்கணக்கில கதை... நான் உழைக்கிற காசு இப்படித்தான் கரையுது. உங்களுக்கு வந்த வசதி என இல்லாதது பொல்லாதது சொல்லிப் பேசவே தங்கத்துக்குக் கோபம் வந்து விட்டது. ஐயோ... அது அவள்தான் டெலிபோன் எடுத்தது. எங்கட காசு போகாது. நீங்கள் ஏன் துள்ளிக் குதிக்கிறியள் எனத்தங்கமும் திட்டித் தீர்த்தாள். அவருக்கு கோபம் வந்துவிடவே தங்கத்திற்கு இரண்டு மூன்று அடிவிழுந்து விட்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மூத்தவள், பத்து வயதான தர்சினி ஓடிவந்து தாயைக் கட்டிப் பிடித்து, சமாதானம் செய்தாள். அப்பா பேசாதுங்கோ. பக்கத்து வீட்டுக்காரர் பொலிசுக்கு ரெலிபோன் அடித்துப் போடுவினம். என்றதும் சபாரத்தினம் மௌன மானார்.

இரவுச்சாப்பாட்டை முடித்த தங்கம் பிள்ளைகளையும், கணவனையும் மேசைக்கு அழைத்தாள். எல்லோரும் மௌனமாக வந்து மேசையில் இருந்து உணவை உண்டனர். சபாரத்திரனம் மௌனமானார். எது எப்படி நடந்தாலும் இரவு நெருங்கினால் அநேக ஆண்கள் மௌனம் தானே. மௌனத்தைக் கலைத்த சபாரத்தினம் "தங்கம் கொஞ்சம் மீன் குழம்பு விடன்" என்று கதையை ஆரம்பித்து அவளைச் சமாதானப்படுத்த முற்பட்டார். தங்கத்திற்கு ஆத்திரம் பீறிட்டது. "இங்க பாருங்கோ நீங்கள் வேலைக்குப் போய் எட்டு மணத்தியாலம் வேலை செய்தால் உங்கள் கடமை முடிந்து விட்டது. நான் நித்திரை விட்டு எழும்புவது தொடக்கம் நித்திரைக்குப் போகும் வரை இயந்திரமாய் வேலை

www.tamilarangam.net



செய்கிறேன் இந்த மூன்று பிள்ளைகளையும் வளர்த்தெடுப் பதில் எவ்வளவு கஸ்டப்படுகிறேன். இதைக் கொஞ்சம் புரிந்து கொள்ளுங்கோ. அப்பாதான் வேலைக்குப் போகிறார். அம்மா வீட்டில் சும்மா இருக்கிறாள் என எல்லா அப்பாக்களும் சொல்லும் படலத்தை நீங்கள் எனிமேல் சொல்லாதிங்கோ என்றதும் சபாரத்தினம் விழிப்படைந்தார். உன்னைப் புரிந்து விட்டேன் தங்கம் என்னை மன்னித்துவிடு என்று கூறி இருவரும் உணவை முடித்து விட்டுப் படுக்கை அறை நோக்கி சென்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 36. கோவில்

பார்வதி அம்மா மிகவும் பக்தியுடையவர். வெள்ளி, செவ்வாய் ஏனைய விரத நாட்களெல்லாம் விரதம் அனுட்டிப்பவர். பிள்ளைகள் மீரா, யதுரா, சாரா யாவரும் தாயைப் போல் பக்திதான். சிறிய கிராமமான மீசாலையில் வசிக்கும் இவர்களுக்குச் சாவகச் சேரிச்சந்தை கிட்டிய தூரம் தானே. மரக்கறி பழவகைகள் வேண்டுவதில் சிரமம் ஏற்படவில்லை. பார்வதியின் கணவன் விசுவமடுவில் தோட்டச் செய்கை. ஆனபடியால் மரக்கறிக்குப் பஞ்சமே இல்லை.

பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்களாகி விட வீட்டின் ஒரு பகுதியிலுள்ள வேப்பமரத்துக்குக் கீழ் சிறிய ஒரு கோவிலைக் கட்டி வழிபட ஆரம்பித்தனர். மூத்தவள் மீரா தனது பாடசாலை சமயபாடத்து ரீச்சரையும் அழைக்கவந்து வெள்ளிக்கிழமைகளில் பாடல் தேவார நிகழ்ச்சிகளையும் செய்து அந்தக் கிராம மக்களை ஒன்று கூடச் செய்து ஓர் சமய, மொழிப்பற்றுள்ள சமுதாயமாக மாற்றுவதில் பாடுபட்டாள்.

மீராவுக்கு வயது ஏறியது. மாமிசம் உண்பதையும் நிறுத்திவிட்டாள். சைவக்குடும்பத்தில் மாப்பிள்ளையும் கிடைத்துவிட்டார். நாட்டில் பிரச்சனையும் அதிகரித்தது. வெளிநாடு வந்த மீராவுக்கு அடுத்தடுத்து மூன்று பிள்ளை களும் கிடைத்துவிட்டது. இங்கு வந்த மீராவுக்கு குளிர், பனி, பிள்ளைகளோடு கஸ்டம், இயந்திரவாழ்க்கை, சிறைச்சாலை வாழ்க்கை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. மதப்பற்றுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவளும் கோவிலுக்கு போகாமல் இருப்பது பெரிய துன்பமாகப்பட்டது.

சிறிது காலத்தில் கணவனும் குடிக்கு ஆளாகிவிட்டான். மாமிசம் உண்ணவும் பழக்கப்பட்டான். அவளும் வேண்டா வெறுப்புடன் உண்டாள். மனதுக்கு ஆறுதல் கிடைப்பதற்காக தனது வீட்டிற்கு அருகிலுள்ள கிறிஸ்துவக் கோவிலுக்குப் போய் வந்தவள்தான். நாளடைவில் கிறிஸ்துவ மதத்தில் அளவிலா ஆசை, மதிப்பு கொண்டாள். அவர்களோடு சென்று பிரசங்கம் கேட்பாள். அவர்களின் ஆசியை வேதவாக்காக எண்ணித் தலைப்பட்டாள். இந்து மதம் மீது கொண்டிருந்த பற்று கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது.

கணவனுக்கும்-மீராவுக்கும் ஒரு நாள் வாக்குவாதம். என்ன நீ வர வர என் சொல்லைக் கேட்கிறாயில்லை. பிள்ளைகள் மூன்று பேரையும் என்னிடம் விட்டுவிட்டு, மணிக்கணக்கில் வேதக்கோவிலில் இருந்து விட்டுவாறாய் என்றான். ஆண்டவன் என்னை அழைக்கிறார், என்னை நேசிக்கிறார். நான் அவருக்குப் பணி செய்ய வேண்டும் என்றே அடுக்கிக் கொண்டு போனாள். எடி எடி நீ கனக்கப் பேசாதை. ஊரில் வீட்டிலை கோவில்கட்டி, பூசை செய்து, விரதமிருந்து பெருமைப்பட்ட குடும்பம். இங்கு வந்து எல்லாவற்றையும் மறந்து, ஏன் பிள்ளைகள், என்னைக்கூட மறந்து ஆண்டவன், கோவில் என்கிறாய். நாளைக்கு இந்தச் சமயம் சரியில்லை என்று என்னொரு சமயத்துக்கு மாறுவாய். ஏன் அப்படி யென்றால் கட்டிய புரிசனையும் மாற்றுவாய். உனக்கல்லாம் ஒரு கோவில் வழிபாடு. உன்னை ஊருக்குத் திருப்பி அனுப்பினால் தான் திருந்துவாய் என்றான். இளைய பிள்ளையின் அழுகுரல் கேட்ட மீரா அறைப்பக்கம் விரைந்தோடினாள்.

www.tamilarangam.net

# 37. பரதம்

சாரதாவும் அகிலாவும் இரண்டுவயதில் வெளிநாட்டுக்கு வந்தவர்கள். பெற்றோருடன் ஜேர்மனிக்கு வந்த இவர்களுக்கு சிறிகாந்தன் என்னும் சகோதரனுடன் குடும்பத்தில் ஐந்து பேராகினர். தற்போது படித்துப் பதினெட்டு, பதினாறு வயதுக் குமரிகளாக வளர்ந்து விட்டனர். இக்காலத்தில் இவர்களை வளர்த்தெடுப்பதில் பெற்றோரான சிங்கராசாவும் மனைவி சரோசாவும் படாதபாடுபட்டனர்.

சிங்கராசா கடும் உழைப்பாளி பணம் சம்பாதிப்பதில் வல்லவர். இரண்டு மூன்று வேலைகள் செய்து உழைத்துப் பணம் சம்பாதித்ததுடன் பெண்பிள்ளைகள் இரண்டையும் பரதநாட்டியம் பழக்குவதில் ஈடுபட்டிருந்தார். சிங்கராசா குடும்பத்தவர்கள் சாதாரணமாகப் பத்தாம் வகுப்புத்தான் படித்தவர்கள். பரதநாட்டியம் பழகி அரங்கேற்றம் காணும் நிலை எட்டியது.

இந்தப் பிள்ளைகளுக்குப் பரதக்கலை பயிற்றும் ஆசிரியையோ சிங்கராசா குடும்பத்தவரோடு மிகவும் ஐக்கியமானவள். பழகும் காலங்களிலெல்லாம் ரீச்சருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வேண்டிக் குவிப்பதில் கெட்டிக்காரி மூத்தவள். இவள் ஆடம்பரத்தில் மூழ்கி சிங்கராசாவின் பணத்தைக் கரைப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தாள். இளையவளோ வீண் செலவுகள் ஏன், ஆடம்பரம் ஏன் என எளிமையாக வாழ முயன்றாள். சிங்கராசர் என்ன செய்வது? மூத்தவளின் சொல்லுக்கு ஆமாப்போட்டுத்

www.tamilarangam.net



தலையாட்டினார். தாயும் என்ன செய்வாள் கணவனின் முடிவுதானே அவளின் முடிவு.

பரத நாட்டியம் அரங்கேறும் நாள் குறித்தும் விட்டனர். ஆசிரியை வாணி சிங்கராசா குடும்பத்தை அழைத்துப் பெரிய ஒரு லிஸ்ரையே போட்டுக் கொடுத்தார். அலங்காரப் பொருட்கள், உடை, அழைப்பிதழ், புத்தகம், அரங்கேற்றக் கலைஞர்களுக்கு ஆடைகள், ரொக்கப்பணம், இப்படியாக எழுதிய ஆசிரியை தனக்கு 5 பவுணில் அட்டியல் எனக்கணக்கிட்டதோடு இதையெல்லாம் இங்க வேண்ட முடியாது. இங்கே பெரும் தொகைப் பணம் வீணாகும் எனக் கூறிய ரீச்சர் தான் இந்தியாவிற்குப் போய் வேண்டி வருவதாகவும், தனக்கும் கணவனுக்கும் பிளேன் ரிக்கட் எடுக்க வேண்டுமெனவும் கூறி ஐம்பது ஆயிரத்திற்குக் கணக்கு வந்தது.

சிங்கராசர் விழிபிதுங்கினார். மூத்த மகள் சாரதா ஆம் ரீச்சர் என்று கூறிவிட்டாள். வீடு வந்து சேர்ந்த அகிலா அப்பா இவ்வளவு ஆடம்பரம் தேவையா? ரீச்சருக்கு என்ன 5 பவுணில் அட்டியல். எல்லாருக்கும் காசு கொடுக்கிறோம் தானே. இந்த இரட்டிப்பான செலவுகளைக் குறைத்து ஆடம்பரமில்லாமல் சாதாரணமாகச் செய்யலாம்தானே என்றாள். தாய் சரோசாவும் மூத்தவளின் சொல்லுக்கு ஆமாம் போட்டாள். அரங்கேற்றம் தடல்புடலாக நடந்தேறியது.

அடுத்த நாள் சிங்கராசாவும் மனைவி பிள்ளைகளும் ஒன்றாய் இருந்து விழாச் செலவுகளைக் கணக்குப் பார்த்த போது நாற்பத்தையாயிரம் ஜேர்மன் மார்க் அளவில் செலவுப் பட்டியல் வெளிவர சாரதா சந்தோசப்பட்டாள். வயதில் குறைந்தவனான சிறிகாந்தன் எழுந்து ஆவேசப்பட்டுப் பேசினான். என்னம்மா இது காசோ கடதாசியோ அக்காவின் சொல்படி செய்து இவ்வளவு பணத்தைத் தண்ணி போல் செலவழித்திருக்கிறியள். ரீச்சரென்னா கடவுளா? அவளின் சொற்படி பெருந்தொகைப் பணத்தை கொட்டியுள்ளீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களும் கலைஞர்கள் என்ற பெயரில் எங்களைப் போல எத்தனை குடும்பங்களிடம் கொள்ளை அடிக்கினம். இவைதான் தமிழ்க்கலைகளை வளர்க்கிற பெரியவர்கள். இந்தப்பணத்தை எங்கள் படிப்புக்குச் செலவழித்தாலும் எவ்வளவு பயன்படும். இதை ஆடம்பரமில்லாமல் செய்தாலும் பணம் மிச்சம் என்றான். தந்தை சிறியவனின் பேச்சுக்குத் தலை குனிந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 38. மரியாதைக்குரியவர்

அந்தக் கிராமத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முன்னின்று உழைப்பதில் குமரன் வல்லவன். படிப்பு, பேச்சு செயல் யாவற்றிலும் கெட்டிக்காரன். ஊரிலுள்ள தனது பாட சாலை நிகழ்ச்சிகள், வாசகசாலை நிகழ்ச்சிகள் பொது நிகழ்ச்சிகள் என்றால் முன்னின்று செய்யும் ஆற்றல் படைத்தவன். அது மட்டுமல்லாமல் ஊரவர்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டதால் அவன் மரியாதைக்குரிய வனானான். அவன் படிப்படியாக முன்னேறி ஊரை முன்னேற்றுவதிலும் வெற்றி கண்டான்.

ஊரிலும், நாட்டிலும் பலதுன்பங்கள் நெருக்கடிகள் வந்நபோதெல்லாம், ஊர்வலங்கள், கருத்தரங்குகள் நடாத்தியதுடன், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் தனது கெட்டிக்காரத்தனத்தைக் காட்டி அந்த ஊரின் மதிப்புக் குரியவனாகினான். வறுமை வாட்டியது. அரசியல் நெருக்கடி கள் கூடின. இனப்பிரச்சனை நாட்டில் கூடியது. இராணுவ கெடுபிடிகளுக்கு எதிராகப் போராடினான். இவனை அடையாளம் கண்ட இராணுவம் இவனைக் கைது செய்து, சித்திரைவதை செய்து அவனது கை ஒன்றையும் அடித்து முறித்தது.

உயிருக்கு உத்தரவாதம் இன்றி வெளிநாட்டில் குடியேறிய இரண்டு வருடத்தில் குமரனுடன் மனைவி சாந்தாவும் வந்து சேர்ந்து விட்டாள். துடிப்பான இவன், எப்போதும் சமூக சிந்தனை உள்ளவன். சும்மா இருப்பானா? வெளிநாட்டு

www.tamilarangam.net



வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொண்டான். நம்மவர்களின் பணம், பாசம், சாதி, மத கோலங்களையும் ஒற்றுமை என்னும் அரிய மருந்துக்கு அர்த்தம் பார்த்தான். இதே போக்கில் விட்டால் எனது இனம், மொழி, மதம், அழிந்து எங்களுடைய இன அடையாளம் இல்லாமல் போய்விடும் எனச் சிந்தித்தான்.

குமரனுக்குப் பக்கபலமாகக் பல குடும்பங்கள முன் வந்தாலும் அவர்களிடையே, சாதி, மதம் ஊர், பிரதேசம், கட்சி இயக்கம் என்னும் வேறுபாடுகள் தலைகாட்டின. எல்லாவற்றை யும் விட்டு விடுங்கோ. இது எங்கள் எதிர்காலப் பிரச்சனை. வருங்காலச் சந்ததிக்கு நாங்கள் நல்ல வழிகாட்ட வேண்டும் என்று கூறி தமிழ்ப் பாடசாலை ஒன்றல்ல ஐந்தை நிறுவி நல்ல முறையில் வைத்த குமரன் வருடாவருடம் விளையாட்டுப் போட்டி கலைவிழா நிகழ்ச்சிகளையும் சிறப்பாகச் செய்து வந்தான். அத்துடன் ஒன்றியம் ஒன்றையும் நிறுவிச் செயலாற்றும் பணியையும் மேற்கொண்டான்.

காலம் ஓடியது. நம்மவர்களிடம் பணம் குலம், போக்குகள் மாறின. ஒற்றுமை குலைந்தது. இயக்க வேறுபாடு என வளர்ந்தது. கட்டிவளர்த்த ஒன்றியமும் உடைந்து சிதறியது பாடசாலைகள் மூடப்பட்டன. சில பாடசாலைகளை இயக்கம் எடுத்துக் கொண்டது. மக்களும் காற்றடிக்கும் பக்கத்திற்குச் சாய்ந்தனர். நண்பர்களாகவும், உறவினர்களாகவும் வாழ்ந்த குடும்பங்கள் எதிரிகளாகவும், துரோகிகளாகவும் மாறினர். மாறச்சிலர் தூண்டினர். ஒற்றுமை தவிடுபொடியாகியது. இறுதிக் கூட்டத்தில் குமரனின் குரல் ஓங்கி ஒலித்தது. நம்மிடையே மன உறுதி, விடா முயற்சி குன்றிவிட்டது. நேர்மை, கண்ணியம், மனிதநேயம் இல்லாமல் போய்விட்டது. ஆட்களைப் பிரித்துப் பார்க்காதீர்கள். ஒருவன் செய்யும் சேவைக்கு மதிப்பளியுங் கள். அவனுக்கு உற்சாகமளியுங்கள். இல்லையேல் சீர் கெட்ட சமுதாயமாக எமது சமூகம் மாறும். இது உண்மை எனக் கூறிவிட்டு அந்தப் பொதுக் கூட்டத்திலிருந்து குமரன் தனது வீட்டை நோக்கி நடந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 39. நன்றிக்கடன்

கந்தசாமி 8ஆம் வகுப்பு வரை படித்து விட்டு படிப்பை இடை நிறுத்திவிட்டு வன்னிக்குத் தன் தந்தையாருடன் விவசாயம் செய்யச் சென்றவன். பத்து வருடங்களாக வன்னியில் குளிர், மழை, பனி, கொடிய வெப்பம், போன்ற இயற்கைக் கொடுமைகளையும் தாங்கித் தனது குடும்பத்திற் காக மாடாய் உழைத்தான் அவன் சிறிய வயதிலேயே உழைக்க வெளிக்கிட்டான். ஆனால் அவனது சகோதரர் களோ. ஊரில் வம்புகள் பேசுவதும், கொம்யூனிசம் பேசுவதும். நாங்களும் வன்னிக்கும் போவோமே? என்று பெருமையாகப் பேசு. இத்தனைக்கும் இவனின் உழைப்பிலேயே அவர்கள் குடும்பம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

சிறிது காலம் செல்ல, தந்தையார் நோய்வாய்ப்பட்டு ஊருக்குவரவே விவசாயம், நெல்வயல் பொறுப்புக்கள் யாவதும் கந்தசாமியின் தலைமையில். கந்தசாமி மனம் தளராமல் உழைத்து ஊரில் பெரியதொரு கல்வீடும் கட்டிமுடித்தவுடன் சகோதரிகள் இருவரையும் நல்லமுறையில் கலியாணம் செய்து வைத்தான். காலம் உருண்டது. கந்தசாமியும் கலியாணம் செய்து இரு பிள்ளைகளுக்குத் தந்தையானான்.

நாட்டில் கொடிய யுத்தம் ஆரம்பமாகியது. இராணுவக் கெடுபிடிகள் அரசு அடக்குமுறைகள் பலதரப்பட்ட பிரச்சனை களால் அவனைப்போல் பல விவசாயிகள் விவசாயமுயற்சி களைக் கைவிட வேண்டியாச்சுது. தனது உழைப்பில் சேமித்த

www.tamilarangam.net



பணத்தையும் கொண்டு தனது நண்பர் ஒருவரின் உதவியுடன் வெளிநாடுவந்து விட்டான். வெளிநாட்டிலும் அவன் சும்மா இருந்தானா? இங்கும் பல துன்பங்களோடு ஓடி ஓடி உழைத்தான். பணத்தைச் சேகரித்தான். விடுதலைப் போராட்டத்திற்கும், நாட்டில் வாழும் அகதிமக்களுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தான். வெளிநாட்டில் தம்பி நல்லாயிருக்கிறான் என்ற நினைப்பில் ஊரிலிருந்த சகோதரர் சகோதரிகனார்கள் கடிதங்களில் அன்பைக் கொட்டினார்கள் பாசத்தைப் பொழிந்தார்கள்.

என்ன செய்வது சகோதர பாசம் விடுமா? சகோதரி, சகோதரர்களின் பிள்ளைகளை ஒவ்வொன்றாகத் தன் செலவில் இங்கு அழைத்து பணத்தைச் செலவழித்துத் திருமணம் செய்து வைத்தான். திருமணம் செய்து வைத்த பிள்ளைகளும் சிறிது காலம் சித்தப்பா-சித்தியுடன் அன்பைக் கொட்டி வாழ்ந்தார்கள்.

இந்தப் பிள்ளைகள் நாகரீகத்தைக் கற்றார்கள். காசையும் சிறிது கண்டுவிட்டார்கள். நண்பர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். ஆடம்பரவாழ்விலும் மூழ்கிவிட்டனர். "எனி ஏன் சித்தப்பா? எங்களிடம் எல்லாம் இருக்கிறது. தானே என்று உதறிவிட்டுச் சென்று விட்டனர். இன்று கந்தசாமிச் சித்தப்பா குடும்பத்துடன் நன்மைகள், கொண்டாட்டங்களுக்குக் கூட அவர்கள் செல்லுவதில்லை. இந்தப் பிள்ளைகளின் நன்றிக் கடனை எண்ணி கந்தசாமியார் கவலை கொள்வதே இல்லை. ஏனெனில் உழைப்பில் அதிக நம்பிக்கை.

www.tamilarangam.net

# 40. பாதி வழி

இராணுவத்தினரின் அடாவடித்தனம், பெண்கள் கற்பழிப்பு, வீடுகள் மீதும் கோவில்கள் மீதும் குண்டு பொழிவு. பங்கர் வாழ்வு. உணவில்லை, நீரில்லை. தூக்கமில்லை இப்படியே வாழ்ந்த அந்த ஊர்மக்களுக்கு. இன்று அறிவித்தல் கிடைத்தது. எல்லோரும் இடம் பெயர்ந்து வன்னிக்குப் போக வேண்டும். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான உணவு, உடை, மற்றும் அத்தியாவசியப் பொருட்களோடு புறப்பட ஆயத்தமானார்கள். எல்லோர் முகங்களிலும் சோகம். கண்ணீர் பெருக்கெடுத்தது. காலாகாலம் சொந்தமண்ணில் வாழ்ந்த சந்தோசம், மண் வீடுகள், பாடசாலை, கோவில், வாசகசாலை, ஏன் வீட்டுப்பிராணிகளைக் கூட விட்டுவிட்டு அநாதைகளாகச் சென்று கிளாரிக்கரையை வந்தடைந்தனர். சதீஸ்வரன்-சரஸ்வதி தம்பதிகள் திருமணம் செய்து பத்து ஆண்டுகளில் பிறந்த அந்த செல்லக் குழந்தைக்குச் சிறிது காய்ச்சல் ஏற்பட்டிருந்தது.

இரவில் மட்டும்தான் கப்பல் சேவை. இரு நாட்களாக கிளாரி கடற்கரையில் காத்துக்கிடந்த அவர்களுக்குப் பல சோதனைகள். இராணுவத்தின் குண்டுவந்து விழுமா? எப்படி இந்தக் கடல் பயணம் தொடரப்போகிறது என்ற ஏக்கம் ஒருபுறம். பிள்ளையின் உடல்நிலை வரவரமோசமாகிக் கொண்டிருக்கிறது என்ற கவலை மறுபுறம். இப்படியே பல குழந்தைகளுக்கும் வயோதிகர்களுக்குச் சொல்லொணாத் துயர்.

www.tamilarangam.net



நோயாளிகள் வயோதிகர்கள், குழந்தைகள் குடும்பங்கள் கப்பலில் ஏறி மறுகரை போய்ச் சேர்ந்தனர். மறுகரைக்குச் சென்றும் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லமுடியாது. வாகனப் போக்குவரத்து குறைவு பல மைல் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படவே சதீஸ்வரனும் சரஸ்வதியும் தமது பிள்ளைகளோடு நடந்து காட்டுவழியே சென்றார்கள்.

பிள்ளைக்குச் சுரம் கூடி விட்டது முனகல் சத்தமும் அதிகரித்தது. சரஸ்வதி, அடிக்கடி பிள்ளையின் முகத்தைப் பார்த்துக் கலக்கம் அடைவதும், நடந்து வரும் மூதாட்டிக்களின் ஆறுதலால் மனம் சிறிது அமைதி அடைவதுமாகச் சென்றாள். பிரயாணம் தொடர்ந்தது. சரஸ்வதிக்கு தனது முதுகில் லேசாகக் குளிர் ஏற்பட்டிருக்கவே தனது பிள்ளையை இறக்கிப்பார்த்தாள் பிள்ளையின் உயிர்பிரிந்தது. அழுதார்கள் ஏன் கூட வந்தவர்கள் கூடக் கண்ணீர் விட்டு அழுதார்கள்.

நடந்து சென்ற அத்தனை குடும்பங்களும் ஓரிடத்தில் தரித்து நின்று இந்த மழலையின் ஈமக்கிரியைகளை ஒரு மணித்தியாலத்திற்குள் செய்தனர். புதைகுழிக்குள் அந்தப் பச்சிளம் குழந்தையின் உடல் புதைக்கப்பட்டு விட்டது. பத்து வருடங்கள் தவம் இருந்து பத்துமாதம் சுமந்து பெற்ற சரஸ்வதி நடைப் பிணமானாள். கணவன் கையைப் பிடித்தவாறு மெல்ல மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

www.tamilarangam.net

# 41. மறுமணம்

செல்லத்துரையர் வீட்டின் கடைசிப்பிள்ளைதான் வதனா. அழகிய வட்டவடிவான முகம். குதிரைவால் போல் நீண்ட தலைமுடி... நல்ல நிறம். வாலிபர்களைக் கவரும் உடலழகு... பத்தொன்பது வயதிலே காதல் வலைக்குள் சிக்குண்ட வதனா, கரனுடன் பழகத் தொடங்கி ஒரு வருடமாகி விட்டது. கரன்-வதனா காதல் விடயம் பெற்றோருக்குத் தெரிய வரவே கலியாணப் பேச்சை இருபகுதியினரும் மேற்கொள்டனர்.

இப்பொழுதுதான் கரன் நீண்டகாலமாக இயக்கத்தில் இருப்பதாக வதானாவுக்கும் தெரியவந்தபோது, தனது காதலைப் பற்றிச் சிந்தித்தாள். பெற்றோரும் கவலை கொண்டனர். அடுத்த வருடம் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற அடுத்த கிழமையே கரனைக் காண வில்லை. அவன் இயக்க வேலைகளுக்குச் சென்று விடுவான். போவான், நீண்ட நாட்களின் பின் வருவான் இது பழக்கப்பட்டுவிட்டது.

வதனாவிற்கு வயிற்றில் குழந்தை. பிறக்கும் நாட்களும் நெருங்கி விட்டன. எல்லாச் செலவுகளையும் வதனாவின் பெற்றோரே கவனித்துக் கொண்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வதனா கரனுக்குச் சொல்லி யனுப்பினாள். கரன் வந்து அன்பைப் பரிமாறி விட்டுச் சென்றவன் தான். அடுத்த வாரம் குழந்தை பிறந்தது. போர்க் களத்தில் கரனின் உயிரும் பிரிந்தது. கரன் மாவீரனானான்.

www.tamilarangam.net



வதனாவின் வாழ்வில் இருள் சூழ்ந்தது. பெற்று வளர்த்த மகனுக்கும் ஐந்து வயதைக் கடந்தது. இந்த இளம் வயதில் விதவைக் கோலம். வீட்டிலும் ஊரிலும், நன்மைகளுக்கும் கொண்டாட்டங்களுக்குக் கூப்பிடமாட்டார்கள். ஏன் வீதியில் கண்டாலும் மறு பக்கத்தால் ஒதுங்கிச் செல்வார்கள். பூ வைக்கக்கூடாது, பொட்டுவைக்கக்கூடாது, நிறச்சாறி உடை அணியக்கூடாது. நகை நட்டுக்கள் போடக்கூடாது. அவ்வளவு கொடுகளை இந்தத் தமிழ்ச் சமூகம் செய்து வைத்திருக்கிறது. இது இன்று மட்டுமல்ல தலைமுறையாக ஏற்பாடு செய்து கட்டிக்காத்து வரும் தமிழ்ச் சமூகமல்லவா? நல்லவற்றை உதறிவிட்டு கூடாதவற்றைப் பேணிக்காப்பாற்றுவதில் நம் சமூகம் முன்னணியில் நிற்கிறது தானே உண்மை என்பதை வதனா நன்கு விளங்கிக் கொண்டாள்.

வதனாவிற்கு இப்போ இருபத்தைந்து வயது. வாழும் வயது. இன்ப துன்பங்களை அனுபவிக்கும் வயதல்லவா. செல்லத் துரையர் பல இடங்களில் அவளுக்கு மறுமணம் தேடியும் எல்லா இடமும். விதவைக்கு யார் மாப்பிள்ளை கொடுப்பார்கள் என்று கூறிவிட்டனர். செல்லத்துரை ஏங்கினார். ஆதங்கப் பட்டார். அவளுக்கும் ஆசைகள், அன்பு, பாசம், உணர்வுகள் இருக்கும் தானே. இப்படி ஒரு ஆணுக்கு நடந்திருந்தால் சும்மா இருப்பானா? அடுத்த வருடம். இல்லை அடுத்த மாதமே மறுமணம் செய்திருப்பான். இதுதான் எங்கள் சமூகத்தின் கொடுமை. ஆணுக்கு ஒரு சட்டம் பெண்ணுக்கு ஒரு சட்டம். இதை எமது சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது என்ன நீதி? இது அநியாயம் என்று வீட்டுக்கு வந்திருந்த பெஞ்சனியர் அருளம்பலத்தோடு பேசிக்கொண்டிருந்தார். தபால்காரனின் மணி ஓசை கேட்டு படலைக்கு ஓடிச் சென்று வெளிநாட்டுக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். தூரத்து உறவுப்பையனின் கடிதம் தான். வதனாவையும் மகனையும் தான் பரிபூரண சம்மதத்துடன் ஏற்றுக் கொள்வதாகவும், திருமணம்

www.tamilarangam.net



செய்வதாகவும், கடிதம் எழுதியிருப்பதுடன். இருவருக்கும் பிளேன் ரிக்கட், ஒரு லட்சம் ரூபாவிற்கு காசோலை எல்லாம் அனுப்பியிருந்தான். இருள் படிந்திருந்த வதனாவின் முகத்தில் பரிபூரண சூரியனைப்போல் ஒளியும் அழகும் மிளிர்ந்தன.

www.tamilarangam.net

# 42. காணி நிலம்

அந்த ஊர் ஒரு சிறிய கிராமம். நெல்விளையும் பூமி அதைவிட தோட்டம் வேலை சிறு சிறு உத்தியோகம் பார்ப் போர். கடல் தொழில் செய்வோர். விவசாயம் செய்வோர் எனக் கூறிக் கொள்ளும் அந்தக்கிராமத்தில் சண்முகம் பெரிய பணக்காரர். உழவு இயந்திரம், நெல்வயல்கள், தென்னம் தோட்டம் எனப் பெரும்புள்ளிதான். தனது பிள்ளைகளையும் அதே மாதிரி வளர்த்து சொத்துக்களுக்கு ஆளாக்கி விட்டிருந்தார். இத்தனைக்கும் அவரின் பெற்றோரின் பல சொத்துக்களையும் தன்வசமாக்கிக் கொண்டார்.

இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டிலிருந்து உழைத்து அனுப்ப அவர் வட்டிக்கு வட்டி சேகரித்து, அறாவட்டி வேண்டிப்பணத்தைத் தேடிக்கொண்டார். அந்த ஊரின் வாசகசாலை, கோவில் நிகழ்வுகளுக்குப் பணம் கேட்டால். சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார். இதனால் ஊர்மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார். எங்கேயாவது காணிவிற்பனை என்றால் முந்தியடித்து, மடக்கிப் பிடித்து அந்தக் காணியை வேண்டிப் போடுவார். பிள்ளைகள் ஒவ்வொன்றிற்கும் பெரிய கல்வீடுகள் கட்டி வசதி படைத்துவிட்டவர்தான் சண்முகத்தார்.

ஒருமுறை வேறு ஊரிலிருந்து தனது சொந்தங்கள் இடம் பெயர்ந்து வந்த போது. தனது பெரிய வீட்டில் இடம் கொடுக்காது வேப்பமரத்துக்குக் கீழே ஓலைக்குடிசை போட்டுக் கொடுத்து மழையில் நனைய இந்தச் சீமானின்

www.tamilarangam.net



குணமும் மாறியது. சொந்தபந்தங்களை அடிமைகளாக்க முற்பட்டார். பணத்தை நம்பியே வாழ்ந்து வந்தார்.

நாட்டுப்பிரச்சனை பெருகியது போர்ச்சூழல் அதிகரித்தது. சேகரித்த பணத்தை வீட்டில் வைக்க முடியாமல் அல்லல் பட்டார். தகரடப்பாவில் பணத்தை இட்டு கிணற்றடியிலும் வேறு இடங்களிலும் புதைத்து விட்டார் மனைவி சின்னம்மா விற்கு மட்டும் இது தெரியும். போர் அதிகரித்தது. ஊர் மக்கள் இடம் பெயர்ந்தனர். சண்முகத்தாருக்கு மனமில்லை வீடு, வளவு, காணி, உழவு இயந்திரம் பணம் பொருள் மீது கொண்ட ஆசையால் எல்லோரையும் வேறு இடங்களுக்கு அனுப்பி விட்டுத் தான் மட்டும் தனியாகச் சிறிது காலம் வாழ்ந்தார்.

ஊர்ச் சனமெல்லாம் இடம் பெயர்ந்துவிட்டனர். ஊரே அமைதி நாய், பூனை ஆடு மாடு எல்லாம் அநாதரவாய். ,திடீரென விமானச் சத்தங்கள். குண்டு போடும் பேரிடிகள். இருபது வீடுகளுக்கு மேல் தரைமட்டம். சண்முகத்தார் வீடும் தரைமட்டம். சண்முகத்தாரும் இறந்துவிட்டார். இச்சம்பவம் நடைபெற்று ஒரு மாதத்திற்குப்பிறகு சண்முகத்தாரைத் தேடிவந்த மனைவி பிள்ளைகள் அவரின் எலும்புக் கூட்டைத்தான் தேடி எடுத்தனர். உயிரோடு இருக்கும் போது பணம் கோடி கோடியாக வைத்திருந்தும் என்ன பயன்? சரியான முறையில் எழைகளுக்குக் கொடுத்து, தான தருமம் செய்து வாழ்ந்திருந்தால். நாலு சனம் கண்ணீராவது விடும் என்று கூறிய அவரது இளையமகன் எலும்புக்கூட்டை அடக்கம் செய்வதற்கு வீட்டிலேயே குழிவெட்டினான். குழிகளுக்குள் புதைந்து கிடக்கும் பணம் எங்கு என்று தெரியாமல் மனைவி சின்னம்மா பித்தம்பிடித்தவள் போல் நின்றாள்.

www.tamilarangam.net

# 43. வாலிபம்

அந்த நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ள அகதி முகாமில் இரவு ஒரு மணியைத் தாண்டியும் சத்தம் பிளந்தது. முட்டை பொரிக்கும் வாசனை மூக்கைத் துளைத்தது. பியர் குடித்துவிட்டு ஒரு சிலர் சத்தம் போட்டுக் கதைக்கும் ஒலி மைல்களுக்கப்பால் கேட்கும். ஒரு சிலர் ஒரு அறையிலிருந்து காட்ஸ் விளையாடும் சத்தம். இப்படியே கலகலப்புத்தான். இவை ஒரு நாளன்று. தொடர்ச்சியான சங்கதி.

ஆமாம் பல நாட்டு பல்லின மக்கள் வாழும் இடம் தான் இந்த அகதிமுகாம். இந்த அகதி முகாமிலே சிகரட், பியர், ரெலிபோன், காட், பலசரக்கு எல்லாம் வேண்டுவதற்கு வசதியும் உண்டு. நம்மவர்கள் விடுவார்களா? எங்கு சென்றாலும் கடை போட்டுப் பணத்தைச் சம்பாதித்து விடுவார்கள். கடைபோட்டிருக்கும் நாகமணியருக்கு ஐம்பது வயதைத் தாண்டிவிட்டது. அவருக்கு அகதிப்பணத்தோடு இதிலும் வருமானம்.

நந்தன், ஜெயன், சீலன், ராகுலன் இந்த நால்வரும் இந்த முகாமிற்குவந்து ஐந்து வருடம். ஆரம்பத்தில் அகதிப் பணத்தோடு வாழ்ந்தான். பின்பு களவாகவும் வேலைசெய்து உழைத்தவர்கள். இப்போ இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சட்டப்படி பதிந்து வேலை செய்கிறார்கள். ஊருக்குப் பணமும் அனுப்புவார்கள். ஓரளவு நன்றாக வாழந்தாலும் கலியாண வயதைத் தாண்டியும் அந்தப் பாக்கியம் கிட்டாமல் இருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது அந்தப் பேரிடி வந்தது. நால்வருடைய அகதி விசாரணை முடிவடைந்து நாட்டுக்குத் திரும்பிப் போகும்படி கடிதம் வந்திருந்தது.

மொழிபெயர்ப்பாளர், சட்டத்தரணி என அலைந்து திரிந்து பெரும் தொகைப் பணத்தையும் இறைத்து ஒரு பிரயோசன மும் இல்லை. எல்லாம் அவர்களுக்கும் பாதகமாகப் போய் விட்டது. ஒரு வருடம் ஓடி விட்டது. திடீரென வந்த பொலிஸ் நந்தனைக் கைது செய்து சென்றது. இதை அறிந்த 35 வயதுடைய ஜெயன் தன்னிலும் வயதில் கூடிய ஜேர்மன் பெண்மணி 48 வயதுடைய நீற்றாவைத் திருமணம் செய்து விட்டான். சீலன் இரவிரவாய் எல்லையால் பிரான்சுக்குச் சென்றபோது பொலிஸ் பிடித்து இலங்கைக்கு அனுப்பியதால் அவன் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டான். இங்கு பொலிஸ் தடுத்தது. நந்தன் இதை அறிந்து சிறையிலேயே தற்கொலை செய்து கொண்ட பரிதாபம் நிகழ்ந்தது.

அன்று ராகுலன் மட்டும் அந்த முகாமில். அவனும் வேறு நாட்டுக்குச் செல்ல வேண்டும். ஏனையவர்கள் எல்லோரும் பரிதாபமாக ராகுலனைப் பார்த்தார்கள். ராகுலன் கண்ணீர் பெருகத் தன் சோகத்தை வெளிப்படுத்தினான். "நாட்டில் போரால் அப்பா, அம்மா, சகோதரியைப் பலிகொடுத்து விட்டுத் தான் இங்கு வந்தேன். தற்போது வயதும் முப்பத்தைந்தைத் தாண்டிவிட்டது. வெளிநாடு வந்த இந்த பத்து ஆண்டுகளில் நல்ல சாப்பாடு கிடையாது. அன்பு கிடையாது. அரவணைப்பு கிடையாது. திருமணம் என்ற வார்த்தைக்கே இடமில்லை, பணத்தைப்பெற உழைத்தோம், நம் நாட்டில் வாழ முடியாது. இங்கேயாவது நிம்மதியாய் வாழலாம் என்றால் இந்த நாட்டுச் சட்டங்களும் இடங்கொடுக்கிறதில்லை. எனி நாம் எங்கப் போறது. நாடு விட்டு நாடு மாறி பிறகு அந்த நாட்டிலும் பிரச்சனை என்றால் என்ன செய்வது, ஏன் என் போன்றவர்கள் எல்லாவற்றையும் இழந்து வாலிபத்தையும் தாண்டி..." என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருமூச்சுடன் இன்னொரு நாட்டிற்குப் போவதற்கு ஆயத்த மானான். இவனைப்போல் எத்தனை ஆயிரம்பேர் இந்தக் கொடுமைக்கு இப்போது தள்ளப்பட்டிருக்கிறார்கள். அகதி முகாமில் அன்பு உள்ளங்களுக்கு கைலாகு கொடுத்துவிட்டுப் பிரிந்து செல்கிறான் ராகுலன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 44. ஜோதி

ஜோதியும் பாடசாலைத் தோழிகளும் அன்று பாடசாலை பரிசளிப்பு விழாவில் பாடல் நிகழ்ச்சிக்காக மிகவும் அலங்காரமாக உடைகளை அணிந்து அழகிப் போட்டிக்குச் செல்பவர்கள் போல் கலகலப்பாக நின்றனர். மாணவர்கள் எல்லாரும் அதுவும் உயர்வகுப்பு மாணவர்களென்றால் சொல்லவும் வேண்டுமா! விழா சிறப்பாக நடைபெற்றது. மாலை ஐந்து மணிக்கே முடிவுற்று எல்லோரும் வீடு திரும்பி விட்டனர்.

இப்போது ஊரில் இரவு நிகழ்ச்சி ஒன்றும் இல்லை. போரால் சூழப்பட்ட இந்தப் பிரதேசம். எங்குபார்த்தாலும் இராணுவம். துப்பாக்கிகளோடு நிற்பார்கள். இத்தகைய சூழலில் பெண்பிள்ளைகளைப் பாதுகாப்பாக வளர்த்தெடுப்பது எவ்வளவு கடினம். அந்தப் பெற்றோர் படும் பாடு. வயிற்றில் நெருப்பைக் கட்டிவைத்திருப்பது என்று கூறுவது உண்மையே.

பாடசாலைவிட்டு வந்த ஜோதி மதியம் உணவை முடித்துக் கொண்டு பின்நேரம் ரியூசன் கிளாசுக்குப் போவதற்கு ஆயத்தமானாள். பிள்ளை கவனம் இண்டைக்கு ஏதோ பிரச்சனையாம், ஆமியள் எல்லா இடங்களிலும் நிற்கிறாங்கள். இளம்வயது பயம் அறியுமா? மிகவும் துடிப்பானவள். கட்டழகு, கலகலப்பாகப் பேசும் தன்மை, துணிந்தவள், பயப்படுவாளா? தோழிகளுடன் ரியூசன் கிளாசுக்குச் சென்றவள் தான் மாலை 7 மணியாகியும் வீடு திரும்பவில்லை. தாயார் பதறிப்போனாள். தங்கைகள் அழுதுவிட்டார்கள்.

www.tamilarangam.net



அம்மா ஏன் பயப்படுகிறீர்கள். நான் எப்படியும் வந்துவிடுவேன். நான் உங்க பிள்ளைதானே. வந்துவிட்டாள்.

வழமையான ரியூசன் வகுப்புக்குச் சென்றவள் வீடு திரும்பவில்லை. இன்று நல்லூர் திருவிழாத் தானே சில வேளை கோயிலுக்குப் போய்விட்டு வருவாளாக்கும். அது தான் தாமதம் எனத் தந்தையார் ஆறுதல் கூறியும் தாயார் மனம் பொறுக்காமல் அவளின் பாடசாலை நண்பிகளிடம் விசாரித்தபோது இன்று ஜோதியை ஆமிக்காரர் முகாமிற்குக் கொண்டு போட்டினம் எனத் தெரியவந்தது. புலிகளோடு தொடர்பாம் எனப்பிடித்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் ஒருவாறு வந்து விட்டோம். தாயும் தந்தையும் அழுது புலம்பிக் கொண்டு இராணுவ முகாமுக்கு ஓடிச் சென்று விசாரித்தபோது அவர்கள் கையை விரித்தனர். எல்லா இடமும் தேடினார்கள். உறவினர் வீடுகளில் விசாரித்தார்கள். விதானையார், பொலிசில் பதிவு செய்து தேடினார்கள். அன்று பூராவும் நித்திரை இல்லை. யாருக்குத்தான் நித்திரை வரும்.

அதிகாலை நாய்கள் ஊளையிடும் சத்தம் கேட்டது. அருகிலுள்ள காட்டுப்பகுதிக்குக் காலைக்கடன் கழிக்கச் சென்ற தம்பர் ஓடிவந்து படலையைத் தட்டும் சத்தம் கேட்டு விடயத்தைச் சொன்னார். அந்த அழகான திருமேனி, கற்சிலை, அழகுராணி என்று கூறக்கூடிய ஜோதியின் உயிரற்ற உடல் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதைக்கப்பட்டிருந்தது. புதிதாக மாறி வந்த ஆமிக்காரரின் கொடிய வேலை எனத் தெரிய வந்தது. எல்லா இடமும் செய்தி பரவியது. அந்த அழகான ஜோதி மறைந்து விட்டாள். இவளைப்போல் எத்தனை ஆயிரம் தாய்மார் தாம் பெற்று வளர்த்த பிள்ளைகளை எண்ணி இரத்தக்கண்ணீர் வடிக்கிறார்களோ? எத்தனையோ அழகு ஜோதிகள் கெடுக்கப்பட்டு மறைக்கப் பட்டு, புதைக்கப்பட்டார்கள் என்பது இந்தப் பூமிக்குத் தான் தெரியும்.

www.tamilarangam.net

# 45. மது போதை

துளசிகரன் பாடசாலையில் படிக்கும் போது மிகவும் கெட்டிக்காரன். வகுப்பில் கணக்குப் பாடமென்றால் அவனுக்குப் பிரியம். சகமாணவர்கள் மாணவியர் அவனது கணக்குக் கொப்பியைப் பார்த்து கொப்பியடித்து ஆசிரியரிடம் மாட்டிக் கொண்ட சம்பவங்களும் உண்டு. பாடசாலையில் அவனை எல்லோரும் துளசி என்றே அழைப்பபார்கள்.

பாடசாலையில் உயர்படிப்பு படித்துக் கொண்டிருக்கும் பொழுது காதல் வலையில் சிக்குண்டு தடுமாறிய அவனுக்கு நாட்டுப் போர்ச் சூழலிலும், வீட்டின் வறுமைச் சுமையும் கூடவே தாயாரின் காணியை விற்று அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார் அவனது தந்தை. இளவயதுக் காதலைத் துறந்து, சொந்தபந்தங்களை, சொந்த மண்ணைவிட்டுப் பிரிந்த கவலையைத் தாங்க முடியாமல் குடிப்பழக்கத்துக்கு ஆளாகிவிட்டான்.

வெளிநாட்டுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. வேலை இல்லை. வேலை செய்ய அனுமதியும் இல்லை. அரச உதவிப்பணம் கிடைக்கும் அதை நண்பர்களோடு சேர்ந்து குடித்து முடித்து விடுவான். அந்த நகரத்தில் வசிக்கும் துளசியை எல்லோருக்கும் பிடிக்கும். குடி ஒன்றைத் தவிர அவனிடம் வேறு எந்தக் கெட்டப் பழக்கங்களும் கிடையாது. எல்லோரிடமும் மரியாதையாகப் பழகி மரியாதையைப் பெற்றிருந்தான். அந்த நகரத்தில் நடைபெறும் கொண்டாட்டங் களில் முன்னின்று வேலைகளைப் பொறுப்பேற்றுச் சரிவரச் செய்து முடிப்பான்.

www.tamilarangam.net



ஊரில் இருந்து கடிதம் வரும் தமபி காசு அனுப்பு நாட்டில் சீவிக்க முடியாது. விலை ஏற்றம், பசிபட்டினி அடிக்கடி வரும் தாயாரின் கடிதங்களைப் பிரித்து வாசித்து விட்டுப் பதில் எழுதமாட்டான் காசும் அனுப்ப மாட்டான். வருடங்கள் ஓடியது வயதும் ஓடி முப்பந்தைத் தாண்டிவிட்டது.

அவனுக்குத் திருமணம் செய்ய வேண்டும். மனைவி குழந்தை குட்டிகளுடன் அன்பாய் வாழ வேண்டும் என்ற எண்ணமும் அற்றுப் போய்விட்டது. செய்யும் வேலையிலும் ஒழுங்கில்லை. குடிக்கே அடிமையாகி அடிககடி வைத்திய சாலைக்கும் போய்வந்தான். இளவதிலிருந்து அன்பு, பாசம் உறவுகளை இழந்து, பிரிந்து வாழ்ந்ததாலே வாழ்வு சூனியமாக இருந்தது. அடிக்கடி ஆஸ்பத்திரியில் கிடப்பான். நண்பர்கள் சென்று உதவுவார்கள் ஆறுதல் கூறுவார்கள். அவன் கேட்கவே இல்லை. தனிவீட்டில் தனிக்குடித்தனம், தனியே இருந்து குடித்து அந்தத் தனிவீட்டிலேயே தனிமையில் மரணமாகிவிட்டான். ஒரு கிழமையால் பொலிஸ்வந்து வீட்டை உடைத்து அவனது சடலத்தை மீட்டனர். இந்தத் துளசியைப் போல் எத்தனையோ வாலிபர்களின் வாழ்க்கைப் போராட்டம் தொடர்கிறது. துளசியின் உயிரற்ற அந்த உடலை ஏற்றிக் கொண்டு சுடுகாடு நோக்கி அந்த வண்டி நகர்கின்றது. நண்பர்கள் சிலர் பின் தொடர்கின்றனர்.

# 46. தெளிவு

வீட்டில் எந்தக் காரியம் நடந்தாலும் இராசலட்சுமி அம்மாவைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும். கணவன் வளர்ந்த பிள்ளைகள் மருமக்கள் எல்லோரும் அந்த நாற்சார வீட்டில்தான் குடியிருப்பு. மிகவும் வசதியான இந்தக் குடும்பத்துக்குத் தோட்டம், வயல், தென்னந்தோப்பு, வாகனங்கள், தொழிற்சாலை என பல்கிப் பெருகிய பணக்காரக் குடும்பம். பணக்காரியான இராசலட்சுமி தனது முதல் கணவனைத் துரத்திவிட்டு குமாரசாமியைக் கைபிடித்து நான்கு பிள்ளைகள் பிறந்தும். கணவன் பெட்டிப்பாம்பாய்க் கிடந்து கொண்டார்.

பிள்ளைகளும் நன்று படித்துப்பெரிய பதவிகள். நான்கு பிள்ளைகளும் திருமணம் செய்து விட்டனர். எல்லோரும் ஒரேவீடு. பிரச்சனைகள் ஆரம்பித்தன. இளைய மரு மகளுக்கு மாமியாரின் பக்கச்சார்புக் கொள்கைகள் பிடிப்ப தில்லை கணவன் சுகுமாரோடு சண்டைபிடிப்பாள். சுகுமாரும் பெரிதாக உழைப்புக் காணாதபடியால் தாயாரிடம் பணம் கேட்பது வழக்கம். ஒரு நாள் நாய், மூதேவி, சனியன் என்று தாயார் பேசித்திட்டியதைப் பொறுக்க முடியாத இளைய மருமகள் மாலதி "உங்கள் பிள்ளையாயினும் எனது கணவரை. இப்படி மரியாதைக் குறைவாகப் பேசுவது எனக்குப் பிடிக்க வில்லை." என்று வாய்திறக்கவே. இராசலட்சுமியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பிச்சைக்காரியைக் காதலித்துக்

www.tamilarangam.net



கலியாணம் செய்தபடியால் தான் என்ர மகனுக்கு இந்த நிலமை. பணக்கார வீட்டுக்காரியைச் செய்திருந்தால் என்ர மகன் ஓகோ என்று வாழ்வான். எல்லாம் என்ர தலைவிதி பிச்சைக்காரர், நாகசிகம் தெரியாதவர் என்று எல்லாம் வாய்க்கு வந்தபடி ஏசித்திட்டிவிட்டாள். மற்றைய மருமக்கள் மாமியாருக்குப் பயந்து வாய்திறக்க முடியாமல் மௌனமாகிவிட்டார்கள்.

நாட்கள் நகர பிரச்சனைகளும் அதிகரித்தன. மாமி, மருமக்கள் பிரச்சனை அதிகரித்தது. பணத்திமிர் அழகான ஆணவத்திமிரால் இராசலட்சுமியின் பிள்ளைகள் ஒவ்வொன்றாகத் தனிக் குடித்தனம் சென்றனர். தாய் தந்தை-பிள்ளைகள் உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. பிள்ளைகள் ஒன்றும் தாய்வீட்டுக்குச் செல்வதில்லை. தமது தந்தையை எண்ணித் தான் கவலைப்பட்டனர். பேரப்பிள்ளைகளைக் கூடத் தெரியாத இராசலட்சுமி பேரிடியானாள். கணவனோடு வீட்டில்தான். நோய் பீடித்தது. படுத்த படுக்கை பிள்ளைகளுக்குச் சொல்லியனுப்பியும் ஒருவரும் வந்து பார்க்கவில்லை. "ஆணவத்தை விடு, பிள்ளைகளோடு அன்பாய்ப்பழகு, ஓரவஞ்சகம் செய்யாதே, திமிர் கொள்ளாதே பணத்தால் எல்லாவற்றையும் செய்யமுடியாது என்று பலதடவை உனக்குப்புத்தி கூறியும் நீ திருந்தவில்லை. இப்ப பட்டால்தான் தெளிவு பெறுவாய்" என்றார் கணவன். இராசலட்சுமியால் கண்ணீர்தானே வடிக்க முடியும்.

வெள்ளிக்கிழமை, இன்று மழலைச் சத்தங்கள் கேட்டன. இது கனவா என்று திடுக்கிட்டாள் இராசலட்சுமி. இல்லை உண்மை. ஒரு ஆண் ஒரு பெண். இரு செல்வங்களும் "அப்பம்மா நீங்கள் சுகமாக வேண்டுமென்று முருகன் கோவிலில் அர்ச்சனை செய்து கொண்டு வருகிறோம். இந்தாங்கோ திருநீறு, குங்குமம் பூ" என மழலை மொழியில் பேசினார்கள். அருகில் இளைய மகனும் மருமகளும் நின்றனர். எல்லோரையும் கட்டிப்பிடித்து அழுதாள். நான்

www.tamilarangam.net



செய்த கொடுமைக்கு என்னை மன்னித்து விடு மருமகளே என்றாள். வருத்தமும் மாறியது. எனி நான் மாமி இல்லை. எல்லோருக்கும் நான் அம்மா.. எனக்குத் தெளிவு பிறந்துவிட்டது என்று கூறிக்கொண்ட இராசலட்சுமி கட்டிலைவிட்டு எழுந்து பேரப்பிள்ளைகளோடு கொஞ்சிக் குலாவினாள்.

www.tamilarangam.net

# 47. ஸ்ரெவ்வானி

ஸ்ரெவ்வானியின் பதினைந்தாவது வயதுப்பிறந்தநாள் கொண்டாட்டம் வழமைபோல் பாடசாலைத் தோழிகளுடன் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஸ்ரெவ்வானிக்கு வாழ்த்துக்கூறுபவர்கள். கட்டியணைத்து முத்தமிடுபவர்கள். பரிசில்களை வழங்குபவர்களென ஆரவாரம். மறுபுறத்தில் உணவுகள் குடிவகைகள் பரிமாறப் படுவதை அவதானித்துக் கொண்டிருந்த தந்தை பெக்கர் திடீரென ஒரு சந்தோசச் செய்தி என வெளியிட்டார்.

அதாவது ஸ்ரெவ்வானி பிறந்த இடமான ஸ்ரீலங்கா-யாழ்ப்பாணத்திற்குப் போகிறோம். விடுமுறையானபடியால் ஸ்ரெவ்வானியை அழைத்துக் கொண்டு போகிறோம் என்றதும் ஸ்ரெவ்வானியின் தாயாரான பிறிக்கிற்றாவும் சந்தோசப்பட்டார். எல்லோரும் வெள்ளைக்காரர். ஆனால் ஸ்ரெவ்வானி மட்டும் எங்கட நிறம். ஆமாம் ஸ்ரெவ்வானி பிறந்தது பன்னிரண்டு சகோதரங்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழச்சியின் பிள்ளைதான் அவளுக்குத் தாய் தந்தையர் இட்ட பெயர் சரஸ்வதி. மிகவும் பின் தங்கிய வறிய குடும்பத்தில் பிறந்தவள் சரஸ்வதி. ஏழ்மை தாங்கமுடியாத கொடுமையால் இந்த ஜேர்மன் தம்பதிகளுக்கு விற்கப்பட்டவள் தான் சரஸ்வதி.

இந்தப் பதினைந்து வருடங்களாக அவளை வளர்த்தெடுத்த பெக்கர் குடும்பம் வருடத்தில் இரண்டு மூன்று தடவை யாழ்ப்பாணத்துக்குப் பணம் அனுப்பி ஸ்ரெவ்வானியின்

www.tamilarangam.net



குடும்பத்தவர்களை வாழவைத்து வருகின்றனர். ஸ்ரெவ்வானிக்கு இந்த விடயங்கள் சிறிது சிறிதாகத் தெரியவரவே தான் பிறந்த இடத்தையும் தன்னைப் பெற்றவளையும் பார்க்க வேண்டும் என்னும் ஆசை மேலோங்கியது.

விசா, மற்றும் அனுமதிப்பத்திரங்கள் பெற்று பல சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாணம் சென்றடைந்த ஸ்ரெவ்வானியின் வளர்ப்புத் தந்தை பெக்கரும் தாய் பிறிக்கிற்றாவும் ஸ்ரெவ்வானியும். கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவரைச் சந்தித்து விடயங்களை தெரியப்படுத்தினார்கள்.

பாதிரியார் அவர்களையும் அழைத்துக் கொண்டு அவர்கள் வாழ்ந்த இடத்துச் சென்ற போது அங்கு குடிமனைகள் எல்லாம் குண்டு விழுந்து இடிபாடாய்க் கிடப்பது கண்டனர். சனம் ஒன்றும் இல்லை எல்லோரும் இடம் பெயர்ந்து விட்டார்கள். வீதியால் வந்த வயோதிகர் ஒருவரைப் பாதிரியார் சந்தித்து விடயத்தைத் தெரிவித்தபோது, ஸ்ரெவ்வானியின் தந்தையாரும் சகோதரர்கள் மூன்று பேரும் குண்டு விழுந்து இறந்து விட்டதாகவும், தாயாரும் மற்றைய சகோதரங்களும் வன்னிக்கு இடம்பெயர்ந்துவிட்டதாகவும் கூறிய பொழுது ஸ்ரெவ்வானி கதறி அழுதாள். வெள்ளைக்காரத்தாயும் தந்தையரும் கண்கலங்கி நின்றனர். இதற்கிடையில் ஸ்ரெவ் வானி எல்லா இடங்களையும் படம் பிடித்துக் கொண்டாள். இடிபாடுகளுடன் காணப்படும் யாழ்ப்பாணத்தையும் மக்கள் படும் துன்பங்களையும் நேரடியாகக் காட்டிய பாதிரியார் அவர்களை வழி அனுப்பி வைத்தார்.

திரும்பி ஜேர்மனி வந்து ஒரு மாதமாகியும், அவளுக்கு தன்னைப் பெற்றவளைப் பார்க்க முடியவில்லையே என்ற பெரும் கவலை கொண்டாள். சிந்தித்தாள். செயல்பட்டாள் தந்தையாரும் தாயும் அவளுமாகத் தொலைக்காட்சியில் தோன்றி புகைப்படங்களால் நிலமைகளைத் தெளிவுபடுத்திய போது அன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சியிலேயே ஒரு லட்சம் டொலருக்குமேல் சேர்ந்துவிட்டது. மீ(ள்)குடியேற்றப்

www.tamilarangam.net



பணிகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு இப்பணம் அனுப்பட்டது. மீழ்குடியேற்ற வேலைகளும் நடைபெற்றது. தனது தாய் மீழ்குடியேற்றத்தோடு ஊருக்கு வருவாள். அப்போது சென்று பார்க்கலாம் என்ற மன உறுதியுடன் செயற்பட்டு காலங்கள் ஓடியது. ஸ்ரெவ்வானி படித்துப் பட்டம் பெற்று விட்டாள். அதுவும் டாக்டராக. தனது சொந்த மண்ணின் சொந்தங் களுக்காக வைத்திய சேவை செய்யப் புறப்பட்டுவிட்டாள். ஸ்ரெவ்வானி என்னும் சரஸ்வதி. சென்று வா மகளே என முத்தமிட்டு வழியனுப்பினார்கள் அந்த வெள்ளைக்காரத் தாய் தந்தையர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 48. ஊனம்

தினமும் அந்த வீதியால் செல்லும் நிர்மலனுக்கு அவளைத் தினமும் பார்க்க வேண்டுமென அவா. ஆம் பத்திரிகை யாளனான அவன் அந்த ஊரின் அழகான வாலிபர்களில் ஒருவன். நிர்மலா படித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருந் தாள். யாழ்ப்பாணச்சாதி முறையால் இருவரும் வேறுபட்டிருந் தாலும் ஒரே ஊரில் வசிப்பதால், கோவில் பாடசாலை, சனசமூக நிலைய விழாக்களில் ஒன்று கூடி மகிழ்வது வழக்கம். அப்போதுதான் இருவருக்கும் காதல் மலர்ந்திருந்தது.

நிர்மலன் பத்திரிகை காரியாலயத்தில் கடமையாற்றினான். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எழுதுவதில் வல்லவன். அவனின் கவிதைகள், சிறுகதைகள் மீது பற்றுக் கொண்ட அவள் அவனையும் நேசித்த பொழுது அவர்களின் காதல் விடயம் பெற்றோருக்குத் தெரியவரவே பூகம்பம் தோன்றியது. காதலென்றால் தமிழ்ப் பெற்றோரின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா, சாதி, மதம், ஊர், பணம், சந்ததி என அடுக்கிக் கொண்டே செல்லும் நம்மவர் மத்தியில் எத்தனை வேறுபாடுகள். எத்தனைக் காதலர்கள் காதல் கைகூடாத படியால் மண்ணுக்கும் நெருப்புக்கும் இரையானார்கள்.

நிர்மலன், நிர்மலா பெயர்ப் பொருத்தம் மட்டுமல்ல உடல் பொருத்தமும் சரியாக இருந்தது. இருவருக்கும் மனமும் நல்ல பொருத்தம். ஆனால் அந்த ஊரவர்களின் மனத்தில்தான் பொருத்தம் வரவில்லை. நிர்மலன் காலில் ஊனமுடையவன்,

www.tamilarangam.net



நொண்டி, நடக்கும்போது தாண்டித்தாண்டித்தான் நடப்பான். அவன். என்ன செய்வது, இளம்பிள்ளை வாதம் வந்தபடியால் அவனின் உடலில் ஏற்பட்ட வடுதான் இது. ஊர்சனம் நல்லாயிருக்கவும் விடாது. கெட்டுப்போக வழியைத்தான் தேடும். இந்த நொண்டியைச் செய்து இந்த அழகான நிர்மலா என்ன செய்யப் போகிறாள். பார்த்து எங்காவது நல்ல இடத்தில் செய்யுங்கோ என அநேகர் பெற்றோருக்கு ஆலோசனை வழங்குவார்கள். அதன்படி திருமணப் பேச்சுக்களும் ஆரம்பமானது.

உண்மையான காதல் என்பது ஒருமுறைதான் வரும். நானும் அவரும் உள்ளத்தால் நேசிக்கிறோம். மனத்தால் ஒன்றுபட்டு விட்டோம். அவரின் மனது சுத்தமானது அழகானது. நான் அவரின் காலை நினைத்துக் கவலைப்பட வில்லை. அவரின் மனது, மனசாட்சிப் படி இருவரும் ஒன்று சேர்ந்து வாழ்வதாகத் தீர்மானித்து விட்டோம். நான் அவருடன் செல்கின்றேன். என்னைத் தேட வேண்டா. நாட்டில் இத்தனை அவலங்கள் துன்பங்கள் நிகழ்ந்தாலும். அனுபவித்து வேதனை கொண்டாலும் உங்கள், அதாவது சமூகத்தின் மனம் மாறவில்லை. அநேகரின் மனசுகள் ஊனமாகத்தான் இருக்கின்றன. உடலை வைத்து ஒருவரின் மனத்தை எடை போட முடியாது. மனத்தை வைத்தே மனிதனை எடை போட முடியும் எனக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. நிர்மலனுக்குப் பத்திரிக்கைத் துறையில் சாதனை அன்று மாலை பாராட்டுவிழா நடைபெற ஆயத்தங்கள். காலை அந்த இளம் ஜோடிகள் கலியாணப் பதிவுக் காரியாலயம் தேடிக் காரில் புறப்படு கின்றனர்.

www.tamilarangam.net

# 49. தீபாவளி

எனது மனத்தில் பெரிய சந்தோசம் விடிந்தால் தீபாவளி. புது உடுப்புப் போடலாம். கோவிலுக்குப் போகலாம். நண்பர்களோடு விளையாடலாம். பட்டாசு சுடலாம். மத்தியானம் ஆட்டிறைச்சி ருசியாகச் சாப்பிடலாம் என்ற ஆசை. அது தான் எங்கள் வீட்டில் கிடையாதே. வடை, பாயாசத்துடன் சைவச் சாப்பாடு. பெருநாட்களில் அதுதான் வழமை. தீபாவளி அன்று எல்லாவீடுகளிலும் ஆட்டிறைச்சி. ஆனால் எங்கள் வீட்டில் மட்டும் மரக்கறி.

முந்தநாள் பின்னேரமே பெரியமாமா ஆட்டைக் கொண்டு வந்து எங்கடைவீட்டில் கட்டிப்போட்டார். எனக்கு நித்திரை வரவில்லை. கொஞ்சப் பேர் சேர்ந்து ஆட்டை வெட்டிக் கொலை செய்து அதன் துண்டுகளை உண்ணப் போகிறார் களே. அந்த ஆட்டின் மீது பரிதாபமாக இருந்தது. நேற்றுச் சாப்பிட்டது இன்றைக்கும் கை மணக்குது. இரத்தம் சுண்டிச் சாப்பிட்டது எவ்வளவு ருசி என அரவிந்தன், முகுந்தன், மணியன், போன்ற என் சினேகிதர்கள் பேசிக் கொள்வார்கள். நான் மட்டும் எதுவும் பேசமாட்டேன். எங்கள் வீட்டில் சைவம் தானே.

எங்கள் வீட்டில் ஒவ்வொரு சனியும் ஆடு அல்லது கோழி சமைப்போம். தீபாவளி தினத்தில் மட்டும் எங்கள் வீட்டில் சைவம். இது பற்றி என் அப்பாவிடம் இரவு கேட்போம் என்று நினைத்தவாறு தூங்கிவிட்டேன் வெடிச்சத்தத்துடன் காலை விடிந்தது. துவிச்சக்கரவண்டியைத் திருத்தம் செய்து

www.tamilarangam.net



கொண்டிருந்த அப்பாவிடம் சென்று நானும் அவருக்கு உதவியவாறு பேச்சை மெல்ல ஆரம்பித்தேன். அப்பா எல்லாவீட்டிலும் தீபாவளிஅன்று ஆட்டிறைச்சி சமைக்க நாங்கள் மட்டும் ஏன் மரக்கறி சாப்பிடுகிறம். ஏன் நாங்கள் ஒவ்வாரு சனிக்கிழமையும் சாப்பிடுகிறம் தானே அது போதாதோ. உனக்குச் சொல்லி விளங்காது என்று அப்பா கூற இல்லைஅப்பா சொல்லுங்கோ என அடம்பிடித்தேன்.

நாங்கள் மனிதர்கள். தெரிந்தோ தெரியாமலோ நிறையப் பிழை விடுவம். நாங்கள் தெரியாமல் செய்யிற பாவத்தை எல்லாம் கடவுள் பொறுத்துக் கொள்வார். அவர் உலகத்தி லுள்ள உயிரினங்களுக்குப் பொதுவானவர். நரகாசுரனைக் கிருஷ்ணர் வதம் செய்த நாள் தீபாவளி. அந்த அசுரன் செத்தபிறகு உலகத்திலுள்ள உயிரினமெல்லாம் சந்தோசமாக இருந்தது. அந்தச் சந்தோசம் ஆட்டுக்கும், கோழிக்கும், மனிசருக்கும் மற்ற விலங்குகளுக்கும் பொதுவானது. அந்த ஆட்டை நாங்கள் வெட்டிச் சாப்பிடலாமா? எங்கட சந்தோசத்துக்காக இன்னொரு உயிரின் சந்தோசத்தைப் பறிக்கலாமா என்று கூறினார்.

அப்ப மற்ற நாட்களில் மச்சம் சாப்பிடுகிறோம் என அவன் விடவில்லை. அது வந்து... அது வந்து... எனத் தந்தை தடுமாறினார். ஜீவகாருண்யம், புலால் உண்ணாமை என்று ஏதோ சொன்னார். அவனுக்குச் சரியாகப் புரியவில்லை.

பல தீபாவளிகள் உருண்டோடின. நான் படித்து முன்னேறி உலகத்தைப் புரிந்து கொள்ளும் நிலைக்கு வந்து திருமணம் செய்து பிள்ளை குட்டிகளையும் பெற்று வாழ ஆரம்பித்த போது தான் எனக்கும் புரிந்தது. நாளை தீபாவளி புது உடுப்புப் போடலாம். கோயிலுக்குப் போகலாம், பட்டாசு வெடிக்கலாம், நண்பர்களோடு விளையாடலாம் என்று என் பிள்ளைகள் கூறியபோது எனது இளமைக்கால நினைவுகள் வந்து போயின. அம்மா லிஸ்டை தாருங்கோ நான் போய் மரக்கறி வேண்டி வாறன் என்று கூறியபடி புறப்பட்டான் என் இளைய மகன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 50. சுமங்கலி

அந்த ஒற்றைக்கதவில் சாய்ந்தபடி ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்த செல்வனைத் தபால்காரன் மணியோசை திசைதிருப்பியது. தபாலைப் பெற்றுக் கொண்ட அவன் தபாலுறையைப் பிரித்துக் கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தான்.

அன்பின் செல்வனுக்கு...உன் நண்பன் ஆனந்தன் எழுதிக் கொள்வது. நலம்...நலமறியஆவல். செல்வனுக்கு முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. ஆமாம் செல்வனின் பள்ளிக்கால நண்பன் தான் ஆனந்தன். பல வருடங்களின் பின் இவனுக்கு இப்போது தான் என் ஞாபகம் என்று யோசித்தவாறு கடிதத்தைத் தொடர்ந்து வாசித்தான்.

நீண்ட காலத்தின் பின் உன்னோடு கடித மூலம் தொடர்பு கொள்வதில் ஆனந்தப்படுகிறேன். நண்பா! நம் பாடசால இறுதிநாளன்று நீ எனக்குக் கூறிய அதே வரிகளை ஞாபகப்படுத்துகிறேன். "வருடங்கள் சென்றாலும் உள்ளத்தில் நாம் என்றும் நண்பர்கள் தாம்" அன்று கூறியது இன்று கூட என் மனத்தை விட்டகலவில்லை. இப்போது உனது நட்பை நினைத்துப் பெருமைப்படுகிறேன். காரணம் இந்தச் சமுதாயத்தில் நல்ல மனிதனாய் உத்தமனாய் தலை நிமிர்ந்து நடப்பதென்றால் அது உன்னால்தான். பள்ளியில் கேடியாய், உதவாக்கரையாக வாழ்ந்த நான் அப்போது நீ கூறிய புத்திமதிகளை ஏளனம் செய்தேன்.

படிப்பில் வல்லவன்; குணத்தில் நல்லவன் என்றெல்லாம் உன்னை எல்லோரும் போற்றும் போது நான் மட்டும் உன்னை

www.tamilarangam.net



ஏளனம் செய்து வீண்பழிகளைச் சுமத்தினேன். ஆனால் நீ என்னோடு கோபப்படாமல் எனக்கு அறிவுரை கூறினாய். காரணம் உன் செயல் ஒவ்வொன்றிலும் உன் தாய் துணை நின்றாள். உன் வெற்றிக்குப் பின் தாய்தான் காரணமாக நின்றபோது கூட நான் உன் தாயையும் கேவலமாகப் பேசினேன். அன்று அன்பு, பாசம், நட்பு என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளும் சக்தி எனக்கு இருக்கவில்லை. மாறாக அடி. உதை, குத்து, வெட்டு, மட்டும்தான் தெரியும். அவற்றின் விளைவைப் பின்னால்தான் உணர்ந்து கொண்டேன். அன்று நீ கூறியபடி நடந்திருந்தால் இன்று நானும் உன்னைப் போல் ஒரு பட்டதாரி ஆகியிருக்கலாம்.

கண்கெட்ட பின்பு சூரியநமஸ்காரம் எதற்கு என்பதைப் போன்றது தான் என்கதை. ஆனாலும் அன்று கூறிய புத்திமதிகள் இன்று என்னை மனிதனாக்கின. அந்த வகையில் நீ என் நண்பனல்ல. தெய்வம். கடவுளைவிட நீ உயர்ந்து விட்டாய். என்னை மனிதனாக்கியது நீதான். அப்போது சத்தியாவிற்கு தன்னைப்பெற்றவளின் நினைவு ஓடி வந்தது. என்னைப் புகழாதே. என்னை வழிநடத்தும் என் தாயைப் புகழ். என் தாய் இல்லை என்றால் நானும் உன்னைப் போன்று கெட்டவனாகத்தான் இருந்திருப்பேன். மாதா, பிதா, குரு தெய்வம் என்று சின்னவயதில் ஆசிரியர் கற்பிக்கும் போது அதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. ஆனால் இன்றுதான் உன்மூலமாக உணர்ந்து கொள்கிறேன். இந்த உலகத்தில் முதன்மையானவள்தான் என்பதை நீ நிரூபித்து விட்டாய்.

சிலவேளைகளில் நான் பொறாமைப்பட்டுக்கொள்வேன். உன்னைப் போன்று எனக்கொரு தாய் கிடைக்கவில்லையே என்று. உன் தாயை நான் பார்க்க வேண்டும். அந்த மனித தெய்வத்தை நேரில் வாழ்த்த வேண்டும். விரைவில் உன்னிடம் வருகிறேன் என எழுதி முடித்திருந்தான். கடிதத்தைப் படித்து முடித்தவனின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிற்று. தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாயைப்பற்றி எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் இதயத் துடிப்புடன் எதிரொலித்தன.

சிவந்துபோன கண்களுடன் நிமிர்ந்து பார்க்கிறான். குங்குமம், தலைநிறையப்பூ, சிரித்தமுகத்துடன் மாலையுடன் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படத்தில் சுமங்கலியாகக் காட்சியளிக்கிறாள் அவன் தாய். ஆமாம் உண்மையிலேயே அவனின் தாய் தெய்வமாகிவிட்டாள். சிவந்த கண்களுடன் என் அம்மா எங்கே? என்று எழுந்தவன் நாலாபக்கவும் தேடிவிட்டு உணர்ச்சியற்றவனாய் மீண்டும் ஒற்றைக் கதிரையில் சாய்ந்து கொள்கிறான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியரைப்பற்றி.........

ஈழத்தின் வடபுல தென்மராச்சிப்பிரிவிலுள்ள நாவற்குழி - கிழக்கின் வேலம்பராய் என்னும் சிறுகிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் , மிக இளம் வயதிலேயே எழுத்துத்துறைக்கு அறிமுகமானவர். யாழ்ப்பாணத்தில் ஈழநாடுபத்திரிகை நிருபராகக்கடமை புரிந்துள்ளார். 1984ல் புலம் பெயர்ந்து ஜேர்மனியில் காலூன்றி வசித்து வரும் இவருக்கு மூன்று பிள்ளைகள். ஜேர்மனியில் வெளிவந்த பல கலை இலக்கியச் சஞ்சிகைகளில் எழுதிவந்த இவர் 1990ம் ஆண்டு தொடக்கம் "மண்" என்னும் கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகக் கடமை புரிந்து கொண்டிருக்கிறார். அத்துடன் ஐரோப்பா கனடா நாடுகளில் வெளிவரும் பல பத்திரிகைகளில் இவர் எழுதிவருகிறார்.

ஐரோப்பிய வானொலிகளில் (TRT, IBC, TBC). இவரின் ஆக்கங்கள் அவ்வப்போது இடம் பெற்றுவருகின்றது. இவர் தனது எழுத்துப்பணியுடன் நின்றுவிடாமல் தாயகத்திலுள்ள அநாதைப்பிள்ளைகள், அங்கவீனர்கள், அகதிகளுக்கு உதவும் சமூகப்பணியை தமது "மண்" சஞ்சிகையின் வாசகர்களின் ஊடாக உதவிவரும் மகத்தான பணியை மேற்கொண்டுவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜேர்மனி

1-4-2001

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்